அறைவு 03 இயம் 51 July 18-24, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 24 விலை : 30.00

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

**03 ஆண்டு நிறைவு**

## தமிழ் மக்களிற்கான தீர்வு ஐக்கிய இலங்கைக்குள் தனித் தமிழ்த் தேசம் எனில்



# மாற்றத்திற்கு வாக்களியுங்கள்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதம வேட்பாளர் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் வேண்டுகோள்

**மா**ற்றத்திற்காக அணிதிரளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதம வேட்பாளர் இரா. ஸ்ரீஞானேஸ்வரன் திருகோணமலை வாழ் தமிழ் மக்கள் அனைவரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை (13) வேட்புமனுக்கள் மற்றும் தேர்தல் காலங்களில் அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பிய வேளையிலேயே இக்கருத்தை வெளியிட்டார். மாவட்டச் செயலாளரும் தெரிவத்தாட்சி அதிகாரியுமான திரு.என் புஸ்பகுமார தலைமையில் திருகோணமலையில் போட்டியிடும் அரசியற் கட்சிகளுக்கும் சுயேட்சைக் குழுக்களுக்குமான அறிவுறுத்தல் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கலந்துகொண்டு விட்டுத் திரும்பிய போதே இரா. ஸ்ரீஞானேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

“இந்தியாவும், மேற்குலகும் தமக்கு ஆதரவான அரசை நிறுவியுள்ளன. இந்த நிலையில் தமக்கு ஆதரவான அந்த அரசிற்கு நெருக்கடிநிலை ஏற்படக் கூடாது என்பதற்காக இலங்கையில் கடந்த பல தசாப்தங்களாக நடைபெற்ற இனமோதலை உருவாக்கிய அடிப்படைக் காரணங்களைத் தீர்க்கக்கூடிய எந்தவொரு கடினமான சூழலையும் உருவாக்க இந்தியாவோ அல்லது மேற்குலகோ விரும்பப் போவதில்லை. இதனால் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழர்கள் எவ்வித பிரச்சனைகளும் இன்றி வாழ்வதாக வெளிக்காட்ட வேண்டிய தேவை 21

## “நியமனங்கள் விற்கப்பட்டன!”

### சுகாதாரத் தொண்டர்கள் சீற்றம்



**த**ங்களுக்கு உரித்தான நியமனங்களை அரசியல் வாதிகள் பணத்திற்கு விற்றுவிட்டனர் எனத்தாம் அறிந்திருப்பதாக தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்துள்ளனர்.

“நாங்கள் தேர்தல் தினத்தன்றும் கிழக்கு மாகாண சபையின் வாசலிலேயே இருப்போம். எமது பெற்றோர் உறவினர்கள் எல்லோருமே அன்றைய தினத்தில் வீட்டிலேயே இருப்பார்கள். எமது நண்பர்களும் அவ்வாறே செய்வதாக வாக்குறுதியளித்துள்ளார்கள். எமக்கு நீதி கிடைத்தால் மட்டுமே நாம் எல்லோரும் வாக்களிப்போம். அவ்வாறு இல்லாவிடில் வாக்களிப்பைப் பகிஸ்கரிப்போம் என சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் தமது கருத்தை மலைமுரசின் முன்னாள் பிரதம ஆசிரியரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்டப் பிரதம வேட்பாளருமான.... இரா.ஸ்ரீஞானேஸ்வரனிடம்.... 21

## பிரபல பாடசாலைகளில் போதைமருந்து....



**தி**ருகோணமலையிலுள்ள பிரபல ஆண்கள் பாடசாலையொன்றில் மாணவர்கள் கஞ்சா போதைப் பொருளைப் பாவித்த தகவல் வெளியானதை அடுத்து திருகோணமலை நகரப் பாடசாலை மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனை தொடர்பான அச்சம் எழுந்துள்ளது.

கஞ்சா போதைப்பொருளைப் புகைப்பிடித்த மாணவர்களே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

விடயம் குற்றப்புலனாய்வுத் துறைக்குக் கையளிக்கப் பட்டுள்ள நிலையில்.... 21



கட்டண விளம்பரம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சி!!

உலக வரலாறுகளில் ஒரு இனத்தினது தேசியத்தின் வளர்ச்சி என்பது அந்த இனம் வாழ்கின்ற தேசத்தினை அடிப்படையாகக் கொண்டே எழுந்திருப்பதை நாம் காண முடிகின்றது.

தேசமொன்றே தேசியத்தின் அடிப்படை என்பதைப் புரிந்துகொள்பவர்கள் தமது நகர்வுகளை அந்தத் தேசம் நோக்கிச் செலுத்துவதை இலங்கையின் வரலாறு எமக்குப் புரிய வைத்தள்ளது.

தமிழ்த் தேசிய எழுச்சியைச் சிதைக்க வேண்டிய தேவையுள்ளவர்கள் முதன்முதலில் தமிழ்த் தேசத்தினைத் துண்டாடத் தொடங்கியது கல்லோயா குடியேற்றங்களில் இருந்து ஆரம்பமானது. இக்குடியேற்றங்களின் அடிப்படைத் தார்ப்பரியங்களில் அன்றைய தலைமைகள் கவனம் செலுத்தத் தொடங்கியதுடன் குடியேற்றங்களை எதிர்க்கும் வலுவான நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தொடங்கினர்.

வலுப்பெற்ற அந்தப் போராட்டங்களின் திசையைத் திருப்புவதற்காக மற்றொரு அழுத்தத்தினை தமிழ் இனத்தின் மீது தரப்படுத்தல் என்ற வகையில் பேரினவாதம் செலுத்தியபோது நிலப் போராட்டம் இரு முகப்பட்டு நிலம், கல்வி என முதற் பிரிவைச் சந்தித்தது. அழுத்தங்களின் வடிவங்கள் மாற்றமடைய அடைய இரு முகப்பட்ட போராட்டங்கள் பன்முகப்பட்டுத் தெறித்த போதே தமிழ்த் தேசியத்தின் இருப்பிற்கான அடிப்படை தேசம் என்பதுதான் என திடமாக தமிழினத்தால் புரிந்துகொள்ளப்பட்டது.

அதனடிப்படையிலேயே திம்புக் கோட்பாடானது உருவானது. அக் கோட்பாட்டின் அடிப்படையே தமிழர்களுக்கென தாயகமொன்று உள்ளதென்பதே!

தமிழர் தாயகம் என்பது அங்கீகரிக்கப்படுமானால் அதனைச் சார்ந்து தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சி தனது பாதையில் பயணிக்கத் தொடங்கிவிடும்.

அங்கீகரிக்கப்பட்ட தமிழ்த் தேசத்தினை உலக வரைபடத்தில் நிலையாகப் பதிந்துகொள்ள எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுமே தமிழ்த் தேசிய வளர்ச்சி என நாம் மிகச் சுருக்கமாக விளங்கிக்கொள்ளலாம்.

அறிவியல்த்துறைக் கண்டுபிடிப்புக்களாகட்டும் புதிய கருத்துருவாக்கங்களாகட்டும் விளையாட்டு துறையின் மேம்பாடுகள் ஆகட்டும் இவை ஒவ்வொன்றுமே தமிழ்த் தேசிய வளர்சியினையே பதிவு செய்கின்றன.

தமிழ்த் தேசமொன்றின் அங்கீகாரமே தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சிக்கான அடிப்படையாக இருக்கின்ற நிலையில் அவ்வங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள அனைத்து வலுவையும் ஒன்றிணைக்க வேண்டிய தலையாய கடப்பாடு தமிழர்களுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் உண்டு.

தனித் தேசத்தின் ஒரு உயரிய நிலையே தனியொரு நாடு என்ற நிலையாகும். ஐக்கிய இராச்சியத்திலுள்ள நான்கு தேசங்களுள் ஒன்றான ஸ்கொட்லாந்து தேசம் தனியொரு நாடாகப் பிரிந்து செல்ல வேண்டுமா? இல்லையா? என்பதை கண்டறிவதற்காக ஸ்கொட்லாந்து மக்களுக்கிடையில் அண்மையில் வாக்கெடுப்பு நிகழ்த்தப்பட்டதனை மேற்சொன்ன கருதுகோளுக்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

மிக உச்ச சனநாயகப் பாரம்பரியத்தைக் கொண்ட ஐக்கிய ராச்சியத்தில் தேசங்களை அங்கீகரிப்பதும் அவை பிரிந்து போவதா? இல்லையா? என்பதை அறிந்துகொள்ள வாக்கெடுப்பு நிகழ்வதும் சாத்தியம். ஆனால் இலங்கையில் இது சாத்தியப்படுமா? என்ற வினாவிற்கான விடையாக ஸ்கொட்லாந்து தேசமும் ஒரு காலத்தில் விடுதலைக்காகப் போராடிய தேசமே என்பதையும் அப் போராட்டத்தில் இராணியின் படைகளை எதிர்த்து நிகழ்ந்த போரில் இரு தரப்பிலும் பலர் மரணித்தனர் என்பதும் வரலாறு என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

எனவே தேசங்கள் உருவாகுவதற்கான அடிப்படைகளில் ஒன்றான ஆயுதப் போர் நிறைவுற்றுள்ள நிலையில் தேசத்தை உருவாக்குவதற்கான அரசியல் முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டால் மட்டுமெ தமிழத் தேசியத்தின் வளர்ச்சி என்பது சாத்தியப்படும்.

புரிந்து கொள்வோமா?

## நோர்வே தமிழர் அவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஆதரவு

நோர்வேயில் இயங்கும் "நோர்வே ஈழத்தமிழர் அவை'' எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்க தமது முழுமையான ஆதரவைத் தெரிவித்திருப்பதுடன் ஈழத் தமிழர்கள் அனைவரும் தமிழத் தேசிய மக்கள் முன்னணிக்குத் தமது வாக்குகளை வழங்குவதன் ஊடாக சூனியமாகிப் போயுள்ள தமிழரின் அரசியல் வெற்றிடத்தை இட்டு நிரப்பத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு வாக்களிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் விடுத்துள்ளது.

அவ்வவையால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் "பேரினவாத எண்ணங்களின் பிரதிபலிப்பான சிறிலங்கா அரசியலமைப்பை தமிழர்களாகிய நாம் என்றும் ஏற்றுக்கொண்டதில்லை. இருந்தபோதிலும் தமிழர்களாகிய எமக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை சரியான நபர்கள் மூலம் இட்டுநிரப்ப வேண்டியது அவசியமாகும். உலகம் ஏற்றுக்கொண்ட சனநாயக வழிமுறையில் தேர்வாகும் தமிழர் பிரதிநிதிகளின் செயற்பாடானது பலம்பெறவேண்டுமாயின் தகுதியான நபர்களின் தெரிவு இன்றியமையாதது. அந்தவகையில் உலகத் தமிழர்களின் அரசியல் முன்னெடுப்புகளில் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வரும் விடயங்களை உள்ளடக்கியதான தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு அதனடிப்படையில் பொதுத் தேர்தலை சந்திக்கவுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு எங்கள் தார்மீக ஆதரவினை வழங்குகின்றோம். தமிழ்த் தேசிய இனத்தின் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை ஆகிய மூலாதாரக் கோரிக்கையின் அடிப்படையில் இரு தேசம் ஒரு நாடு என்பதே நிரந்தரத் தீர்வாக அமையும். தமிழர்கள் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் இனப்படுகொலை குறித்து சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும். சுதந்திர தமிழீழத்திற்கான பொதுவாக்கெடுப்பை நடத்தவேண்டும். ஈடு இணையற்ற தியாகங்களாலும் இழப்புக்களாலும் வலுப்பெற்றுள்ள தாயக விடுதலைக் கோரிக்கையை ஏற்று அதனடிப்படையில் நின்று அரசியல் தளத்தில் தளராது செயற்பட்டுவருகின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு எமது ஆதரவினை வழங்குவதாக முடிவெடுத்துள்ளோம். அன்பார்ந்த தமிழ் மக்களே! சுதந்திரம் பெற்ற காலம் முதல் தமிழர்களது தேர்தல் பங்கேற்பானது எதிர்ரெதிர் கருத்து, உணர்வு, இலட்சியம் கொண்ட இரண்டுதரப்பினர் இலங்கைத் தீவில் இருப்பதை வெளிப்படுத்துவதாகவே இருந்துவந்துள்ளது. பேரினவாத அரசின் இனவெறியாட்டத்தில் இருந்து எமது மக்களையும் மண்ணையும் பாதுகாக்கும் வகையில் அறவழியிலும், ஆயுதவழியிலும், அரசியல்வழியிலும் முன்னெடுக்கப்பட்டு வரும் எமது விடுதலைப் போராட்டத்திற்கு அந்தந்த காலகட்டங்களில் ஆதரவாக இருந்து பெரும் பலமாக விளங்கியவர்கள் நீங்கள்.வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகப்பகுதியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வதன் மூலமே எமது அரசியல் அபிலாசைகளுக்கு வலிமைசேர்க்க முடியும் என்று உறுதியாக நம்புகின்றோம்.

அந்தவகையில் தாயகத்தில் சூனியமாகிப்போன அரசியல் தலைமைத்துவத்தை சரி செய்வதற்கான வேள்வியாக இப்பொழுது தேர்தல் களத்தை நீங்கள் பயன்படுத்தி எம் இனத்தின் அபிலாசைகளை முதன்மைக் கோரிக்கையாக முன்வைத்து சமரசமின்றி போராடிவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் வெற்றியை உறுதிப்படுத்துமாறு உங்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

## கஞ்சா சந்தேக நபர் விளக்கமறியலில்

திருகோணமலையின் ஐந்தாவது மைல்கல் காட்டுப்பகுதியானது திட்டமிட்டமுறையில் அழிக்கப்படுவதாகச் சந்தேகம் எழுந்துள்ளது.

கடந்த 15ம் திகதி இக்காட்டுப் பகுதிக்குள் திடீரெனப் பரவிய நெருப்பால் பல ஏக்கர் விஸ்தீரணமுள்ள காட்டுப்பகுதி தீயினால் முற்றாகக் கருக்கப் - பட்டுள்ளது. இந்த நிலையில் சுமார் 20 ஏக்கர் காடுகளே தீயில் அழிந்திருப்பதாக பருமட்டான மதிப்பீடுகள் தெரிவித்துள்ளன. குடியேற்றங்களை நிறுவும் நோக்குடன் காட்டுப்பகுதி அழிக்கப்படுகின்றதா என எழுந்துள்ள

## சுருக்குவலைக்கு அனுமதி?

நோன்புப் பெருநாளை முன்னிட்டு சில மீனவர்களுக்கு மீன்பிடி நடவடிக்கைக்காக சுருக்குவலை பாவிப்பதற்கான விசேட அனுமதி - யொன்று வழங்கப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்திகளை அடுத்து மீனவர்கள் கடும் விசனமடைந்-துள்ளனர்.

நோன்புப் பெருநாளை முன்னிட்டு குறித்த சில மீனவர்களின் வருமானத்தை உயர்த்திக்கொள்ளும் நோக்கில் சுருக்கு வலையினைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதற்கான பிரத்தியேக அனுமதி வழங்கப்-பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவ்வாறு மீன்பிடி நடவடிக்கையொன்று நடைபெற்றதாக கரைவலை வீசும் மீனவர்கள் சிலர் மலைமுரசிற்குத் தெரிவித்தனர். எனினும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த போது அவ்வாறு விசேட அனுமதியெதுவும் வழங்கப்படவில்லை என்பது தெரிய வந்துள்ளதுடன் மீன் பிடி நடவடிக்கைகளுக்கு சுருக்குவலை பயன்படுத்தப்படுவது தடை செய்யப் பட்டிருப்பதாகவே தெரிவிக்கப்-பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



சந்தேகங்களை அடுத்து இவ்வாறு அழிக்கப்பட்டுள்ள காடுகள் தொடர்பாகப் பலரின் கவனம் திருப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்-தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
மட்டக்களப்புச் செய்திகள்

## இரகசிய கா.துறையினரால் விசாரணை

### மறுக்கும் - பூ.பிரசாந்தன்



தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு இரகசிய பொலிஸ் பிரிவுக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்தி முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என அக்கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் தற்போது கொழும்பு, இரகசிய பொலிஸ் தலைமை அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டு மட்டக்களப்பின் கத்தோலிக்க ஆலயமொன்றின் முன்பாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலான விசாரணை நிமிர்த்தமே அவர் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார் என வெளியான செய்தி தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## உல்லாச பிரயாண தகவல் நிலையம்

கிழக்கு பல்கலைக்கழகத்தின் அதிகாரம் மிக்க அதிகாரிக்கு எதிராக வெளியிடப்பட்டுவரும் அநாமதேய துண்டுப்பிரசுர நடவடிக்கையை கண்டித்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினால் கடந்த புதன்கிழமை கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

கடந்த புதன்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு முன்பாக ஒன்றுதிரண்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பல்வேறு சுலோகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு விரிவுரையாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் துண்டுப்பிரசுரங்களும் விநியோகம் செய்தனர்.

## கிணற்றில் விழுந்து 5வயது சிறுவன் மரணம்



மட்டக்களப்பு, திருப்பெருந்துறை பகுதியில் கடந்த வியாழக்கிழமை ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் கிணற்றினுள் தவறி விழுந்து மரணமடைந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

கண்ணகியம்மன் கோவில் வீதியில் அமைந்துள்ள வீட்டு வளவில் குளிப்பதற்காக சென்றபோது, மு.பிரசாந்தன் என்ற இந்தச் சிறுவன் தவறி விழுந்துள்ளான். இந்நிலையில், சிறுவனை மீட்டெடுத்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவந்ததாகவும் இருப்பினும், இந்த சிறுவன் வழியிலேயே மரணமடைந்திருந்ததாகவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பிறந்து ஒரே நாளான சிசு கொலை

பிறந்து ஒரே நாளேயான சிசுவொன்று புதைக்கப்பட்ட சம்பவம் ஏறாவூர் கோரகல்லிமடு கிராமத்தில் இடம்பெற்றதாக ஏறாவூர் காவல்துறையினர் தெரிவித்தனர். இக்கிராமத்தை சேர்ந்த 25 வயதான பெண்ணொருவர் தனக்கு வயிற்றுவலியும் இரத்தப்போக்கும் இருப்பதாகக் கூறி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை-யில் சிகிச்சைக்கு சென்றுள்ளார். அங்கு வைத்தியப் பரிசோதனை மேற்கொண்ட-போது, இவர் சிசுவொன்றை பிரசவித்து-ள்ளமை தெரியவந்துள்ளது. இந்த நிலையில், இவரிடம் விசாரித்தபோது தான் பிரசவித்த சிசுவை நிலத்தில் புதைத்துள்ளமை தெரியவந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை துணிகளினால் சுற்றி உரப்பையில் இட்டு புதைக்கப்பட்ட சிசுவின் சடலத்தை மீட்டுள்ளனர்.

தாய் கைதுசெய்யப்பட்ட நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்திய-சாலையில் சிகிச்சை பெறுகின்றார்.



## தனுஷின் "மாரி"க்கு எதிர்ப்பு

புதிதாக வெளிவந்திருக்கும் தனுசின் "மாரி" திரைப்படத்தில் அதிகளவான சிகரட் பிடிக்கும் காட்சிகள் புகுத்தப்பட்டுள்ளதற்கு எதிர்ப்பு தெரிவித்து மட்டக்களப்பில் இளைஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன் தனுசின் படத்துக்கு செருப்பு மாலையும் அணிவித்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

சமூகத்துக்கான நண்பர்கள் அமைப்பு மற்றும் மண்முனை வடக்கு பிரதேச இளைஞர் கழகங்கள் இணைந்து இந்த போராட்டத்தினை நடாத்தினர். மட்டக்களப்பு மணிக்கூண்டு கோபுரத்துக்கு அருகிலேயே இவ் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## 4 அடி நீள முதலை

மட்டக்களப்பு, ஏறாவூர் எல்லை நகரில் கடந்த வியாழக்கிழமை இரவு நுழைந்த சுமார் 4 அடி நீளமுள்ள முதலையை மக்கள் பிடித்து கட்டிவைத்த பின்னர் ஏறாவூர் காவல்துறையினருக்கு அறிவித்துள்ளனர். இந்த முதலையை வனவிலங்குகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## சதங்கை அணி விழா

மனித ஆளுமைகளை உருவாக்கும் செயல் தன்மை கொண்டதாக சமூகங்களில் பாரம்பரிய கூத்துக்கள் செயற்படுகின்றன. கூத்துக்களை நிகழ்த்துதலை செய்து கற்கும் செயற்பாட்டிற்குரிய கற்கையாக உள்ளடக்கப்பட்டு நுண்கலைத்துறையில் பல நிகழ்த்துதல்கள். கொண்டாட்டங்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. கடந்த வியாழக்கிழமை மாலை தம்பிமுத்து அண்ணாவியார் தலைமையில் கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் அலங்கார ரூபன் கூத்தின் சதங்கை அணிவிழா நுண்கலைத்துறை விரிவுரையாளர், மாணவர்களால் நிகழ்த்தப்பட்டது.

## பெருநாளை முன்னிட்டு சுத்தப்படுத்தும் செயற்பாடு

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கடற்கரைப் பிரதேசங்களை சுத்தப்படுத்துவதற்கு மாநகர சபை, கடந்த வியாழக்கிழமை (16.07.2015) தீர்மானித்துள்ளது. கல்முனை யானைப்பந்தி கோயில் வீதி உட்பட சில வீதிகளில் தினமும் குவிக்கப்படுகின்ற திண்மக் கழிவுகளை தினசரி கிரமமாக அகற்றுவதற்கும் இதன்போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர் தலைமையில் நடைபெற்ற மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு உத்தியோகஸ்தர்களுடனான கலந்துரை-யாடலின் போதே இத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.



பெருநாள் தினத்தில் பொழுதுபோக்குகளுக்காக கடற்கரைப் பிரதேசங்களில் பொதுமக்கள் கூடுவதைக் கருத்திற்கொண்டே அப் பகுதிகளை சுத்தப்படுத்து-வதற்கு தீர்மானம் மேற்கொண்டமை குறிப்பி-டத்தக்கது.

## நோயாளியை ஏற்றிச் சென்ற அம்புலன்ஸ் விபத்து

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இருந்து கொழும்பு தேசிய வைத்திய-சாலைக்கு நோயாளியை ஏற்றிச்சென்ற அம்பியுலன்ஸ் வண்டி குருணாகல் பகுதியில் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்து ள்ளனர்.

இன்று அதிகாலை குருணாகல் நகரில் இருந்து 12 கிலோமீற்றர் தூரத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விபத்தின் போது மட்டக்களப்பு போதனா வைத்திய-சாலையின் ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்த நிலையில் குருணாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக குருணாகல் காவல்துறையினர் தெரிவித்தனர்.




## விதிமுறைகளை மீறிய சுவரொட்டிகள் அகற்றப்படும்

தேர்தல் விதிமுறைகளை மீறிய வகையில் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டிகளை அகற்றும் பணிகளை தேர்தல் திணைக்களமும் காவல்துறையினரும் இணைந்து மேற்கொண்டுவருகின்றனர். தேர்தல் விதிமுறைகளுக்கு மாறாக சுவரொட்டிகளை ஒட்டுபவர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுக்கப்படும் என பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளபோதிலும் மட்டக்களப்பு நகரில் உள்ள தலைமையக காவல் நிலையத்துக்கு அருகிலும் இவ்வாறு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதை காணமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் பாதுகாப்பு

## மீறுகிறது அடிப்படை மனித உரிமை

நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பை குறைத்து உத்தரவிடுமாறு கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்று நேற்று வெள்ளிக்கிழமை (17.07.2015) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நவ சமசமாஜக் கட்சி சார்பில் தேசியப் பட்டியலில் பெயர் குறிப்பிட்டுள்ள சட்டத்தரணி சேனக பெரேராவே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். பொதுத் தேர்தல் வேட்பாளர் மஹிந்த ராஜபக்வுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட வரப்பிரசாதத்தினால் ஏனைய வேட்பாளர்கள் பாதிப்பை எதிர்கொள்வதாகவும் அரசியல் யாப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறப்படுவதாகவும் தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) வேட்பாளர் சுனில் வட்டகலவும் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.



# மலைமுரசு
MALAIMURASU
# தேசிய செய்திகள்

## புலனாய்வுத் துறையினர் கொலை
## 7 வருடங்களின் பின்னர் தீர்ப்பு

சித்தாண்டி இராணுவ முகாம் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் மீது கவனயீனமாகவும் அசட்டுத் துணிச்சலுடனும் உழவு இயந்திரத்தை (டிரக்டர்) மோதி ஸ்தலத்திலேயே மரணத்தை ஏற்படுத்திய நபர் ஒருவருக்கு இரு குற்றச்சாட்டுகளின் பேரில் தலா ஐந்து வருட கடூழிய சிறைத்தண்டனையும் தலா 20 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ தினமான 2008ஆம் ஆண்டு 4 ஆம் திகதி சித்தாண்டி இராணுவ முகாம் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே அவர்களுடன் மோதியுள்ளார். மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்த போதும் எதிரியான வேலப்பு சத்திய சீலன் மன்றுக்கு சமூகமளிக்காது தலைமறைவாக இருந்து வருகின்றார்.

அவர் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கப்பால் நிருபிக்கப்பட்டதால் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

## குறைக்கப்பட்டது
## அகதிகள் உதவித் தொகை

பிரித்தானியாவில் அகதி அந்தஸ்து கோரும் வெளிநாட்டவர்களுக்கான சலுகைப்பணம் குறைக்கப்படவுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது. இது தொடர்பான தகவலை பிரித்தானிய உள்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இரண்டு பிள்ளைகளைக் கொண்ட அகதி குடும்பம் ஒன்றின் பெற்றோருக்கு இதுவரையில் 149.86 பவுண்கள் வழங்கப்பட்டு வந்தது. எனினும் இனிவரும் காலங்களில் 110.85 பவுண்களாக குறைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்கு அகதிகள் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.



## மக்களிடமே முடிவு

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரவேற்ற புதிய அரசாங்கம் இதுவரையில் தமிழ் மக்களுக்கு எந்த பயனையும் தரவில்லை. மாறாக தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டு துரத்தப்பட்ட மகிந்தவை மீண்டும் ஆட்சி பீடத்தில் ஏற்றவே முனைகின்றது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த இக்கட்டான நிலை தொடர்பில் தமிழ் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டிய நிலையில் உள்ளனர் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## புலனாய்வினர் விசாரணை

பொதுத் தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னனி சார்பாக வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடும் மன்னார் மாவட்டத்தில் போட்டியிடும் பெற்றிக்ஸ் ஜெனன் மற்றும் விக்னேஷ்வரன் ஆகிய வேட்பாளர்கள் இருவரை புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்துள்ளனர். குறித்த இரண்டு வேட்பாளர்களினதும் வீடுகளுக்கு புலனாய்வுப் பிரிவு என தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு சிவில் உடையுடன் சென்றவர்கள் அவர்களின் விபரங்களை பெற்றுக் கொண்டுச் சென்றுள்ளனர்.

## சில சட்டங்களின் கீழ் வழக்குத் தாக்கல் இனி இல்லை

அவன்காட் நிறுவனத்திற்கு எதிராக துப்பாக்கிச் சட்டம், வெடிபொருட்கள் சட்டம் அல்லது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட மாட்டாது என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் நேற்று அறிவித்துள்ளது. காலி துறைமுகத்தில் உள்ள மிதக்கும் ஆயுத களஞ்சியம் தொடர்பான வழக்கு காலி நீதவான் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்-கொள்ளப்பட்ட போதே அந்த நிறுவனம் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் அறிவித்தனர். இதேவேளை, காலி துறைமுகத்திலுள்ள கப்பல் ஒன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள அவன்காட் நிறுவனத்திற்கு சொந்தமான ஆயுதங்களை வேறொரு கப்பலுக்கு மாற்றவும் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

## 17,000 பேர் வரை டெங்கினால் பாதிப்பு

*2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜுலை 16 வரை டெங்கு காய்ச்சலினால் 17,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் (5017) இனங்காணப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 1271 பேரும் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

## லிற்றோ கேஸிற்கெதிராக வழக்கு

எரிவாயு வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு லிற்றோ நிறுவனத்துக்கு தடை விதிக்குமாறு கோரி, பொதுமகன் ஒருவரால் கொழும்பு உயர் நீதிமன்றத்தில், கடந்த வியாழக்கிழமை அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஒரு மெட்ரிக்தொன் எரிவாயுவை 90 அமெரிக்க டொலர் செலவில் எடுத்து வர முடியும் போது, இந்த நிறுவனங்கள் மெட்ரிக்தொன்னுக்கு 116 அமெரிக்க டொலர்களை செலவளிக்கின்றன. மக்களின் பணம் இவ்வாறு தேவையில்லாத வகையில் செலவளிக்கப்படுவதாக மனுதாரர் கூறியுள்ளார்.

## முகப்புத்தகங்களினூடு
## தேர்தல் புகார்

நாடளுமன்றத் தேர்தலில் இடம்பெறும் வன்முறைகள் குறித்து தேர்தல் ஆணையாளருக்கு உடனடியாக அறிவிக்கும் விதத்தில் "ஆணையாளருக்கு கூறுங்கள்" எனும் பெயரில் முகப்புத்தகக் கணக்கு (Facebook Account) ஆரம்பிக்கப்-பட்டுள்ளது. முகப்புத்தகத்தின் மூலம் செய்திகள் வேகமாகப் பரவுகின்றமையும், அதன் தாக்கம் அதிகரித்து இருப்பதனாலுமே "ஆணையாளருக்குக் கூறுங்கள்" என்ற முகப்புத்தகப் பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தேர்தல் வன்முறைகளை இலகுவாகவும் விரைவாகவும் கட்டுப்படுத்தலாம் என்று தேர்தல்கள் திணைக்களம் நம்புகிறது.

facebook

## இரு பெண்கள் கைது

கல்கிசை மற்றும் கொம்பனித்தெரு ஆகிய பகுதிகளில் காவல்துறையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களில் ஹெரொய்ன் வைத்திருந்த இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கல்கிசையில் 41 வயதான பெண்ணும், கொழும்பு கொம்பனிதெருவில் முன்னெடுக்கப்பட்ட மற்றுமொரு சுற்றிவளைப்பில் ஹெரொய்ன் வைத்திருந்த 35 வயதான பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### ஐ.ம.சுகூ இன் பேர்ணிரத்து

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஒருவரும் அவரது ஆதரவாளரும் சென்ற வாகனத் தொடரணியை தடுத்து நிறுத்தியதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். கொழும்பு, அவிசாவளை வீதியில் ஹங்வெல்லயில் இருந்து வந்த அந்த பேரணியை [illegible] நிறுத்தி வைத்து கலைத்ததாக [illegible] தெரியவருகின்றது.

## முதலமைச்சர் - ஹியுகோ ஸ்வயர் சந்திப்பு

லண்டனுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சரும் பொது நலவாய அலுவலக இராஜாங்க அமைச்சருமான ஹியுகோ ஸ்வயரை சந்தித்துள்ளார்.

வடமாகாணத்தில் ஏற்பட்டுள்ள சவால்கள், மக்களின் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது பேசப்பட்டுள்ளதாக ஹியுகோ ஸ்வயர் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கையில் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் தற்போதைய நிலவரங்கள் தொடர்பில் வடமாகாண முதலமைச்சரிடம் அவர் கேட்டறிந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புப் பார்வை

# ஜேர்மன் உதைப்பந்தாட்ட அணியும் தமிழ் தேசிய கூட்டமைப்பும்

-- பா.நிர்மானுசன் --
( www.pathivu.com)

சரியாக ஒரு வருடத்திற்கு முன்னர் இருபதாவது உலக கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனாவுக்கு எதிராக ஜேர்மனி மோதியது. ஜேர்மன் அணியின் முன்கள வீரர்கள் ஆர்ஜென்ரீனாவின் தடுப்புகளை தகர்த்துக் கொண்டு முன்நகர முயற்சிக்க, ஜேர்மன் அணியின் பின்கள வீரர்கள் ஆர்ஜென்ரீனாவின் முன்கள வீரர்களின் ஊடுருவல்களை தடுக்கும் முயற்சியில் தடுப்பு உத்திகளை அமைத்திருந்தார்கள்.

இதன் ஒரு அங்கமாக, ஆர்ஜென்ரீனாவின் நட்சத்திர வீரரும் கோல்களை போடக்கூடியவர் எனவும் எதிர்பார்க்கப்பட்ட லயனல் மெசியை ஒரு கட்டத்தில் ஜேர்மன் அணியின் மூன்று வீரர்கள் முற்றுகையிட்டிருந்தனர். அதேவேளை, ஜேர்மன் அணியின் ஏனைய வீரர்கள் ஆர்ஜென்ரீனா அணியின் ஏனைய வீரர்கள் இடைவெளிகளை பயன்படுத்தாத வண்ணம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்டத்தில் நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளர்களின் விபரத்தை பார்த்த போது, கடந்த வருடம் இடம்பெற்ற உலக கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டி நினைவுக்கு வந்தது. ஏனெனில், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.ஏ.சுமந்திரன் அவர்களும் வடமராட்சி-யை மையப்படுத்தியே தேர்தலில் குதித்துள்ளனர் என பேசப்படுகிறது.

தமிழர்கள் ஒரு தேசம் என்ற நிலைப்பாட்டைக் கொண்ட கஜேந்திரகுமாருக்கும், தமிழர்கள் ஒரு சிறுபான்மையினம் என்ற நிலைப்பாட்டைக் கொண்ட எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான போட்டி பரபரப்பாகவும் பரவலாகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழர்கள் ஒரு தேசம் என்ற நிலைப்பாட்டைக் கொண்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களுக்கும் தமிழர்கள் ஒரு சிறுபான்மையினம் என்ற நிலைப்பாட்டைக் கொண்ட எம்.ஏ.சுமந்திரன் அவர்களுக்கும் இடையே பரபரப்பான போட்டி**



இந்த நிலையிலேயே, வடமராட்சியை சேர்ந்த மூவரை யாழ் தேர்தல் மாவட்டத்தில் வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளது கூட்டமைப்பு. இதனூடாக கஜேந்திரகுமார் மும்முனை சுற்றிவளைப்பை எதிர்கொண்டுள்ளார். அத்துடன், வடமராட்சியில் மூன்று கூட்டமைப்பு உறுப்பினர்கள் போட்டியிட்டாலும், வடமராட்சிப் பகுதியில் கூட்டமைப்புக்கு அளிக்கப்படும் விருப்பு வாக்கில் ஒன்று சுமந்திரனுக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற வகையில் கூட்டமைப்பு பிரச்சாரத்தில் ஈடுபடும் என்று எதிர்வுகூறப்படுகிறது. இது கடும் விமர்சனங்களை எதிர்கொண்டுள்ள சுமந்திரன் அவர்களை வெற்றி பெற வைப்பதற்கான ஒரு உத்தி என்று கருதப்படுகிறது.

ஆனால், ஆட்ட நடுவர்கள் நீதி தவறாது செயற்பட்டால், எந்த முற்றுகையையும் தகர்த்து கஜேந்திரகுமார் அவர்கள் ஒரு கோல் போடுவர் என்று யாழிலுள்ள நண்பர்கள் அடித்துச் சொல்கிறார்கள்.

கஜேந்திரகுமாரை முற்றுக்கைக்குட்படுத்தி சுமந்திரனை வெல்ல வைக்க முயற்சிக்கும் கூட்டமைப்பு, தீவகத்தை கைவிட்டு விட்டதா இல்லை டக்ளஸ் தேவானந்த வென்றாலும் பரவாயில்லை, கஜேந்திரகுமார் வெல்லக் கூடாது என்று செயற்படுகிறதா என்று ஊடக நண்பர் ஒருவர் கேட்கிறார். இது நியாயமான கேள்வியே. தமது வேட்பாளர் ஒருவர் வெல்ல வேண்டும் என்பதற்காக கூட்டமைப்பு வகுத்துள்ள உத்தியை விமர்சிக்கவில்லை. ஆனால், கஜேந்திரகுமார் வெல்லக்கூடாது என்பதற்காக தீவகத்தில் கோட்டைவிட்டுள்ள கூட்டமைப்பின் உத்தி விமர்சனத்திற்குரியது என்பதில் குறித்த ஊடக நண்பர் தெளிவாக உள்ளார்.

சுமார் இரு தசாப்தகாலமாக ஈ.பி.டி.பியின் இரும்புக் கோட்டை என வர்ணிக்கப்பட்ட தீவகத்தில், ஈ.பி.டி.பியை தோற்கடித்து ஒரு வரலாற்றை புரிந்த தீவக மக்களை கூட்டமைப்பு கைவிட்டு விட்டதென்று பிரான்சில் தீவக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சங்கம் ஒன்றில் அங்கம் வகிக்கும் செயற்பாட்டாளர் ஒருவர் தெரிவிக்கிறார்.

அதேவேளை, ஐக்கிய தேசிய கட்சிக்கு அதிகமாக வாக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கும் இடங்களிலும் கடுமையான போட்டிகளை ஏற்படுத்தக் கூடிய கூட்டமைப்பு வேட்பாளர்களை களமிறக்கவில்லை என்ற கரிசனையும் நிலவுகிறது. இது, ஐக்கிய தேசிய கட்சிக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சில முக்கியஸ்தர்களுக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் உண்டு என்று பரவும் செய்திகளை வலுப்படுத்துகிறது.

அது உண்மையென்றால், யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பியும் ஐக்கிய தேசிய கட்சியும் வென்றாலும் பரவாயில்லை, ஆனால், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி வெல்லக்கூடாது என்பதற்காய், கூட்டமைப்பு என்ன விலையும் கொடுக்க தயாராக இருக்கிறதா என்ற கேள்வி தவிர்க்க முடியாததாகிறது.

# 5 வருடங்களாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ன செய்தது?

## - மணிவண்ணன் விளக்கம் -

நாம் கடந்த 5 வருடங்களாக என்ன செய்தோம் என்று கேட்பவர்கள் உண்டு. தமிழர் தாயகத்தில் பல்வேறு பட்ட பிரச்சனைகளுக்கு போராட்ட களத்தினை திறந்து வைத்தவர்கள் நாமே. முல்லைத்தீவு கேப்பாபிலவில் முழுக் கிராமம் பறி போன போது தமிழரின் ஏக பிரதிநிதிகள் தாமே என்று சொல்லிக் கொண்டோர் மௌனமாக இருந்தனர். நாமே அம்மக்களை ஒன்றிணைத்து போராட்டம் நடத்தினோம்.

அது போல கிளிநொச்சி பரவிப்பாஞ்சன் நில அபகரிப்பு, தமிழ்க் கைதிகளின் (நிமலரூபன்) சிறைப் படுகொலை, காணாமல் போனோர் பிரச்சனை போன்றவை தொடர்பில் போராட்டத்தை தொடக்கி வைத்தவர்கள் நாமே. ஐ. நாவில் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக தம்மை காட்டிக் கொள்வோர் உரையாற்றியதில்லை. நாம் ஐ. நாவிலும் இப்பிரச்சனைகளுக்கு குரல் கொடுத்தோம். எமது பங்களிப்பை நியாயமாக சிந்திப்போர் தட்டிக் கழிக்க முடியாது".

என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் மணிவண்ணன் விளக்கமளித்துள்ளார்.

மெனிக் பார்ம் முகாமில் கடைசி வரைக்கும் வைத்திருக்கப்பட்டவர்கள் கேப்பாபிலவு மக்கள் என்பது யாவரும் அறிந்ததே. அக்டோபர் 2012 இல் சிறீலங்கா ஐ. நா. மனித உரிமை பேரவையின் முன் 5 வருடங்களுக்கொரு முறை (ருளைநசளயட "நசழைன சுநளைநறந) அறிக்கையிடும் தவணை நெருங்கி வர எப்படியாவது ஐ. நா கூட்டத்தொடருக்கு முன் கேப்பாபிலவு மக்களை மெனிக் பார்மிலிருந்து அகற்றி விட்டு மெனிக் பாரம் முகாமை தாம் மூடிவிட்டோம் என்று காட்ட வேண்டிய தேவை மகிந்த ராஜபக்ச அரசாங்கத்திற்கு இருந்தது.

கேப்பாபிலவு ஏற்கனவே பாரிய இராணுவ முகாமுக்கு விழுங்கப் பட்டிருக்க அதன் காரணமாக மக்களை வேறு இடத்தில் அவசர அவசரமாக மீள்குடியேற்ற இராணுவத்தினர் முயற்சித்தனர். இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டமைப்பிற்கு அறிவித்தும் நடவடிக்கை எடுக்காதிருக்க தமிழ் தேசிய மக்கள் முன்னணியிடம் போராட்டம் ஒன்றிற்கு அழைப்பு விடுக்கும் படி மக்கள் கோரினர். இப்போராட்டம் 21 செப்டம்பர் 2012 அன்று முல்லைத்தீவு அரச அதிபர் அலுவலகத்திற்கு முன்னால் இடம் பெற்றது. போரிற்குப் பின்னர் முல்லைத்தீவில் நடந்த முதல் போராட்டம் அதுவே. போராட்டத்தில் பல்வேறு கட்சிகளும் 200 க்கு மேற்பட்ட மக்களும் கலந்து கொண்டனர்.

புலனாய்வுப் பிரிவும், இராணுவமும் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தின. மெனிக் பார்ம் முகாமிலிருந்து மக்கள் வெளியேறி போராட்டத்தில் கலந்து கொள்வதை ஆயுதம் கொண்டு படையினர் தடுத்தனர். போராட்டம் நடந்து கொண்டிருந்த போது மலம் வீசி குழப்ப முயற்சித்தனர். கவிக்கிரமபாகு கருணாரத்னவும் கஜேந்திரகுமார் பொன்னமபலமும் பிரயாணித்த வாகனம் யாழ்ப்பாணம் திரும்பும் வேளையில் சேதமாக்கப்பட்டது. கஜேந்திரனின் வாகனம் மாங்குளம் வீதியில் வைத்து கல்லெறிந்து தாக்கப்படத்து.

அப்போராட்டத்தில் 200 க்கு மேற்பட்ட மக்கள் கையெழுத்திட்டு தாம் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டுமென கோரும் மகஜர் தயாரிக்கப்பட்டது. அம்மகஜரை நேரடியாக ஐ. நாவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதிக்கு அனுப்பி வைக்குமாறு கொழும்பில் இருந்து நன்கறியப்பட்ட மனித உரிமை செயற்பாட்டாளர் ஒருவரிடமிருந்து கஜேந்திரகுமாருக்கு செய்தி வந்தது.

அவ்வாறே அனுப்பப்பட்டு மெனிக் பார்ம் மூடப்பட்டமை தொடர்பில் ஐ. நாவின் அறிக்கையில் கேப்பாபிலவு மக்களின் பிரச்சனை இடம் பெற்றது. (மக்களிடமிருந்து நேரடிக் கோரிக்கையாக வராவிட்டால் அது உள்ளடக்கப்படுவது கடினம் என்று எமக்கு சொல்லப்பட்டது) இது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மக்கள் போராட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் அதனை தமது சர்வதேச பிரச்சார வேலைத்திட்டத்தோடு இணைக்கும் முயற்சிக்கும் நல்லதோர் உதாரணம்.

இவ்வளவற்றையும் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இல்லாமல் இருந்த போதே கஜேந்திரகுமார் செய்யக் கூடியதாக இருந்தால் அவரது கட்சிக்கு எதிர்வரும் தேர்தலில் ஒரு வாய்ப்பை கொடுப்பது தமிழ் மக்களின் அரசியலுக்கு பலம் சேர்க்கும் இல்லையா? என அவர் கேள்வி எழுப்பினார்

TNPF
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
TAMIL NATIONAL PEOPLE'S FRONT

( www.pathivu.com)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# வீணையடி நீ எனக்கு...

24



– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

- பிரபஞ்சப் பிரியன் -

–தினமும்
திமிறிக் கொண்டு
கரையேறத் துடிக்கும்
அலைகளை
மீண்டும் மீண்டும்
உள்ளே இழுக்கும்
கடல்.–

ரதனின் பேச்சு ஆரம்பமே ... அவன் ஏதோ ஒரு சிக்கலில் தன்னை மாட்டிவிடப் போகிறான் என்பது அவளுக்கு விளங்கியது... அவள் தலையசைக்கவும். . . .

"பரிசு என்னவென்று தெரியுமா...?" என்று கேட்டான். "போட்டி ஏற்பாட்டாளர்கள் தானே பரிசையும் தீர்மானிக்க வேண்டும்..."

"ஓ... அது சரி .. நிவே நீர் போட்டியில் தோற்றால் நான் உமக்கு ஒரு கிஸ் தருவேன்.. ஆனா நான் தோற்றா நீர் எனக்கு ஒரு கிஸ் தரவேண்டும் என்ன..." அவனது பரிசு அவளுக்கு விளங்கியது. எப்படியோ கிஸ் தரவேண்டும் என்பது நிச்சயமாகிவிட்டது. இனி என்ன போட்டிக்கு தயாரானாள் நிவேதா.

உடனே ரதன்... "சரி இதோ போட்டி ஆரம்பமாகி விட்டது" எனக் கூறியபடி தனது கண்களை மூடியபடி தனது பொக்கட்டுக்குள் கையை விட்டு அதிலிருந்து ஒரு நோட்டு புத்தகத்தை எடுத்து திறந்து தனது பேனாவை எடுத்து அதில் ஏதோ எழுதி விட்டு கண்களைத் திறந்து அதனை நிவேதாவிடம் காட்டினான். அதில் 'நிவே நான் உன்னைக் காதலிக்கிறேன்.' என்ற வரிகள் அழகாக எழுதப்பட்டிருந்தது. அதனைப் பார்த்த நிவேதா அந்த நோட்டு புத்தகத்தையும் பேனாவையும் வாங்கி ஏதோ எழுதினாள். ஆனால் அவள் கண்களை மூடவில்லை. தான் எழுதியதை ரதனிடம் காட்டினாள். அதில் "ரதன் நான் உன்னைக் காதலிக்கின்றேன்." என்ற வரிகள் எழுதப்பட்டிருந்தது.

ரதன் சிரித்தபடியே ... "சரி இப்ப நான் செய்ய போவதை நீர் செய்ய வேண்டும் என்ன.." என்றபடி தனது கண்களை இருக்க மூடிவிட்டு தனது கரத்தால் ஒரு பிடி மண்ணை எடுத்து தனது கண்ணுக்கு மேல் போட்டுக் கொண்டு குனிந்தான். அத்தனை மண் துகள்களும் கீழே விழுந்தன. தனது கைக் குட்டையை எடுத்து துடைத்தவன் அவளைச் சிரிப்புடன் பார்த்தான்.

ரதன் தன்னை போட்டியில் வென்று விட்டது நிவேதாவுக்கு தெரிந்தது. தன்னால் மண்ணை எடுத்து கண்களை திறந்தபடி போட முடியாது என்பது அவளுக்குப் புரிந்தது. அவனது புத்திசாலித்தனத்தை நினைத்து வியந்தாள் ."என்ன நிவே... உம்மால் செய்ய முடியாதா...? அப்படியென்றால் நீர் போட்டியில் தோல்வி, இருந்தாலும் எமது பரிசு விபரப்படி நான் உமக்கு இரண்டு கிஸ்சஸ் தாறன் என்ன ...?" "ஏன் இரண்டு தாரதா கதைக்கல்லையே..." நிவேதாவும் விடுவதாய் இல்லை.

"ஓம்.. ஒரு போட்டியில் தோற்றா ஒன்று .. நீர் இரண்டு போட்டியிலும் தோல்வி ஆகவே இரண்டு தாறன் ..."



"ஏன் முதல் போட்டியில் நீங்க எழுதியதை போல் நான் எழுதி காட்டினன் தானே ..."

"ஆம் எழுதினீர் தான் ஆனால் நான் எப்படி எழுதினன்" நிவே நான் உன்னைக் காதலிக்கின்றேன்" என்று எழுதின மாதிரி நீரும் அப்படித்தான் எழுதியிருக்க வேண்டும். ஆனா நீர் 'ரதன் நான் உன்னைக் காதலிக்கின்றேன்" என்று தானே எழுதினீர். அப்படி என்றா தோல்விதானே?" நிவே தனது நாக்கைக் கடித்துக் கொண்டாள். எவ்வளவு இலகுவாக அவன் தன்னை வெற்றி கொண்டான் என்பதை நினைக்க பிரமிப்பாக இருந்தது.

எந்த ஒரு பெண்ணுமே தன்னை தனது மனதுக்கு பிடித்த ஆண் மகன் வெற்றி கொள்ள வேண்டும் என்றே விரும்புகின்றாள். கல்வியிலும் சரி, வீரத்திலும் சரி, ஆளுமையிலும் சரி, அவன் தன்னை ஜெயிக்க வேண்டும் என்றே அவள் விரும்புகின்றாள். பெண்களை பொறுத்தவரை வெற்றி கொள்வதை விட தங்களை ஆண்மகன் வெற்றி கொள்வதையே விரும்புகின்றனர். கல்வியில் வெற்றி கொள்ளும் போது அவன் தொழில் சிறக்கும், வீரத்தில் வெற்றிக் கொள்ளும் போது அவன் புகழ் நிலைக்கும், ஆளுமையில் வெற்றிகொள்ளும் போது அவனது

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

திறமைகள் செழிக்கும். இதெல்லாம் பெண் தன்னை ஓர் ஆண்மகன் காத்துக்கொள்ள வாழ்நாள் முழுவதும் தன்னை வைத்துக் காப்பாற்ற தேவை என்பதை உணர்கிறாள். அவள் வெற்றி கொண்டால் வெற்றி கொண்ட திருப்தி மட்டுமே அவளுக்கு நிலைக்கும். இது தற்காலிக வெற்றியே. ஆனால் பெண்ணுக்கு தோல்வியே வெற்றியாகிறது. அதுவும் அது நிலைக்கும் வெற்றியாகிறது. அவள் என்றென்றும் நினைத்து பார்த்து மகிழ்ச்சியடையும் வெற்றியாகிறது. எனவே பெண் வெற்றி கொள்வதை விட ஆணிடம் தோல்வி அடைவதையே அதிகம் விரும்புகிறாள்.

இங்கேயும் ரதனின் வெற்றி பேரளவுக்குத்தான் என்றாலும் அவன் தரப் போகும் முத்தத்தின் ஞாபகங்களே அவளை கிறங்கடித்தன.... அதுவே அவளுக்கு பெரிய வெற்றியாகியது.

மனித வாழ்க்கை என்பது உண்மையில் விசித்திரமானதுதான். இன்றிருப்பவர் நாளையில்லை நாளை எம்முடன் கதைப்பவர் நாளை மறுதினம் சிலவேளை உயிருடன் இருப்பதில்லை. இறப்பும் பிறப்பும் இயற்கையின் நியதி என்றாலும், சில மறைவுகளை, சில இழப்புக்களை மனம் சீக்கிரத்தில் ஏற்றுகொள்வதில்லை.

பிறக்கும் மனிதன் ஒவ்வொருவனும் ஒரு குறிப்பிட்ட காலத்துடன் தனது உலக வாழ்கையை நிறைவு செய்து கொள்ள வேண்டும் என்பது எழுதி வைத்த விதியாகிறது. ஒன்றுமில்லாமல் பிறப்பது போலவே போகும்போதும் ஒன்றுமில்லாமல் போகவேண்டியிருக்கிறது. இடைக்காலத்தில் அவன் இந்த பூமியில் தங்கி வாழும் காலங்களில் அவன் செய்த புண்ணியங்களும் சேவைகளுமே அவன் மறைவுக்குப் பின்னும் உயிருடன் வாழ்கின்றன.

மனிதர்கள் பிறக்கும் போதே மகாத்மாக்களாக பிறப்பதில்லை. அவர்களது வாழ்க்கை தத்துவமே அவர்களை மகாத்மாவாக்கி விடுகிறது. எனவே ஒரு மனிதன் தன் வாழ்வுக்காலங்களில் கடைப்பிடிக்கும் வாழ்க்கை முறைகளே அவனை நல்லவனாகவும், கெட்டவனாகவும் அடையாளம் காட்ட உதவுகிறது. இதை ஒவ்வொரு மனிதனும் புரிந்து கொண்டால் உலகத்தில் பிரச்சினை என்பதே இருக்கப்போவதில்லை. மனித வாழ்வின் மூல தத்துவத்தை உணராத வரைக்கும் தான் மனிதர்கள் தங்களுக்குள் இனம், மதம், மொழி என்று பிளவுபட்டு மோதிக்கொள்கிறார்கள். வாழ்வை நேசிக்கும் இவர்கள் தமது இறப்பு பற்றியும் யோசித்தால்..... உலகில் பிரச்சினைகள் வடிவங்கொள்ளத் தேவையிருக்காது.

இழப்புகளில் பெரும் இழப்பு நம்மோடு பல காலம் நகமும் சதையுமாக வாழ்ந்தவர்கள் திடீரென மறையும் போது ஏற்படுகிறது. அப்படியான ஒரு இழப்புதான் அங்கும் ஏற்பட்டது. "மாமா ஆபத்தான நிலையில் உள்ளார். உடன் வரவும்" என தந்தி வந்ததும் ரதனும், நிவேதாவும் மறு நாள் புறப்பட்டு திருமலை வந்தனர். ஆனால் அங்கு..... 'நிவேதாவின் மாமாவின் பூதவுடலே அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. "நெஞ்சு வலிக்குது என்று சொன்னவர்" வெகு அமைதியாக உறங்கிப் போனதை அவரது மனைவி நிவேதாவிடம் சொல்லிச் சொல்லி அழும்போதும் ரதனால் கூட தாங்கிக்கொள்ள முடியவில்லை.

ராமநாதன் மாமா ரதன் பல்கலைக்கழகம் புறப்பட்டதில் ரயிலில் அறிமுகமானவராக இருந்தாலும் அவரது பழகும் தன்மையும், பரஸ்பரம் மற்றவர்களை, அவர்கள் வயதில் குறைந்தவர்களாக இருந்தாலென்ன அவர்களுக்கும் மதிப்பு கொடுத்து அவர் பழகுவதும் ரதனுக்கு பெரிதும் பிடித்திருந்தது.

நிவேதாவை பார்ப்பதற்கென அவர் இரண்டு முறை மட்டக்களப்பிற்கு வந்த போதும் ரதனுடன் வெகு அன்பாகவே பழகினார். சிறுவயதிலேயே ஒரு வீதி விபத்தில் தனது பெற்றோரை இழந்திருந்த நிவேதாவுக்கு அவரது மாமாவே எல்லாமாக இருந்தார். அவருக்கு பிள்ளைகள் இல்லாத குறையை நீக்க தனது பிள்ளை போலவே நிவேதாவை பார்த்து வந்தார். ராமனாதனின் மனைவி லட்சுமியும் பெயருகேற்றாற் போல் லட்சுமிகரமாகவே வாழ்ந்தார். நிவேதாவை தனது மகளைப் போலவே வளர்த்தார்.

ராமனாதனின் மறைவு நிவேதாவைப் பொறுத்தவரையும் பெரும் இழப்பாகவே இருக்கும் என்பது ரதனுக்குப் புரிந்தது. ஏனெனில் அவனும் இழப்புக்களை அனுபவித்தவன் அல்லவா?

நிவேதாவைக் கண்டதும் காரியங்கள் மும்முரமாக நடந்தது. ராமனாதனின் மரண வீட்டிற்கு ஊரே கூடியிருந்தது. திருக்கடலூர் கிராம மக்கள் அனைவரும் தமது வீட்டில் நடந்த ஒரு சோக நிகழ்வு போன்றே மன வேதனைப்பட்டனர். நல்ல மனிதனாக மட்டுமன்றி ஒரு சமூக சேவகனாகவும் அப் பகுதி மக்களுக்கு பல்வேறு உதவிகளை செய்து வந்த அவரின் இழப்பு ஊர் மக்களைப் பொருத்தவரையிலும் கூட ஒருவித இழப்பாகவே கருதப்பட்டது.

ராமநாதன் மாமாவின் இறுதிக் காரியங்கள் வெகு சிறப்பாக நடைபெற்றது. வியாகுல மாதா ஆலயத்திற்கு பக்கத்தில் அமைந்திருந்த அந்த பழம் பெரும் ஐந்து மயானத்தில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. செய்தி அறிந்து ராமனாதனின் நண்பர்கள் பல இடங்களிலும் இருந்து வந்திருந்தனர். சண்முகம் மாமாவும் வந்தது நிவேதாவுக்கு ஆறுதலாய் இருந்தது.

பல்கலைக் கழக விடுமுறையாதலால் ஊருக்கு விடுமுறையில் வந்திருந்த பல்கலைக் கழக மாணவர்களும் , மாணவிகளும் வந்திருந்து நிவேதாவுக்கு ஆறுதல் கூறினர். ரதனின் முயற்சியில் பல்கலைக் கழக இரண்டாம் ஆண்டு மாணவர்கள் சார்பாக ஒரு இரங்கல் கவிதை எழுதி அச்சடித்து வெளியிட்டிருந்தனர்.

எட்டாம் நாள் காரியங்கள் அனைத்தும் சிறப்பாக முடிந்ததும், அதுவரை மரண வீட்டில் தங்கியிருந்த உறவினர்களும், அயலவர்களும் ஒவ்வொருவராக விடை பெற்று செல்லத் தொடங்கினர். ரதன் தான் வந்த நாளில் இருந்து ஒரு சில நிமிடங்களே தனது வீட்டிற்கு போய் வருவான். மிகுதி நேரமெல்லாம் அங்குதான் நின்றான். ஆண் உதவி இல்லாத வீட்டில் ரதன் நின்றது பெரிய உதவியாக இருந்தது. அதை விட மாமாவின் சோகத்தில் சாப்பிடாமல் கண்ணீர் விட்டபடி சதா கவலைப் பட்டுக் கொண்டிருந்த நிவேதாவுக்கு பெரும் ஆறுதலாகவும், துணையாகவும் இருந்தது. பல வேலைகளுக்கு மத்தியிலும் நிவேதாவைக் கவனித்து அவளுக்கு எப்படியாவது சாப்பாட்டைக் கொடுத்து அவளை சாப்பிடச் செய்து விடுவான். அவள் பட்டினி கிடக்க அவன் விட்டதே இல்லை. அதே போல் கூட நின்று பல கதைகளையும் பேசி அவளது சோகத்தை மறைக்கவும், மறக்கவும் உதவினான்.

காலம்தான் எவ்வளவு விரைவாக ஓடி மறைகிறது. எத்தனை பெரிய சோகங்களையும், இழப்புக்களையும் கூட காலம் தன் கரங்களால் மெல்ல மெல்ல மறைத்து விடுகிறது. கால மாற்றங்கள் உலகையே மாற்றி விடுவது என்பது வெகு இயல்பாகவல்லவா நடந்து வருகிறது. அந்த வீட்டை பொறுத்தவரை ராமநாதன் மாமாவின் இழப்பு பெரும் இழப்பே. வீட்டுத் தலைவனை இழந்து நின்ற அந்த வீடு மெல்ல மெல்ல இயல்பு நிலைக்கு வந்தாலும் நிவேதாவும், மாமியும் தனிமையில் இருக்கும் போது அந்த வீட்டில் ராமநாதன் மாமாவின் மறைவு விஸ்வரூபம் எடுக்கும். மாமாவின் முப்பத்தோராம் நாள் காரியங்கள் முடியவும் பல்கலைக் கழக விடுமுறை நாட்கள் முடியவும் சரியாக இருந்தது.

இவ்வளவு நாளும் வந்து போன ஒன்றிரண்டு உறவினர்களும் மாமாவின் காரியங்களை தொடர்ந்து தமது வருகையை மெல்லக் குறைத்துக் கொண்டனர். ரதன் மட்டும் தொடர்ந்து வந்து போவதாக இருந்ததால் அங்கு தனிமை உணர்வு மெல்ல குறைந்தது போல இருந்தது.

ஆனால் நிவேதாவும் பல்கலைக்கழகம் ஆரம்பித்து மட்டக்களபிற்கு போனால் மாமி மட்டுமே தனிமையாக இருக்க வேண்டும். அதனை நினைக்கத் தான் நிவேதாவுக்கும் மனசுக்குள் ஏதோ செய்தது.

தமக்கு பிள்ளை வரம் கொடுத்து வைக்கவில்லை என்பதை தெரிந்தும் அவர்கள் கவலைப்பட்டதில்லை. நிவேதாவின் பெற்றோரின் மறைவைத் தொடர்ந்து மாமாவும், மாமியும் அவளுக்கு இன்னுமொரு தாயும் தந்தையும் போலவே இருந்தனர். உறவு முறை மட்டும் மாமா மாமி என்றிருந்தாலும் அங்கு நிலவிய பாச உணர்வுகள் ஒரு தாய்க்கும், தந்தைக்கும், மகளுக்கும் இடைப் பட்டதாகவே இருந்தது.

மேவும்.. .. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## துளிர்ப்போம் தாயே!

- ஜனா -

இரவொன்று முடியாது
தொடரும் . . . . இருள்
எல்லோரையும்
மறைக்கும் - மாந்தரின்
நிறங்கள் யாவும்
இருளிற் கரையும்
அவர்களின் எண்ணங்களும்
தான் . . .

யாரறிவார்
இருளின் நிறத்தையும் - எம்
எண்ணங்களையும்

கைகளிற் சுடுகலனுடன்
தனித்திருக்கும் அவ்
விரவில் . . . . இருளிற்
கரைந்து காலன்
எனதருகில் நிற்கலாம் . . .
யார் கண்டார் . . .

அம்மா -
உன் மகனின் வாழ்வு
ஓர் படைக்கலனுடனும்
காலனுடனும் கரைகின்றதே!
எண்ணிப்பார்
கொல்லை வேப்பமரத்திற்
பேயிருந்ததாய்ச் சொல்லிச்
சொல்லியே சோருட்டிய - என்
தாயே!
எல்லை கடந்து செல்

என் உடலின் மீது வீழ்ந்தழ
கொடுப்பினையோ
உனக்கு இல்லை!
அன்றேல் - நான்
உன் சிதையை எரியூட்டக்
கொடுப்பினையோ
இன்றி . . .

எனது காலம்
இருளில் உறையும்
காலனுடனும் - சுடு
படைக்கலனுடனும் -
கழிகின்றது.

தாயே - போய்வா
எல்லை தாண்டிப்
பேய்களிடம் தப்பி
என்னைப் போல்
ஒருவன் உருவாகி
வரும்வரை
காத்திரு . . .

அவனுக்காய்
நீ
சோறு பொங்கிக்
காத்திரு . . .

அவனாகி நானும்
நானாகி அவனும்
நாமாகி அவர்களும்
துளிர்ப்பது - இயற்கையின்
நியதியன்றோ!



## செருக்குற்றோர் சிறப்புப் பெறுதில்லை

மனம் மாற்றம் பெறாமல்
மதம் மாற்றம் நிகழ்வதில்லை:
மதம் மாறும் குணமுடையோர்
மரம்தாவும் மந்தியாவர்:

இனம் மாறி மணம்செய்வோர்
இல்வாழ்க்கை இனிப்பதில்லை:
பணம்பெற்று மணம் செய்வோர்
பாராட்டைப் பெறுவதில்லை:

சினம் கொண்டோர் வாழ்க்கையிலே
செல்வாக்கு சேர்வதில்லை:
சிவ புனித பூமியிலே
செருக்குற்றோர் ஜெயிப்பதில்லை:

ஆணவம் கொண்ட வர்க்கு
அமைதியில்லை வாழ்க்கையிலே:
ஞானமுள்ள மனிதருக்கு
ஞாலமெங்கும் மதிப்புத்தான்:

கவிக்குயிலன்
சேனையூரான்

## அன்பு



பொய்யான அன்பு
உள்ளவர்களுக்கு
உண்மைகூட
சுமைதான்

உண்மையான அன்பு
உள்ளவர்களுக்கு
பொய்கூட
சுகம்தான்

... பா.பிரசாந்வனிதா ...
நாவற்சோலை, கும்புறுபிட்டி

## காதல்

- சஞ்சீ -

இதயக் கல்லில்
செதுக்கி வைத்த காதல்!
சித்தரிப்பிற்கோ!
வர்ணிப்பிற்கோ!
அப்பாற்பட்டு ஆழமும், அர்த்தமும்
குவிந்து செறிந்த
வினோத முத்து!
காதல்!

## வெட்கம் வெட்கம்

வெட்கம் வெட்கம் வெட்கம்
வேதனையை வெளிப்படுத்துவதை
விட
விவேகமாக செயல்படுவதே
வீரர் செயல் ஆகும் நல்ல
மாட்டிற்கு ஒரு சூடு நற்
பெண்டாட்டிக்கு ஒரு சூடு
எத்தனை இடர்பாடுகள்
எண்ணிச் சொல்ல முடியாது
முஸ்லீம் தலைவர்களே
முறையாக சிந்திப்பீர்களா
காலம் கடத்தும் செயல்
முஸ்லீம் முகங்கள் சுருங்குகின்றன
பள்ளி வாசல்கள் பகடைக்காய்களா
பார்ப்பதற்கோ வேதனை வேதனை
சட்டங்களோ சதிகாரர்கள் கையில்
சமாதானம் என்பதோ சஞ்சலத்தில்
வெட்கம் கெட்ட மனிதர்கள்
வீதியில் வலம் வரும் வேளை
வெருண்டு வெருண்டு வாழ்வதை
விட
வீரமுடன் வாழ்வை முடிப்போம்
விவேகிகளே சிந்திப்பீர்களா?



சீ.என்.துரைராஜா

## போதுமையா!

என்னிடம் கற்ற பேரில்
ஏழுக்கு நால்வர் வேலை!
நன்னிலை மையில் உள்ளார்,
நடந்தவை மறக்க மாட்டார்!
புன்னகை முகத்தார் நன்கு
புகட்டுவார் பள்ளிப்பாடம்!
மின்னுவார் கல்வி வானில்,
மேல் நிலை எய்துவாரே!

எனக்கிது போதா தாமா?
ஏகனாய் ஐந்தாறெல்லாம்
கணக்,கெழுத்,தொடுவா சிப்பும்-
கனித்தமிழ் ஆத்தி - கொன்றை-
மனக்கணக்கொடு, வாய்பாடும்
மறந்திடா முறையிலன்று
இணக்கமாய் ஊட்டி வைத்த
எனக்கிது போதுமையா!

தாமரைத்தீவான்
([illegible])

## பொய்கள்

. . ஜீவன் . .

நானாகத் துரத்தவில்லை – உன்னால்
தூக்கமிழப்பதாய்ச் சொல்லி
துயர்கொள்ளவில்லை

வாழ்வும்,சாவும் உன்
வாய்ச்சொல்லில்தானென்று உன்னைப்
பேச்சிழக்கச் செய்யவில்லை

பிறந்தநாள் வாழ்த்தெழுதி அதைப்
பிரித்துப் படிக்கச்சொல்லி -
உன்னைநான்
நிர்ப்பந்திக்கவில்லை

நீ போகும் பாதைபார்த்து
நீண்டநேரம் காவல்காத்து உன்
வீடுவரை தொடரவில்லை

நீ கிழித்தெறிந்த காகித்ததை
நெஞ்சின்மேல் ஒட்டிக்கொண்டு
நித்திரை செய்யவில்லை

நினைவுகளில், கனவுகளில்
நீதானடியென்று
கவிதை சொன்னதில்லை

எழுதிமுடித்த பேனாக்கள் - உன்
எச்சில்பட்ட முடிந்துபோன
'ஐஸ்' கிறீம் குவளைகள்
உதறியதில் வீழ்ந்த
உன்னுடுப்புப் பொத்தான்களென்று
எதையும் நான் சேகரித்ததில்லை

நீ பார்க்க வேண்டுமென்று
யாருக்கும் பிச்சை போட்டதில்லை

நீ சிரிக்க வேண்டுமென்று
சில்லறை ஜோக் அடித்ததில்லை

நீயாக வந்து பேசியபோதும்
நானாக எதையும் சொன்னதில்லை

இப்போது கூட இதையெழுதியது
உனக்காக இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் பார்வை

# புதிய பாராளுமன்ற முடிவு தமிழ் மக்களுக்கு சோதனையா? சாதனையா?

"மகா"

2015ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஜனாதிபதி தேர்தலின் போது இணைய முடியாத துருவங்களாக இருந்த சிங்கள அரசியல்வாதிகள் ஒரே நேர்கோட்டில் சந்தித்து இணைந்தார்கள். குடும்ப ஆட்சியில், ஊழலைச் சாதாரணமாக்கி, சட்டத்தை தூங்க வைத்து ஆட்சி நடாத்திய, புலிகளை அழித்த, யுத்தத்தின் நாயகனாக போற்றப்பட்ட, 9 வருடங்களாகக் கொடுங்கோல் ஆட்சி புரிந்த மகிந்தவைத் தூக்கி எறிய அரசியல் வாதிகள் ஒன்று பட்டார்கள்.

ஜாதிக ஹெல உறுமய, ஜேவிபி, ஐதேக ஆகியவை கொள்கையிலும் நடைமுறையிலும் நேருக்கு நேர் முரண்பட்ட கட்சிகள். அதுபோல முஸ்லீம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லீம் கட்சி, மற்றும் இடதுசாரிக் கட்சிகள் தத்தமது நலன்களில் முரண்பட்ட கட்சிகள் ஆனால் இவை யாவும் தமது பொது இலக்கிற்காக இணைத்துக் கொண்டார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இறுதியில் மைத்திரியை ஆதரித்தது...

மகிந்த என்ற கொடுங்கோல் ஆட்சியாளரை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக விக்ரமபாகு கருணாரட்ண உள்ளிட்ட தெற்கின் இடதுசாரிக் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள், புத்திஜீவிகள் பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் சங்கங்கள் போன்றவர்களும் கூட, மதவாத, இனவாதக் கட்சிகளுடன் பொது இலக்கில் உடன்பட்டுக் கொண்டனர்.

இலங்கை அரசியலில் இது புதிய விடயம் அல்ல, 1989 – 1993 காலப்பகுதியில் றணசிங்க பிரேமதாசாவின் ஆட்சிக்கு எதிராக தெற்கில் அணிச்சேர்க்கை ஏற்பட்டது. அப்போது மகிந்த ராஜபக்ஸவும் அவ்வணியில் முக்கிய பங்காற்றினார். இதே போல் 2005ல் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போதும் அவர்களை அழிக்க வேண்டும் என்பதில் தெற்கு ஒரு முகமாக அணி திரண்டிருந்தது. ஆனால் என் அறிவுக்கு எட்டியவகையில் சுதந்திரத்திற்கு பின் தமிழ்த் தரப்புகள், அது விடுதலை இயக்கங்களாக இருந்தாலும் சரி, சாத்வீகப் போராட்டத்தை முன்னிலைப்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட தமிழ் அரசியல் கட்சிகளாக இருந்தாலும் சரி ஒருமித்த இலக்குக்காக மனமுவந்தும் தெளிவுடனும் ஒன்றுபட்டதாகத் தெரியவில்லை.

விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் அவர்களின் அதிகார அழுத்தத்தில் இணைக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே தேர்தல் காலங்களில் இடம்பெறும், குத்து வெட்டுகள், குழிபறிப்புகள் யாவற்றையும் தாண்டி, இன்று வரையும், விரும்பியோ விரும்பாமலோ, ஆனால் இழுபட்டுச் செல்லுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது இந்தக் கூட்டமைப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஆகியவை இணைய மாட்டோம் என்று அடம் பிடித்திருந்தன.

முன்னாள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், சுகுணம் பரராஜசிங்கம் ஆகியோர் இயக்கங்களால் உருவாக்கப்படும் கூட்டமைப்பில் எப்படி ஒன்றிணைவது எனக் கடுமையாக எதிர்த்திருந்தனர். இணைப்பாளர்களுடன் தொடர்ந்த பல கட்டப் பேச்சு வார்த்தைகளின் பின்பே தமிழர் விடுதலைக் கூட்டணி த.தே.கூ இல் சேர உடன்பட்டது.

அப்பொழுது அப்பாத்துரை விநாயக மூர்த்தியைத் தலைமையாகக் கொண்ட தமிழ்க் காங்கிரசின் செயலாளராக குமரகுருபரன் விளங்கியிருந்தார். அப்பாத்துரை விநாயக மூர்த்தி மற்றும் குமரகுருபரன் ஆகிய இருவரையும் குமார் பொன்னம்பலத்தின் இறப்பின் பின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கட்சியை கைப்பற்றும் வரை திருமதி.பொன்னம்பலமே கட்டுப்படுத்தி வந்தார்.

கூட்டமைப்பில் இணைய மாட்டோம் என அடம்பிடித்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பின்னர் வந்த தேர்தலிலும் கூடத் தாம் பழம் பெரும் கட்சி அதனால் யாழ்ப்பாணத்தில் சைக்கிள் சின்னத்திலேயே போட்டியிடுவோம் எனவும் முரண்டு பண்ணியது.

ஆயினும் வடக்கில் ஈபிடீபியை தோற்கடிக்க வேண்டுமெனில் பலம் பொருந்திய கூட்டமைப்பினுள் ஒன்றிணைய வேண்டும் என அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வற்புறுத்தப்பட்டதுடன் மறைந்த பத்திரிகையாளர் சிவராம் விநாயகமூர்த்தியை மிரட்டியே பணிய வைத்ததாக பின்னர் அறியப்பட்டது.

இதேவேளை சுரேஸ் தலைமையிலான ஈபி.ஆர்எல்எவ் உம் செல்வம் தலைமையிலான ரெலோவும் மறுப்பின்றி இந்த கூட்டமைப்பு உருவாக்கத்திற்கு இணங்கியிருந்தார்கள்.

ஆரம்பத்தில் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் புலிகள் நேரடியாக தலையிடாவிடினும், அவர்களது ஆலோசனையின் பேரிலேயே சிவராம் உள்ளிட்டவர்களால் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. த.தே.கூ உருவான வரலாறு இது. இவ்வாறு உருவாக்கப்பட்ட கூட்டமைப்பின் எதிர்காலம் இரா.சம்பந்தனின் பின்பு என்னவாகுமோ என்ற கேள்விகள் இப்போ பலரிடம் எழுந்த வண்ணம் உள்ளன.

தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளை முன்வைத்து பொது இலக்கில் ஈழத்திலோ புலம் பெயர் சூழலிலோ தமிழ்த் தரப்புகள் இணைந்து செல்ல இன்றைவரைக்கும் முற்பட்டதில்லை. தலை போகிற நிலை வந்தாலும் கூடத் தமிழர்கள் ஒன்றுபட முயலமாட்டார்கள்.



இப்போ மீண்டும் தெற்கு முரண்பாடுகளுக்கு அப்பால் உடன்பாடு காணும் அடுத்த அத்தியாயத்தை கடந்த ஞாயிற்றுக் கிழமை வெற்றிகரமாகச் சாதித்திருக்கிறது.

ஜனவரி 8ஆம் திகதி தம்மால் முன்னெடுக்கப்பட்ட மௌனப்புரட்சி மீண்டும் ராஜபக்ஸக்கள் வசமாகிவிடுமோ என்ற அச்சம் மேலோங்க அனைவரும் சில சமரசங்களுக்கு வந்து பொது நோக்கத்திற்காக ஒன்றுபட்டு இருக்கிறார்கள். வரலாற்றில் என்றுமே லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ் கட்சி, புதிய இடதுசாரி முன்னணி உள்ளிட்ட இடதுசாரிகள் யானைச் சின்னத்தில் ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைந்ததில்லை. அவர்கள் எப்போதுமே சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனேயே கூட்டுக்களைத் தொடர்ந்து வருகிறார்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்த இடதுசாரிக் கட்சிகள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து, ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளனர்.

ஜனவரி 8ஆம் திகதி மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வருவதைத் தடுக்க முன்னர் இணைந்ததைப் போன்று மீண்டும் ஒன்றிணைந்திருப்பதாக ஐக்கிய இடதுசாரி முன்னணி அறிவித்துள்ளது. டி.எஸ்.சேனநாயக்க காலம் முதல் பழம்பெரும் கட்சியாக விளங்கிய ஐக்கியதேசியக் 'கட்சியின் தலைவர் றணில் விக்கிரமசிங்க கடந்த சனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளருக்கான சந்தர்ப்பத்தையும், இப்போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வாயிலாக ஐக்கியதேசியக் கட்சியின் தனித்துவத்தையும் விட்டுக் கொடுத்திருக்கிறார்.

இதன் மூலம் மீண்டும் ஒரு பாரிய வெற்றியை நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி சாதிக்கப் போகிறது.

மைத்திரி மகிந்தவைத் தேர்தலில் போட்டியிட அனுமதித்தமை தொடர்பாகப் பல ஊகங்கள் உலவுகின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும், ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினதும் செயலாளர்கள் அனுரபிரியதர்ஸண யாப்பா, சுசில் பிரேம ஜெயந்த ஆகிய இருவர் உட்படக் கட்சியின் பெரும்பாலனவர்கள் மகிந்த வசமாக உள்ளபோது கட்சிக்குள் இருந்து கொண்டு மைத்திரிபால சிரிசேனவால் எதுவும் செய்ய முடியாது. அதனால் அவர்களை ஆடுவதற்கு அனுமதித்திருக்கும் மைத்திரி தனக்குச் சார்பானவர்களை நல்லாட்சிக்கான ஐக்கியதேசிய ஜனநாயக முன்னணியில் இணைவதற்கு அனுமதித்துவிட்டு மௌனமாகத் தனது சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்கிறார் எனக் கருதுவதைத் தவிர இப்போதைக்கு வேறு ஆதரபூர்வமான எதுக்கள் எதுவும் இல்லை.

மகிந்த தரப்பை அவர்கள் போக்கில் விட்டுத் தோல்வியடையச் செய்து, தோல்வியின் பின் அதனைக் காரணம் காட்டிக் கட்சியை தமது கட்டுப்பாட்டுள் கொண்டுவரும் நோக்கத்தை அவர் கொண்டிருப்பதாகவும் ஊகங்கள் உள்ளன.

வேட்பு மனு தாக்கல் நிறைவடைந்துள்ள நிலையில் மூத்த சிங்கள ஊடகவியலாளர் ஒருவருடன் பேசினேன். அவர் சொன்னார்: "குரு மகிந்தவுக்கு வேட்பு மனுக்கொடுப்பதற்கு முன் ஐக்கியதேசியக் கட்சிக்கு 90 முதல் 100 ஆசனங்களே வரும் என நினைத்திருந்தேன். ஆனால் இன்று வெளியாகி இருக்கும் UPFA பட்டியலைப் பார்வையிட்டபின் குறைந்தது 113 ஆசனங்களை நல்லாட்சிக்கான ஐக்கிய முன்னணி பெற்றுக் கொள்ளும் என நம்புகிறேன். காரணம் மகிந்தவின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்த அனைத்துக் கெடுகுடிகளும் பட்டியலில் மீண்டும் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். இது மக்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தும்".

இரண்டாவது எதிர்கட்சியாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 60 முதல் 70 ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளவும் மூன்றாவது எதிர்க்கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 15ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. மிகுதி ஆசனங்களே ஜேவிபி உள்ளிட்ட ஏனைய கட்சிகளுக்கான சாத்தியங்களாக இருக்கும்.

தெற்கின் அரசியல் இப்படிச் செல்ல வடக்கு கிழக்கிலோ நிலமை தலைகீழாக உள்ளது. வித்தியாதரன் தலைமையிலான ஜனநாயகப் போராளிகள் அமைப்பு தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்சி. மக்களிடத்தில் சென்று எந்த வேலையையுமே முன்னெடுக்காத ஒரு கட்சி, திடீர் எனக் கூட்டமைப்பிடம் ஆசனங்களைக் கேட்டு நிற்கிறது. கிடைக்கவில்லை என்றதும் தனித்துப் போட்டியிடுகிறது.

கலாநிதி அன்றன் பாலசிங்கத்தின் நெருங்கிய நண்பன், ஊடகவியலாளர் என்ற தகுதிகளுடன் சில முன்னாட் போராளிகளைத் தன் பின்னால் இணைத்துக்கொண்டு திருவித்தியாதரன் அரசியலுக்குள் நுழைந்திருக்கிறார்.

அவரது குழு தெளிவான கட்சி அமைப்பைக் கொண்டதல்ல. அது மக்களிடத்தில் தொழிற்பாடுகளை ஆரம்பிக்கவில்லை, அதன் அரசியல் நோக்கங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் குறித்து யாருக்கும் எதுவும் தெரியாது. இந்நிலையில் ஒருகுழு தேர்தலில் நிற்கிறது என்றால் அது தமிழ் வாக்குகளைப் பிரிக்க மட்டுமே முனைகிறது என்று அர்த்தம். அதுமட்டுமல்ல போராளிகள் மீது இருக்கக்கூடிய அனுதாபம் தனிப்பட்ட நலன்களுக்காக பேரம் பேசக்கூடிய விலைப் பொருளாகவும் மாற்றப்பட்டிருக்கிறது.

திடீரென ஆகாயத்தில் இருந்து குதித்து நாம் பாரளுமன்றம் செல்ல வேண்டும் எங்கள் குரல் அங்கு ஒலிக்க வேண்டும் எனக் கோரினால் இன்றைக்குள்ள யதார்த்ததில் உங்கள் குரல் தமிழ் மக்களுக்கெதிரான சதியாகிப் போகவும் வாய்ப்புண்டு.

மேலும் தெளிவா வேலைத்திட்டங்களோ மக்கள் ஆதரவோ இல்லாமல் நீங்கள் தோல்வி அடையும் பட்சத்தில் உங்கள் மேலுள்ள புனிதமும் சேர்ந்தே கறைப்பட்டு விடும். உண்மையிலும் மக்களுக்காகவும் தமிழ்த்தேசிய நலன்களுக்காகவும் போராட விரும்பினால் தேர்தல் உங்கள் முதல் நோக்கமாக இருக்க முடியாது.

- www.tamilwin.com -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தொடர் சாதனை புரியும் - செரீனா



விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை 6 ஆவது தடவையாகக் கைப்பற்றி சாதித்தார் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ்.

கடந்த சனிக்கிழமை நடந்த இறுதியாட்டத்தில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ஸ்பெயினின் கார்பைன் முகுருஸா மோதினர். முதன்முதலாக விம்பிள்டனின் இறுதியாட்டத்தில் விளையாடிய 21 வயதான முகுருஸா ஆரம்பத்தில் ஆட்டத்தை 4-2 என்ற செற் கணக்கில் தன் வசப்படுத்தியிருந்தார். ஆனால் திடீரென்று எழுச்சி கண்ட செரீனா தனது அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்தி 6-4 என்ற செற் கணக்கில் முதல் செற்றைக் கைப்பற்றினார்.

இரண்டாவது செற்றையும் 6-4 என்ற செற் கணக்கில் கைப்பற்றிய செரீனா 6 ஆவது தடவையாக விம்பிள்டன் சம்பியனைக் கைப்பற்றினார். இது அவரது 21 ஆவது கிராண்ட்ஸ்லம் சம்பியனாகும்.

ஒரு ஆண்டில் 3 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்ற வீராங்கனை இவர் என்பதுடன், அடுத்து இவரது சொந்த மண்ணான அமெரிக்காவில் நடக்கும் கிராண்டஸ்லம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓப்பனையும் வென்றால் ஒரு ஆண்டில் 4 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்ற ஸ்ரெபி கிராப்பின் சாதனையை சமப்படுத்துவார்.

## மிகவும் பலமான நபர்

**அவுஸ்திரேலியா**வின் மிகவும் பலமான நபராக 33 வயதான தரென் லாங் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

தென் மேற்கு சிட்னியிலுள்ள கம்டென் நகரைச் சேர்ந்த அவர் இந்த வருடம் நோர்வேயில் இடம்பெறவுள்ள உலகின் பலமான மனிதனை தெரிவு செய்வதற்கான போட்டியில் அவுஸ்திரேலியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கலந்துகொள்ளவுள்ளார். மேற்படி போட்டியில் அவுஸ்திரேலியா பங்கேற்பது இதுவே முதல் தடவையாகும்.


லாங். 300 கிலோகிராம் நிறையை தூக்கியதன் மூலம் மேற்படி அவுஸ்திரேலியாவின் மிகவும் பலமான நபர் என்ற பெயரைத் தனதாக்கிக் கொண்டுள்ளார்.



## கிரிக்கட் பாடம் நடாத்திய டோனி

ஜார்க்கண்ட மாநிலத்தில் விடுமுறை எடுக்காமல் பள்ளிக்கு வந்த மாணவ மாணவியர்களுக்கு இந்திய அணித்தலைவர் டோனி பரிசுகள் வழங்கி கௌரவித்துள்ளார். டோனியின் வருகையை முன்னிட்டு பள்ளியில் சிறப்பு விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விழாவில் பங்கேற்ற டோனி, பள்ளிக்கு 100 சதவீத வருகை தந்த மாணவ மாணவிகளுக்கு விருது அளித்து பாராட்டினார். மேலும் மாணவ மாணவிகளுக்கு கிரிக்கெட் குறித்து பாடமும் நடத்தியுள்ளார்.



## தன்வசப்படுத்தியது பங்களாதேஷ் அணி


தென்னாபிரிக்க அணிக்கெதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் தனது நான்காவது தொடர்ச்சியான ஒருநாள் போட்டித் தொடர் வெற்றியைப் பதிவுசெய்தது பங்களாதேஷ் அணி.

ஏற்கெனவே நடந்து முடிந்த இரண்டு போட்டிகளில், தலா ஒவ்வொன்றில் ஒவ்வொரு அணியும் வெற்றிபெற்ற நிலையில் சிட்டகொங்கில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் இரு அணிகளும் மோதியிருந்தன. மழை காரணமாக போட்டி பாதிக்கப்பட்டதால் அணிக்கு தலா 40 ஓவர்களுக்கு போட்டி மட்டுப்படுத்தப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, ஆரம்பம் முதலே பல சரிவுகளைச் சந்தித்து 40 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்களை இழந்து 168 ஓட்டங்களை பெற்றது. அந்தவேளையிலேயே பங்களாதேஷ் அணி ஆரம்பம் முதலே மிகச் சிறப்பாக விளையாடி ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.



## ஏன் பிசிசிஐ நடவடிக்கை எடுக்கவில்லை



ஐ.பி.எல்லின் சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பையடுத்து முன்னணி வீரர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர். அந்தவகையில் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவர் இயன் சேப்பல் கூறுகையில், ஐ.பி.எல் சூதாடிகளின் சொர்க்கமாக அனுமதித்திருக்கக் கூடாது. ஊழல், சூதாட்டத்தால் கிரிக்கெட்டின் தரம் தாழ்ந்து போகிறது.

மக்களை எப்போதும் முட்டாளாக்கி விடமுடியாது. அவர்கள் நினைத்தால் நேரில் மற்றும் தொலைக்காட்சியில் பார்க்காமல் தங்கள் எதிர்ப்பை காட்டிவிடுவார்கள்.

கிரிக்கெட் ஊழலுக்கெதிராக ஊடகங்கள், நீதித்துறை ஆகியோர் நடவடிக்கை எடுக்கும் போது சம்பந்தப்பட்ட பிசிசிஐ நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

## இங்கிலாந்து பயிற்சியாளராகும் மஹேல

இங்கிலாந்தின் பயிற்சியாளர் குழாமில் இலங்கை அணியின் நட்சத்திர வீரர் மஹேல ஜயவர்தன ஆலோசனையாளராக இணைந்து கொள்ள வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2014ஆம் ஆண்டு இருபது ஓவர் உலகக்கிண்ணத்தை கைப்பற்றிய இலங்கையணிக்கு பயிற்சியாளராக விருந்த தற்போதைய இங்கிலாந்து உதவி பயிற்சியாளர் போல் பப்ரி காஸ் ஏற்கனவே மஹேலவுடன் பேசியதாகவும், ஆனால் இங்கிலாந்து அணியின் இயக்குனர் அன்ரு ஸ்ராஸ் இன்னும் எந்தவொரு ஒப்பந்தத்துக்கும் இணங்க வில்லையென்றும் தெரியவருகின்றது.



## சூதாட்டக்காரர்களுக்கு இரு வருட தடை

சூதாட்டப் புகாரில் சிக்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் நிர்வாகியும், பி.சி.சி.ஐ. முன்னாள் தலைவர் சீனிவாசனின் மருமகனுமான குருநாத் மெய்யப்பன், ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் உரிமையாளர்களில் ஒருவரான ராஜ் குந்த்ரா ஆகியோர் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையுடன் தொடர்புடைய கிரிக்கெட் செயல்பாடுகளில் பங்கேற்க வாழ்நாள் முழுவதும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட முன்னாள் தலைமை நீதிபதி ஆர்.எம். லோதா, அடங்கிய மூவர் குழு செவ்வாய்க்கிழமை, விதிகளை மதிக்காமல் அணியின் தலைமை நிர்வாகிகளுக்கு (குருநாத், ராஜ் குந்த்ரா) உடந்தையாக செயற்பட்டமைக்காக சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் ஆகிய அணிகள், ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்க இருந்து 2 ஆண்டுகள் இடைநீக்கம் செய்யப்படுகின்றன. இத்தீர்ப்பு அளிக்கப்பட்ட நாளில் (ஜூலை 14) இருந்து இந்த உத்தரவுகள் அமலாகின்றன என்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

## குழப்பத்தில் டோனி ! எவ்வணியில் களமிறங்குவார்?

கடந்த 2008 ஆம் ஆண்டில் பிரிமியர் தொடர் தொடங்கப்பட்டது முதல் சென்னை அணியின் அணித்தலைவராக இருப்பவர் டோனி. இதுவரை நடந்த 8 பிரிமியர் தொடரில் 2010, 2011ல் சாம்பியன் பட்டம் வென்று கொடுத்துள்ளார். இந்நிலையில், சூதாட்ட விடயத்தில் டோனியின் பெயரும் கடந்த சில ஆண்டுகளாக அவ்வப்போது அடிபட்டன.

தற்போது சென்னை அணிக்கு 2 ஆண்டு தடை விதிக்கப்பட்ட நிலையில் டோனி வேறு அணிக்காக விளையாடுவாரா அல்லது இந்த அணியில் நீடிப்பாரா என எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அரிசி கழுவிய நீர்...

### கூந்தலிற்கும், சருமத்திற்கும் ஒரே தீர்வு

**அழகு குறிப்பு**

அரிசி கழுவிய நீரானது கூந்தலின் எலாஸ்டிசிட்டியை அதிகரித்து, அதனால் முடி பாதிக்கப்படுவது தடுக்கப்படுவதாக ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

அரிசியை நன்றாக 2 முறை கழுவிக்கொள்ள வேண்டும், பின்னர் அரிசியை சுத்தமான நீரில் ½ மணி நேரம் ஊறவைத்து, அந்த நீரை வடிகட்டவேண்டும். பின்னர் அந்நீரால் முகத்தையும், கூந்தலையும் பராமரிக்கலாம்.

இவ்வாறு செய்தால் முகத்தில் உள்ள சுருக்கங்கள் அனைத்தும் நீங்குவதோடு, சருமத்-துளைகளும் அடைக்கப்படும். அரிசி கழுவிய நீரில் உள்ள சத்துக்கள் சருமத் துளைகளின் வழியே சரும செல்களுக்கு கிடைத்து, சருமம் ஆரோக்கியமாகவும் பொலிவோடும் இருக்கும். அதற்கு தினமும் ஒவ்வொரு முறை முகத்தைக் கழுவும் போதும், அரிசி கழுவிய நீரினால் கழுவ வேண்டும்.



## கால் வெடிப்பிற்கான தீர்வு



கால்வெடிப்புகள் வருவதற்கு கடினமான செருப்புகளும் ஒரு காரணம். அதுமட்டுமல்லாமல் சிலருக்கு சோப்பில் உள்ள வேதிப்பொருட்களின் ஒவ்வாமையினால் வெடிப்பு உண்டாகும். சிலர் பாதங்களை சுத்தமாக வைத்து கொள்வது இல்லை. இதனாலும் கால் வெடிப்புகள் வரும்.

கால் வெடிப்பு நீங்க சில எளிய வழிகள்

- வேப்பிலையில் மஞ்சள் சேர்த்து அரைத்து பூசினால் குணமாகும். நீங்கள் தினமும் சொரசொரப்பான கல்லில் காலை வைத்து தேய்த்தாலும் கால் வெடிப்பு மறையும்.
- கால் வெடிப்பிற்கு எலுமிச்சைச் சாறு, பயிற்றம் பருப்பு மாவு, வேப்பிலை, கஸ்தூரி மஞ்சள் ஆகிய வற்றை கலந்து, கால் வெடிப்புகளில் பூசி வர, கால் வெடிப்பு மறைந்து, பளபளப்பாகும்.
- இரவில் மிதமான சூட்டில் வெந்நீரில் எலுமிச்சை சாறு பிழிந்து அதில் கால்களை ஊற வைத்து, பிரீனால் தேய்க்கவும். கால் வெடிப்பு மறையும் வரைக்கும் செய்யவும்.
- ஒரு நாள் விட்டு ஒரு நாள் எலுமிச்சை பழ தோலால் பாதங்களை நன்றாக தேய்த்து கழுவ வேண்டும். இது கால் வெடிப்பில் உள்ள அழுக்குகளை நீக்கி, பாதத்தை சுத்தமாக்கும் மேலும் கிருமிகளை ஒழிக்கும்.
- மருதாணி இலையுடன் எலுமிச்சை சாறு விட்டு விழுதாக அரைத்து கால் வெடிப்பில் பூசி வர கால் வெடிப்பு குணமாகும்.
- கற்றாழையில் இருக்கும் ஜெல்லி போன்ற திரவத்தை தினமும் இரண்டு முறை பூசி வந்தால் இரண்டு மாதங்களில் வெடிப்பு சரியாகிவிடும்.

(கீதா)

## அம்மாவின் செல்லப் பிள்ளை

**குட்டிக் கதை**



கணேஷ் 9 ஆம் வகுப்பு மாணவன் ஒரு தனியார் பள்ளியில் படிக்கிறான். பயந்த சுபாவம் கொண்டவன். தந்தை சிறு வயதில் தவறி விட்டார். தந்தை ஒரு அரசு நிறுவனத்தில் வேலை பார்த்தார். வேலையில் இருக்கும் போது உயிர் பிரிந்ததால் அந்த வேலை அவர் மனைவி செல்லம்மாளுக்குக் கொடுக்கப்பட்டது. அம்மா செல்லம்மாளுக்கு வெளி உலகம் தெரியாது தன் மகன் வேலை வீடு என்று வாழ்பவள்.

கணேஷ் படிப்பில் கெட்டி, கொஞ்சம் விளையாட்டில் ஆர்வம் உண்டு. ஒரு நாள் தூரத்து எழுத்து மங்கலாக தெரிகிறது என்றான். மறுநாள் அவனை அழைத்துகொண்டு செல்லம்மாள் அரசு மருத்துவமனைக்கு சென்றாள். கணேஷை பரிசோதித்த டாக்டர் தூர பார்வை கண்ணாடி அணிந்தால் சரி ஆகிவிடும் என்றார். மருத்துவர் அறிவுரை படி கண்ணடி வாங்கி கொடுத்தாள் செல்லம்மாள் . அவனும் கண்ணாடி அணிவது ஒரு மாறுபட்ட அனுபவம், தனக்கு அழகு சேர்பதாக நினைத்து கொண்டான்.

வருடங்கள் நகர கணேஷ் 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றான். கணேஷ் படிப்பில் கவனம் செலுத்த ஆரம்பித்தான். மறுபடியும் அவனுக்கு தலை வலி மற்றும் கண் வலி வந்தது. அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றாள் செல்லம்மாள். மீண்டும் அதே தான் சொன்னார் மருத்துவர். பக்கத்து வீட்டு மாமி தனியார் மருத்துவமனையில் கொண்டு பரிசோதித்து பாருங்கள் என்றார். ஏன் நாம் போககூடாது என்று அந்த தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றாள். அவர்கள் நெடு நேரம் பரிசோதித்து பார்த்தனர். பின்பு ஒரு மருத்துவரிடம் அழைத்து சென்றனர். அவர் ஏதோ ஆங்கிலத்தில் பேச செல்லம்மாளுக்கு புரியவில்லை. மருத்துவர் சொல்லும் வார்த்தைகள் அவனுக்கு பரிச்சியம் இல்லாதவை. இருந்தாலும் புரிந்தது போல் தலை ஆட்டிவிட்டு வந்துவிட்டான்.

12 ஆம் வகுப்பு பொது தேர்வு நெருங்கியது அவன் மீண்டும் அந்த வலியில் துடித்தான் செல்லம்மாள் தேர்வு முடிந்த உடன் மருத்துவமனைக்கு அழைத்து போனாள். அப்போது தான் அவனுக்கு ஒரு அரிய நோய் இருப்பதை அறிந்தனர். அவனுக்கு அந்த நோயின் அறிகுறிகள் அதிகம் இருந்தது அந்த நோய் அவன் இரண்டு கண்களையும் பாதிக்கும் அபாயம் இருந்தது. அதை அந்த மருத்துவமனை சரியான முறயில் விளக்கவில்லை அவனுக்கு தற்காலிகமாக காண்டக்ட் லென்ஸ் பயன்படுத்த சொன்னார்கள் ஒரு கண் தான் பாதிக்கபட்டு இருப்பதால் அவன் அதை பயன்படுத்தவில்லை செல்லம்மாள் விவரம் தெரியாததால் எதுவும் சொல்லவில்லை.

12 ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றான். நல்ல மதிப்பெண் என்பதால் நல்ல கல்லூரியில் இடம் கிடைத்தது அவன் வாழ்க்கையின் திருப்பு முனை அந்த கல்லூரி வாழ்க்கை ஒரு வருடம் கல்லூரி விடுதியில் தங்கினான். பின்பு செல்லம்மாள் கணேஷை பிரிந்து வாழ முடியாமல் தன் வேலையை சென்னைக்கு மாற்றி கேட்டு வந்து விட்டாள். கணேஷ் வாழ்க்கையின் அனைத்து இன்பங்களும் அனுபவிக்க வேண்டும் என்பது செல்லம்மாளின் ஆசை அவன் இஷ்டம் போல் விட்டுவிட்டால்.

கணேஷ்க்கு வலிகள் இருந்தாலும் சுற்றம் அவனை அதை மறக்கடித்தது கல்லூரி. 3 ஆம் ஆண்டில் மீண்டும் வலி அதிகம் ஆனது அவன் அப்போது தான் தனக்கு என்ன நோய் என்று தீவிரமாக கேட்டான். அவன் இரண்டு கண்ணிலும் நோய் வந்து விட்டதாக தெரிய வந்தது. அவனால் சரியாக பார்க்க முடியவில்லை. இரவில் பார்வை ரொம்ப மோசமாகிவிட்டது. அவன் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது மீண்டும் மருத்துவமனை அழைத்து சென்றாள்.

மருத்துவர் கோபத்துடன் நான் முன்பு சொல்லி இருந்தது போல் ஒரு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் முதலில் இடது கண்ணில் பின்பு வலது கண்ணில் செய்ய வேண்டும் என்றார். அவள் சேர்த்து வைத்து இருந்த தொகையில் சிறிது எடுத்து இடது கண்ணில் அறுவை சிகிச்சை செய்தாள். அவன் வலியில் துடித்ததை விட செல்லம்மாள் துடித்தாள். கணேஷ் வழியில் துடித்தான் மூன்று மாதம் கழித்து மீண்டும் வலது கண்ணில் அறுவை சிகிச்சை சோதனை செய்யும் போது அவன் அந்த நோய் பற்றி விவரம் வேண்டும் என்றான்.

மருத்துவர் அவனிடம் என்ன சந்தேகம் உள்ளதோ கேள் என்றார்.

கணேஷ் : இந்த நோய் எனக்கு எப்படி வந்தது?

மருத்துவர் : இது யாரிடம் இருந்து தோற்றும் நோய் இல்லை. நீ அதிகம் கண்கள் கசக்கும் பழக்கம் உள்ளவன் அதுவே இதற்கான முதல் காரணம்.

கணேஷ் : இந்த நோய் எல்லோருக்கும் வருமா?

மருத்துவர் : இல்லை இது 10000 த்தில் ஒருவருக்கு தான் வரும் நீ கவலை படதே குணப்படுத்திடலாம்

கணேஷ் :என்னால முடியல எப்போ குணமாகும்?

மருத்துவர் : இந்த ஒரு அறுவை சிகிச்சை அப்புறம் எல்லாம் சரியாய் போய்டும்.

வலது கண்ணிலும் அறுவை சிகிச்சை முடிந்தது. அவன் கவலை அதிகம் ஆனது அவன் முன்பு போல் வெளிய செல்ல முடியவில்லை இதை அவன் நண்பர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவன் பார்வை முன்பை விட மோசமாகிவிட்டது. இதை அவனால் அம்மாவிடம் சொல்ல முடியவில்லை. யாரும் இல்லா வேளையில் தனியே அழுது புலம்புவான். அவனால் எதுவும் செய்ய முடியவில்லை

அறுவை சிகிச்சைக்கு பின்னும் இரண்டு கண்களினதும் நிலைமை மோசமாகிவிட்டது. இதை அவன் அம்மாவிடம் சொல்ல முடியாமல் சொல்ல அவள் பதறி போனால் உடனே அழைத்து சென்றாள் மருத்துவரிடம்.

செல்லம்மாள் : என் மகனுக்கு வந்து இருக்கும் நோய் என்னனு நான் தெரிஞ்சிக்கலாமா எனக்கு புரியும் வகையில் சொல்லுங்கள் என்றாள்.

மருத்துவர் : உங்கள் மகனுக்கு வந்து இருக்கும் நோய் keratoconus கருவிழிக் கூம்பல் என்று சொல்லுவார்கள் இந்த நோய் கண் பார்வையை மெல்ல அழிக்கும் இதை சரியாக பார்க்காமல் விட்டால் கண் பார்வையை இழந்து விடுவர்.

செல்லம்மாள் : இதற்கு தீர்வு இல்லையா ??

மருத்துவர் : ஒரே தீர்வு கருவிழி மாற்று சிகிச்சை தான். அதுவும் எல்லாருக்கும் செய்ய முடியாது அதற்கு நிறைய விதி முறை இருக்கு.

செல்லம்மாள் கவலையுடன் வெளியே வந்தாள். என்ன செய்வது யாரு செய்த பாவம் என் மகனை காவு வாங்குதோ. கணேஷுக்கு சில ஆண்டுகளுக்கு முன்னே இதை பற்றி தெரியும். சொன்னால் அம்மா வருத்தப்படுவார் என்று சொல்லவில்லை. செல்லம்மாள் கணேஷை நன்றாக பார்த்து வந்தாள் .

கணேஷ் தன்னால் அம்மாவுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை என்ற வருத்தப்பட்டான். அவனை நோய் முழுமையாக விழுங்கியது பார்வையை இழந்தான். கணேஷ் செல்லம்மாள் இருவரையும் சோகம் சூழ்ந்தது. செல்லம்மாள் அன்று வேலைக்கு கட்டாயம் செல்ல வேண்டும் என்றவுடன் கணேஷ் ஒரு ஏக்கத்துடன் அம்மாவை பார்த்தன்.

கணேஷ் "இந்த உலகத்தில் நம்மால் வாழ முடியும் ஆனால் நான் என் அம்மாவுக்கு எதுவும் செய்யவில்லை இனி நான் என்ன செய்வது?" ஒரு காகிதம் எடுத்தான், எழுதினான்

"என் அன்பு அம்மாவுக்கு
என்னை இத்தனை வருடம் கஷ்டப்பட்டு வளர்த்ததுக்கு என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நான் பட்ட துன்பம் உனக்கு தெரிய வேண்டாம் என்று நினைத்தேன் விதி விடவில்லை என்னை வென்றது. நிகழ்காலம் உன் மகன் பெயர் சொல்லும் என் உடல் உறுப்புகள் அனைத்தையும் தானம் செய்து விடு. இது தான் என் இறுதி ஆசை"
உன் அன்பு மகன்
கணேஷ்"

கண்ணீருடன் அம்மா புகை படம் பார்த்து கொண்டு தனக்கு மருத்துவர் கொடுத்த மருந்தை அளவுக்கு அதிகமாக அருந்தினான். அதில் இருக்கும் வேதியியல் அவன் உயிரை எடுத்தது. அவன் இறுதி கண்ணீர் துளி வேறு ஒருவனின் வாழ்க்கையில், பட்டு போன செடியில் ஊற்றும் அமிர்த நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் 62

# "பெற்றோரும் பிள்ளைகளும்"

(வி.என்.சந்திரகாந்தி)



உலகத்தில் உள்ள ஜீவராசிகள் அனைத்துக்குமே உரிய உறவு முறைகளில் மிகவும் பிரதான இடம் பெறுவது பெற்றோர் பிள்ளைகள் உறவு முறைதான்.!

வீதியில் விளையாடிக்கொண்டிருக்கும் தனது மழலைச் செல்வத்தை, சீறிகொண்டு ஓடிவரும் சிங்கத்திடம் இருந்து காப்பாற்ற குறுக்கே பாய்ந்து தனது இன்னுயிரை ஈய்ந்த அன்னை பற்றி நாம் அறிவோம்!

தனது பிள்ளைகள் மேல் விழும் பழிகளை தாம் எந்த தவறும் செய்யாத நிலையிலும் தாமே ஏற்று தண்டனை அனுபவித்த தந்தையர்களும் ஏராளம்!அதுவே பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே உள்ள குற்றமற்ற பாச உணவர்வு!

பிள்ளைகள் எப்படி உருவாகின்றார்கள். என்பதை பொற்றோர் அறிவர். ஆனால் பெற்றோர் எப்படி தமக்கு அமைந்தார்கள் என்பதை பிள்ளைகள் அறியார்...!

சமூகத்தில் இளைஞர்களும் யுவதிகளும் விவாக வயதை எய்தும் போது தாமே காதல் வயப்பட்டு அல்லது பெற்றோரின் தூண்டுதலால் விவாகம் செய்து கொள்கின்றார்கள். அவர்களது அன்பு மேலீட்டால் அவர்களுக்கு குழந்தைகள் பிறப்பதும் பெற்றோராவதும் தொடர் நிகழ்வுகளாகும்.

கணவனும் மனைவியும் ஒற்றுமையாக இருந்து குடும்பம் நடாத்துவது பிள்ளைகளின் நலனுக்கும் வளர்ச்சிக்கும் மிகவும் இன்றியமையாதது. ஆனால் அப்படி நடக்கின்றதா? இல்லவே இல்லை!

கணவன் மனைவி மேலும் மனைவி கணவன் மேலும் குற்றம் சுமத்துகின்றனர்.

மனைவி கூறுகிறாள்....

'உனது முயற்சியும் சம்பாத்தியமும் போதாது.... நீ தூங்குவதுதான் அதிகம்... எனது ஆண்பிள்ளையின் படிப்புச் செலவுக்கு என்ன சேர்த்து வைத்திருக்கிறாய், எனது பெண் பிள்ளையின் விவாகத்துக்கு பணமும் பொருளும் வேண்டுமே... எங்களுக்கு வயது போய் இயலாமை வரும் போது நாம் சுதந்திரமாக ஆறி இருக்க ஒரு வீடு வேண்டுமென்ற நினைப்பு உனக்கு இருக்கின்றதா ?

அதே போன்று .... கணவன் மனைவியை விட்டு வைக்கின்றானா....?

'நீ வரும் போது தாய் வீட்டால் எதனைக் கொண்டு வந்தாய்...? உனது முயற்சியால் கிடைக்கும் சம்பாத்தியம் என்ன? உனது ஆடம்பரமல்லவா எனது சம்பாத்தியத்தையும் விழுங்கிவிடுகிறது. எனது சகோதரிக்கு உதவி செய்வதை தடுக்கும் நீ. நான் அறியாமல் உனது பெற்றோருக்கு செய்யும் உதவிகளால் எமது குடும்ப பணம் அத்தனையும் போய்விடுகின்றனவே...!

அப்படியெல்லாம் வாக்குவாதப்பட்டு அடிபிடிப்படுவதை தவிர்த்து பெற்றோர் ஆரம்பம் முதலே பிள்ளைகளில் அதீத கவனம் உரிய நேரத்தில் பெற்றுத்தரவேண்டும். ஆரம்ப கல்வியை புகட்ட அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்.... பக்கத்து வீட்டு பிள்ளைகளுடன் ஒப்பிட்டு தாழ்த்தி கதைக்க கூடாது. அவர்களை தண்டிக்காமல் அன்பால் திருத்த வேண்டும்...!

இனி பிள்ளைகளை எடுத்தால் அவர்கள் பெற்றோரின் இன் முகத்தாலும் சிரிப்பாலும் மகிழ்ச்சியடைபவர்கள். அவர்களது மெல்லிய இதயம் எப்போதும் பெற்றோரின் அன்புக்காகவே ஏங்குகின்றது. பெரியோர்களை போற்ற வேண்டும். கல்வி விளையாட்டு இரண்டிலும் திறமை காட்ட வேண்டும்.

மழலைச் செல்வங்கள் இல்லாத வீடு தெய்வம் குடியிருக்காத வீடு என்றும் சொல்வார்கள். ஒரு குடும்பத்தின் மகிழ்ச்சி முற்று முழுதாக எமது பிள்ளைகளில் தான் தங்கியுள்ளது. நாம் அவர்களை சமூகத்துக்கும் நாட்டுக்கும் உகந்த பிள்ளைகளாக வளர்க்க வேண்டும்.

மாலை வேளைகளில் அவர்கள் நண்பர்களுடன் உற்சாகமாக விளையாடுவதற்கு அதிக அளவு 'குளுக்கோஸ்' அவசியமாகின்றது. தமது விளையாட்டு பயிற்சிகளிலும், பாடசாலை விளையாட்டுப்போட்டிகளிலும் சரி அவர்கள் சிறந்த முறையில் வெற்றி பெறுவதற்கு நிறைய 'புரோட்டீன்ஸ்' கலந்த பால் மா வகைகளை நாம் தெரிவு செய்து பருக வைக்கவேண்டும்.

எமது பிள்ளைகள் நல்ல நண்பர்களுடன் பழகுவதை நாம் உறுதிசெய்ய வேண்டும். எமது பிள்ளைகளின் நண்பர்களின் பெற்றோர் எமது குடும்ப நண்பர்களாக இல்லாவிட்டாலும். கூட பரவாயில்லை அவர்களை நாம் அறிந்துவைத்திருக்க வேண்டும். எமது பிள்ளைகள் வெளியில் எப்படி நடந்து கொள்கின்றார்கள். என்பதை அவர்கள்தான் எமக்கு முன்பதாக தமது பிள்ளைகள் வாயிலாக அறிந்து கொள்கிறார்கள். பல பெற்றோர்கள் எமது பிள்ளைகள் மீது அன்பு வைத்து எமக்கு ஆலோசனையும் கூறுவார்கள்.

பிள்ளைகள் எப்போதுமே புதிய புதிய இடங்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் உடையவர்கள். நாம் அவர்களின் வயது கல்வி ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு சுற்றுலாவுக்கு அழைத்துச்செல்ல வேண்டும். கல்விசார்ந்த சுற்றுலாக்களையும் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

உலகம் இப்போ நன்கு சுருங்கி விட்டது. அதற்கு காரணம் கணனி. கணனியில் நாம் உலகின் பல்வேறு இடங்களையும் ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு பார்க்க கூடியதாக இருக்கின்றது. அது எமக்கு மகிழ்ச்சியை தருகின்றது. ஆனால் எமது பிள்ளைகள் அப்படி திருப்தி கொள்ள மாட்டார்கள். இயன்ற வரையில் எமது பிள்ளைகளுக்கு உலகை சுற்றிக்காட்ட வேண்டும். உலகில் பார்க்க வேண்டிய இடங்கள் நிறைய இருக்கின்றன. சுடுநீர் கிணற்றையும் மாபிள் பீச்சையும், நிலாவரையையும் திரும்ப திரும்ப பார்ப்பதனால் பிள்ளைகளுக்கு என்ன முன்னேற்றம் ஏற்படும்.

இதற்கு அடுத்தபடியாக கணனி பற்றிய அறிவு பிரதானமாகின்றது. பிள்ளைகளுக்கு அவசியமான கற்கைக்கு கணனி உறுதுணையாக இருக்கின்றது. வாசிப்பு பழக்கம் அருகி வருவதற்கு கணனி மீது குற்றம் சுமத்துகிறார்கள். உண்மையில் கணனியிலேயே வாசிப்பதற்கும் தெரிந்து கொள்வதற்கும் நிறைய விடயங்கள் இருக்கின்றன. அவற்றை நாம் தான் தேடிப்படிக்க கொடுக்க வேண்டும்.

இந் நாட்களில் நிறைய சஞ்சிகைகளும் புதினப்பத்திரிக்கைகளும் வெளிவருகின்றன. சிறுவர் சஞ்சிகை, மாதர் சஞ்சிகை என்று சிறுவர்களுக்கும் மாதர்களுக்கும் ஏற்ற சஞ்சிகைகளும் பிரசுரமாகின்றன. நாம் தரமான சஞ்சிகைகளை எமது சிறார்களுக்கு நிறைய பெற்றுக்கொடுக்க வேண்டும். தரமற்ற சஞ்சிகைகளை ஒதுக்கி விட வேண்டும். பிள்ளைகளுக்கு அறிவுத்தேட்டம் • இருக்க வேண்டும். அப்பா, அம்மா. தாத்தா, அம்மம்மா என்ற வட்டத்துக்குள் அவர்கள் முடங்கிவிடக்-கூடாது.

எனது நண்பரின் பெறாமகள் ஒருத்தி இளவயதில் தாய் தந்தையரை இழந்த நிலையில் அவரது கண்காணிப்பில் இருந்து வந்தாள். அவளுக்கு ஆண், பெண் என இரு குழந்தைகள். கணவனிடம் எந்தவித தீய பழக்கங்களும் இல்லாவிட்டாலும் மனைவியுடன் சிறுசிறு பிரச்சனைகள் ஏற்படுவதை அவனால் தவிர்க்க முடியவில்லை. அவரது பெறாமகளும் நல்ல வளர்ப்பில் உருவானவள். எனவே எவருக்கும் எந்த ஆலோசனையும் அவரால் கூறமுடியவில்லை. இந்த நிலையில் போரனும் பேர்த்தியும் அவருக்கு புதினம் சொல்லுமளவுக்கு சிறிது வளர்ந்து விட்டார்கள்.... பேரன் வீட்டில் நடக்கும் சம்பவங்களை அவருக்கு சிரித்த படி கூறுவான். அப்பப்பா, நேற்று அப்பாவும் அம்மாவும் பெரிய சண்டை. அப்பா அம்மாக்கு ஏசி விட்டார்... என்று இடையிடையே... வெகு அபூர்வமாகத்தான்... கூறுவான். பெறாமகள் முகத்தில் எதையும் காட்டிக்கொள்ளமாட்டாள்... அதிலிருந்து பெரிதாக சண்டைகள் இருக்காது என்ற ஊகத்துக்குதான் அவர் வந்தார்.


எதேச்சையாக ஒருநாள் அவர் பேர்த்தியிடம் உனது அண்ணா கூறுவதெல்லாம் உண்மையா? என்று கேட்டார்

அதற்கு அவள்... 'அண்ணா கூறுவதெல்லாம் உண்மைதான்... ஆனால் அம்மா அப்பாவை திருப்பி ஏசுவதை அவன் உங்களுக்கு ஒரு போதும் கூறியதில்லை என்றான்.

வாயடைத்து நிற்பதை தவிர அவரால் என்ன செய்திருக்க முடியும்!



# வார்த்தைகளின் அழகும் அசிங்கமும்



சஞ்சயன் செல்வமாணிக்கம்

**கடந்தவார தொடர்ச்சி ...**

**அழகிய அன்பான வார்த்தைகளைக் கேட்கும்போது நாம் உயிர்க்கிறோம். அதே போல் வார்த்தைகள் அசிங்கமானவையாக, அருவருப்பானவையாக மாறும் போது எமது மனம் சுருங்கி புண்பட்டுப்போகிறது. நான் வார்த்தைகளால் உயிர்த்துமிருக்கிறேன், உயிர்ப்பித்துமிருக்கிறேன். அதே போல் சிலரை புண்படுத்தியுமிருக்கிறேன், புண்பட்டுமிருக்கிறேன்.**

அருகில் நின்றிருந்து முதலாம் வகுப்பு மாணவர்களுக்கு பிரச்சனை என்ன என்பது புரிந்திருக்காவிட்டாலும் மேசையின் மீது சிலைபோல நின்றிருந்த என்னை ஆ என்று வாயைத் திறந்தபடியே அண்ணாந்து பார்த்தபடியே நின்றிருந்தார்கள். எனக்கு அவ்விடத்திலேயே உயிர்போகாதா என்னுமளவுக்கு அவமானத்தை உடலெல்லாம் உணர்ந்து கொண்டிருந்தேன்.

அன்றைய கூட்டம் முடிவடைந்த பின்பும் இறங்கிப் போ என்ற கட்டளை கிடைக்கவில்லை. ஏனைய நாட்களில் அதிபரே முதலில் மண்டபத்தை விட்டு வெளியேறுவார். அன்று அவர் நின்றிருக்க ஆசிரியர்கள் வெளியேறினார்கள். அவர்களில் சிலர் என்னை நிமிர்ந்து பார்த்து ஏளனமாய் சிரித்துப்போனார்கள். மாணவர்கள் வெளியேறிக்-கொண்டிருந்த போது என்னால் தண்டிக்கப்பட்ட பல மாணவர்கள் என் நிலையைப் பார்த்து மகிழ்ச்சியுடன் கடந்துபோனார்கள். இகழ்ச்சித்தும் போனார்கள்.

அனைவரும் வெளியேறிய பின் "எனது கந்தோருக்கு வா" என்று ஆங்கிலத்தில் கட்ளையிட்டுவிட்டு அகன்றார் அதிபர். அவமானத்தின் கனத்தை அணு அணுவாக உணர்ந்து கொண்டிருந்தேன். மெதுவாய் என்னை சுதாரித்துக்கொண்டு அதிபரின் அலுவலத்திற்கு செல்லலானேன். மண்டபத்தில் இருந்து அவரின் அலுவலகத்திற்கு செல்ல வேண்டும் என்றால் பல வகுப்புக்களைக் கடந்து செல்லவேண்டும். அனைத்து மாணவர்களும் என்னையே பார்த்து நகைப்பது போலிருந்தது. குனிந்ததலை நிமிராது அவமானத்தை சுமந்தபடியே அதிபரின் அலுவலகத்தை வந்தடைந்தேன்.

உள்ளே வா என்று ஆங்கிலத்தில் கட்டளை வந்தது. நடுங்கியபடியே உள்ளே செல்கிறேன். உன்னை நினைத்து வெட்கப்படுகிறேன் சஞ்சயன் என்றார். குனிந்த தலையை நிமிர்த்த முடியாது நின்றிருந்தேன்.

இந்தப் பாடசாலையின் முதன்மை மாணவன் நீ. ன் மாதிரியாக இருக்கவேண்டியவன். தவறுகளை நீயே செய்து கொண்டு எவ்வாறு அதே தவறுகளை செய்பவர்களை திருத்தப்போகிறாய்? உனது தாயார் உனது பழக்கவழக்கங்களை அறிந்தால் எவ்வளவு வேதனைப்படுவார்? இப்படி அடிமனதை உலுக்கும் கேள்விகளால் என் மனச்சாட்சியின் கதவினை தட்டிக்கொண்டிருந்தார். அவர் கடும் கோபத்தில் இருப்பதை அவர் குரல் காட்டிக்கொண்டிருந்தது.

சற்று நேரத்தின் பின் "எனது கந்தோரை விட்டு வெளியேறு" என்றார் கோபமான ஆங்கிலத்தில். நான் குனிந்த தலையுடன் அவரின் அலுவலகத்தைவிட்டு வெளியேறினேன்.

இந் நிகழ்வின் பாதிப்பு என்னை விட்டு இலகுவில் அகலவில்லை. அதன் பின் ஏறத்தாள 20 ஆண்டுகளின் பின்னான ஒர் நாள் எனது அதிபரை சந்திக்கிறேன். இன்னும் என் பெயரை மறக்காது "சஞ்சயன் வா வா" என்றார் ஆங்கிலத்தில்.

பலதையும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது மேலே எழுதிய கதையை அவருக்கு நினைவுபடுத்தினேன். கண்களைச் சுருக்கியபடியே சிரித்தார். சில கணங்கள் மௌனமாய் கழிந்தன. என்னை நிமிர்ந்துபார்த்தபடியே நான் ஆசிரியனாய் வெற்றிபெற்றிருக்கிறேன் என்பதை அறிவிக்கிறாய் என்றார். அவரின் கண்கள் கலங்கியிருந்தன. சுற்றாடலின் மௌனம் எங்களை தாலாட்டிக்கொண்டிருக்க

வார்த்தைகளால் உயிர்த்திருந்தோம் நாமிருவரும்.

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு



## திரை விமர்சனம்

### ஜீத்து ஜோசப்பின் கமல்ஹாசன், கௌதமி நடிக்கும் "பாபநாசம்"

மலையாளத்தில் பார்க்காதவர்களுக்கு மட்டும் தான், ஏனெனில் அப்படத்தில் எந்த ஒரு மாற்றமும் செய்யாமல், இருந்தாலும் புதிதாக வந்திருக்கிறது பாபநாசம்.

அம்மா, அப்பா யாரும் இல்லாமல் தன் சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்தவர் சுயம்பு லிங்கம் (கமல்ஹாசன்). அதனால், ஒரு பைசா வரதட்சனை வாங்காமல் ராணியை (கௌதமி) திருமணம் செய்து கொண்டு, அன்பான 2 பெண் குழந்தை, அழகான குடும்பம் என அரசாங்க விளம்பர அட்டையில் வருவது போல் நிம்மதியாக வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், இவர்கள் வாழ்க்கையில் செல்போன் என்ற டெக்னாலஜி விளையாடுகிறது. கமலின் மூத்த மகள் (நிவேதா தாமஸ்) பள்ளியிலிருந்து ஒரு ட்ரீப் செல்ல, அங்கு ஒருவன் நிவேதா தாமஸ் குளிப்பதை படப்பிடித்து, என்னுடன் நீ வர வேண்டும் என மிரட்ட, கௌதமியும், நிவேதாவும் ஒரு கட்டத்தில் அவனை கொன்று புதைக்கிறார்கள். அந்த பையன் IG மகன் என்பதால் பிரச்சனை பெரிதாகின்றது. இந்த விஷயம் கமலுக்கு தெரிய, இந்த கொலையை எப்படியெல்லாம் மூடி மறைக்கிறார், காவல்துறை இதை கண்டுப்பிடித்ததா? கமலுக்கு தண்டனை கிடைத்ததா? இல்லை தப்பித்தாரா? என நகத்தை கடித்து கொள்ளும் அளவிற்கு த்ரில்லாக செல்வது தான் மீதிக்கதை.

கமல்ஹாசன் நடிப்பை மோகன் லாலுடன் ஒப்பிடுவார்கள், ஆனால், கமலை தவிர வேறு யாரும் இந்த கதாபாத்திரத்தை 100% கொடுத்திருக்க முடியாது. கௌதமியை உண்மையாக குறை சொல்லும் படி இல்லை, அதே நேரத்தில் மீனா அளவிற்கு இல்லை என்பது தான் நிதர்சனம். அதிலும் ரியல் லைப் ஜோடி என்பதால் கணவன், மனைவி காதல் காட்சிகள் படு யதார்த்தம். நீண்ட இடைவேளைக்கு பிறகு வேஷ்டி, சட்டை நெல்லை தமிழ் என கமல் மனதை கொள்ளை கொள்கிறார். இரண்டாம் பாதியில் வரும் அடுத்தடுத்த டுவிஸ்ட், அடுத்து என்ன நடக்கும் என எண்ண வைக்கின்றது.

மொத்தத்தில் தன் பாப்பா வாழ்க்கை நாசம் ஆக கூடாது என்று கமல் மட்டும் பதட்டமாகவில்லை, படம் பார்க்கும் அனைவரையும் நகம் கடிக்கும் அளவிற்கு பதட்டத்தை ஏற்படுத்துகின்றது இந்த பாபநாசம்.



## ஆக்ஷன் ஹீரோயின் ஆகும் திரீஷா



திரிஷாவுக்கு திடீரென அதிரடியான ரோல்களில் நடிக்க வேண்டும் என்ற ஆசை வந்துள்ளதாம். எதிரிகளை அடித்து நொறுக்கி அள்ளிப் போட வேண்டும், அதிரடியான, அடிதடியான ரோல்களில் நடிக்க வேண்டும் என்ற ஆவல் அவரை உந்தித் தள்ளுகிறதாம். இந்த ஆசை காரணமாக சமீப காலமாக அவர் ஆக்ஷன் படங்களை அதிகமாக பார்க்கிறாராம். அதுவும் அதிரடி நாயகிகளின் படங்களை அதிகமாக பார்க்கிறாராம்.

ராஜமௌலியின் இயக்கத்தில் வெளியான "பாகுபாலி" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......



## மறப்பேன், மன்னிக்க மாட்டேன்

சிம்புவிற்கு மிகவும் மோசமான தருனம் இது, அவர் நடிப்பில் வாலு திரைப்படம் தள்ளிக்கொண்டே போகின்றது, இப்படத்தை ஒரு சிலர் வேண்டுமென்றே வரவிடாமல் செய்கிறார்கள் என கூறி வருகின்றனர். இதுபோன்ற கருத்துக்களை சிம்புவும் தன் டுவிட்டர் பக்கத்தில் ரீடுவிட் செய்து வருகின்றார்.

மேலும், அவரின் டுவிட்டில் 'நான் மன்னித்து விட்டேன், ஆனால், ஒரு போதும் மறக்க மாட்டேன்' என கூறியுள்ளார். இவர் இப்படி யாரை சொல்கிறார் என யாருக்கும் தெரியவில்லை. ஆனால் வாலுவிற்கு நீதிமன்ற தடை விதிக்கப்பட்டுள்ளது.

## மிரட்டும் வசூலில்

உலகம் முழுக்க 4000 திரையரங்குகளில் வெளியான "பாகுபலி" படம் முதல் நாளில் மட்டும் 50 கோடி ரூபாவை அள்ளியுள்ளது. பாகுபலி படம் சினிமா ரசிகர்களிடையே மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் மட்டும் 379 திரையரங்குகளில் வெளியாகி-யுள்ளது. இதில் தெலுங்கு பாகுபலிக்கு மட்டும் 46 திரையரங்குகள் ஒதுக்கப்பட்டன. வெளியான முதல்நாளே மிரட்டும் வசூலைப் பெற்றுள்ளது 250 கோடி செலவில் உருவாக்கப்பட்ட பாகுபலி.

## இசையுலகின் ஜாம்பவானை இழந்தது திரையுலகம்

எம்.எஸ்.விஸ்வநாதனின் இந்த இயற்கை மரணம் ஒரு இசைப் பயணத்தின் வருத்தமான நிறுத்தம். தமிழ் திரைப் பாடல்களில் வந்த நல்லிசை எல்லாம் அவர் வழங்கியதால், மெல்லிசை மன்னர் என்று தமிழ் ரசிகர்களால் போற்றப்படு-கிறார். அவர் பாடல்கள் எல்லாம் வந்த காலத்தில் மட்டும் எங்கும் ஒலித்துவிட்டு பிறகு மங்கிப்போகவில்லை. எந்த காலத்திலும் மீண்டும் மீண்டும் அசைபோடும் சுவையாகும். தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி என எல்லா மொழிகளிலும் 1200 திரைப்-படங்களுக்கு இசையமைத்து மாபெரும் சாதனைபடைத்-துள்ளார். இதில், தமிழ்ப் படங்கள் மட்டுமே 800. இசையுலகின் ஜாம்பவான் எம்.எஸ்.வியின் மரணத்திற்கு அஜித் படப்பிடிப்பிற்காக வெளிநாட்டில் உள்ளதால் தான் அவர் வரவில்லை என்று தெரிகின்றது. எம்.எஸ்.வி அவர்கள் முதன் முதலில் திரையில் நடிகனாக தோன்றியது அஜித் நடித்த காதல் மன்னன் படத்தில் தான் என்பது குறிப்பிடத்தக்கது. கலைமாமணி விருது, பரமாச்சார்யா விருது, கோல்டு ரெமி விருது, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்திலும், சத்யபாமா பலகலைக்கழகத்திலும் அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது. திரை இசை சக்கரவர்த்தி என்ற பட்டமும் 60 தங்க நாணயங்களும், ஒரு காரும் எம்.எஸ்.வி.க்கு தமிழக முதல்வர் ஜெயலலிதாவால் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

## MOBILE

## முற்றான தானியங்கிக் கார்கள்



கூகுள் நிறுவனம் உட்பட மேலும் சில கார் வடிவமைப்பு நிறுவனங்கள் ஓட்டுநர் இன்றி இயங்கக்கூடிய கார்களை வடிவமைத்துள்ளன. 2030 ஆண்டளவில் பாவனைக்கு வரும் முற்று முழுதாக இலத்திரனியில் தொழில்நுட்பத்தினைக் கொண்ட தானியங்கிக் கார்கள் தற்போது பரிசோதிப்பில் உள்ள நிலையில் இவற்றினால் சூழலுக்கான பாதிப்பு 90 சதவீதம் இல்லை என ஆய்வு ஒன்றின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை தற்போது சோதனையில் இருக்கும் தானியங்கிக் கார்கள் பகுதியாக எரிபொருளில் இயங்கக்கூடியன என்பது குறிப்பிடத்தக்கது.

## OTHER

## சவுதி அரேபியாவின் சூப்பர் கணனி

உலகில் அதிக வினைத்திறன் கொண்ட கணனிகளாக சூப்பர் கம்பியூட்டர்கள் காணப்படுகின்றன. இவற்றில் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளின் கம்பியூட்டர்கள் முன்னணியில் திகழ்கின்றன. இவ்வாறான கம்பியூட்டர்களுடன் முதன் முறையாக மத்திய கிழக்கு நாடு ஒன்றின் சூப்பர் கம்பியூட்டர் இணைந்துள்ளது.

இக் கம்பியூட்டரானது சவுதி அரேபியாவிலுள்ள கிங் அப்துல்லா பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரிவில் காணப்படும் Shaheen II ஆகும். இக் கம்பியூட்டரானது 6,000 இற்கும் அதிகமான நோட்ஸ்ஸில் சுமார் 200,000 வரையான புரோசஸ்களை மேற்கொள்ள வல்லதாக இருப்பதுடன், 17.6 Petabytes சேமிப்பு நினைவகம் மற்றும் 790 Terabytes RAM என்பவற்றினைக் கொண்டுள்ளது. இக் கம்பியூட்டரினால் ஒரு செக்கனில் செய்யப்படும் வேலைகளை செய்து முடிப்பதற்கு மனிதனுக்கு 32,000,000 வருடங்கள் எடுக்கும் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.



## அணைத்துவிட்டு இனி தூங்க முடியாது!!

ஸ்மார்ட்போனிற்காக பல வகை துயிலெழுப்ப உதவும் அலார செயலிகள் இருக்கின்றன. இவற்றை எல்லாம் ஏமாற்றி விட்டு நாம் மீண்டும் தூங்க சென்றுவிடுவோம். ஆனால் தற்போது வந்திருக்கும் புதிய அலார செயலி அப்படி மீண்டும் தூங்குவதற்கு எளிதில் அனுமதிக்காது. அதனால் தான் இந்த செயலி தன்னை தானே எரிச்சலூட்டக்கூடிய துயிலெழுப்பும் செயலி என வர்ணித்துக்கொள்கிறது. இந்த அப்பிளிகேஷன் பெயர் Alarmy.

இதில் அலாரம் ஒலித்த பின் எளிதாக இதனை நிறுத்திவிட முடியாது. போனில் ஒரு ஒளிப்படத்தை எடுத்த பின் தான் இது மௌனமாகும். அதுவரை இது ஒலித்துக் கொண்டே இருக்கும்.

## இலகுவாக நடக்கப் போறீங்களா??



யூடியூப்பில் விசித்திரமான வீடியோக்களை தரவேற்றம் செய்வதில் பிரபலமானவரான Izzy Swan என்பவர் இலகுவாக நடக்க உதவும் இயந்திரம் ஒன்றினை உருவாக்கியுள்ளார்.

20 வோல்ட் மின்சக்தியில் செயல்படும் ட்ரில்லர் ஒன்றின் உதவியுடன் இயங்கக்கூடிய இவ் இயந்திரம் மீண்டும் மீண்டும் சார்ஜ் செய்து பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. சுமார் 167 கிலோ கிராம் வரையான எடையை இவ் இயந்திரம் தாங்கிச் செல்லக்கூடியதாக காணப்படுகின்றது.

## YOLK இலகு சார்ஜர்



கைப்பேசிகள் மற்றும் டேப்லட்கள் போன்ற மொபைல் சாதனங்களை சார்ஜ் செய்வதற்கு மிகவும் மெலிதானதும், எடை குறைந்ததுமான சார்ஜர் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. YOLK எனப்படும் இச் சார்ஜர் சூரிய சக்தியில் செயல்படக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், சிறிய குறிப்பிடும் புத்தகங்கள், டயரி என்பவற்றுக்குள் வைத்து எடுத்துச் செல்லக்கூடியதாகவும் இருக்கின்றது.

இவை 2.5W, 5W, 7.5W, 10W மின்சக்தியை வெளிவிடக்கூடியதாக இருப்பதுடன் iPhone 6 கைப்பேசியினை 2.5 மணி நேரத்தில் முழுமையாக சார்ஜ் செய்துகொள்ள முடியும்.

## தொடுதிரையை பாதுகாக்க சிரமமா?

## இனி கவலை வேண்டாம்




தொடுதிரைத் தொழிநுட்பத்தினைக் கொண்ட ஸ்மார்ட் கைப்பேசிகளில் காணப்படும் முக்கியமான பிரச்சனையாக தொடுதிரை-யினை பாதுகாத்தல் காணப்படுகின்றது.

இந்த பிரச்சனைக்கு தீர்வாக புதிய வகை பிளாஸ்டிக் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பிளாஸ்டிக்கில் கீறல்கள் ஏற்படும்போது விசேட இரசாயனப் பதார்த்தம் ஒன்று இடுவதன் மூலம் குறித்த கீறல்கள் தானாகவே மாயமாகும்.

மேலும் 3 செனரி மீற்றர்கள் வரையான துளைகளையும் தானாகவே இல்லாமல் செய்யும் ஆற்றல் கொண்டது.

## சோலர் திட்டம்



நாசா நிறுவனம், தற்போது விண்வெளியில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கான மிகப்பெரிய திட்டத்தில் இறங்கியுள்ளது. இதற்கான சன் டவர், ஸ்பேஸ் ஆல்பா, ஸ்பேஸ் டக்போட்ஸ், சான்விட்ச் கான்செப்ட் என பல திட்டங்கள் ஆய்வு நிலையில் உள்ளன.

இதற்காக சுமார் ரூ.75 ஆயிரம் கோடி நிதியை ஒதுக்கப்பட்டுள்ளது. சன் டவர் திட்டத்தின் மூலம், சோலார் தகடுகளை தரையிலிருந்து வானில் அமைத்துச் செல்ல உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## கணனி பற்றி கண்ணோட்டம் - அதன் வரலாறும், ஏற்பட்ட மாற்றங்களும்

இன்றைய உலகில் அதிமுக்கிய சாதனம் எதுவென்று கேட்டால் அது கணினி என்றே கூறுவர். கணினியின்றி உலகமே இயங்காது என்று கூறும் அளவுக்கு அனைத்து துறைகளிலும் அதன் பங்கு மகத்தானது. ஆரம்ப காலத்தில் கணினி பெரிய பெரிய ஆய்வுகூடங்கள், பல்கலைகழகங்கள், உயர் தொழில்நுட்ப கூடங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டன. பிறகு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்தது. இவ்வாறாக காணப்படுகின்ற இன்றைய கணினியின் வரலாற்றை அதன் ஆரம்பத்திலிருந்து சற்றுப் புரட்டிப் பார்ப்போம்.

தனித்தனியாக திரிந்த ஆதிமனிதன் நாகரிகம் தோன்றியதன் காரணமாக கூட்டமாக ஒரே இடத்தில் வாழத்தொடங்கினான். அப்போது அவனுக்கு தன் வளர்ப்பு பிராணிகளை எண்ணுவதற்கு, உணவு தானியங்களை அளவிடுவதற்கு, பங்கிடுவதற்காக எண்களைக் கண்டுபிடித்தான். முதலில் எண்களை கூட்டுவதற்கும், கழிப்பதற்கும் மற்றும் பெருக்குவதற்கும் என்று தன்னுடைய விரல்களை பயன்படுத்தினான். அதன்பிறகு சிறிய சிறிய கற்களையும், விதைகள் தானியங்கள் போன்ற பொருட்கள் மட்டுமன்றி பிராணிகளின் எழும்பு போன்றவைகளையும் பயன்படுத்தினான் பின்னர் பணம் என்கிற பொதுவான பண்டம் வந்ததன் பின்னர் காசுகளை பயன்படுத்தினான். நாகரீகம் வளர்ச்சியடைந்தது. கண்டுபிடிப்புக்களும் வெளியாகத் தொடங்கின.

சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சீனர்கள், ஜப்பானியர்கள், பெரிய எண்களைக் கூட்டவும், பெருக்கவும் "அபாகஸ்" என்கிற மணிச்சட்டத்தை பயன்படுத்த தொடங்கினர். இதுதான் கணித செயல்முறைகளை இயக்க உதவும் முதல் சாதனமாக கருதப்படுகிறது. அதனைத் தொடர்ந்து கி.பி.1619ல் ஸ்கொட்லாந்து நாட்டை சேர்ந்த "ஜான் நேப்பியர்" என்கிற அறிஞர் சில எலும்புத் துண்டுகளை குடைந்து ஒரு கருவியை உருவாக்கினார். அதை "நேப்பியர் போன்ஸ்" என்று அழைத்தனர். இதன் மூலம் பெருக்கல், வகுத்தல் போன்ற செயல்முறைகளை எளிதாக செய்ய முடிந்திருக்கிறது. இவர் பிற்காலத்தில் லொகிர்தமின் தந்தை என்று அழைக்கப்பட்டார்.



தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுநடப்பு

எமது நாட்டின் முக்கிய தேவைகளை முன்னிட்டு பல அதிகார சபைகள் தோற்றுவிக்கப்பட்டாலும் சகலவற்றிலுமிருந்து எதிர்பார்த்த பயன்களை அரசாங்கம் முற்றுமுழுதாக பெறவில்லை. அதனால் பல அதிகார சபைகளுக்கு மூடுவிழாக்கள் இடம்பெற்றன. அதன் சேவை, வருவாய் போன்றவற்றை எதிர்பார்த்தே சிறப்பான திட்டமிடல் மற்றும் தூர நோக்குடன் அவை உருவாக்கப்பட்டதை இங்கு விசேடமாக கோடிட்டுக் காட்டுதல் விசேடமாகும்.

நாட்டில் எத்தனையோ அதிகார சபைகள் ஒவ்வொரு முக்கிய தேவையின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டாலும் அதிக பயனையும் வருவாயையும் ஈட்டிக்கொடுக்கும் அதிகார சபைகளிடையில் கப்பல் போக்குவரத்திற்காக ஸ்தாபிக்கப்பட்ட அதிகார சபையை எவரும் எளிதில் மறந்துவிட முடியாது.


பல லட்சக்கணக்கான பேருக்கு தொழில் வாய்ப்பையும் நாட்டுக்கு நல்ல வருவாயையும் ஈட்டிக் கொடுக்கும் அந்த அதிகார சபையின் ஒரு சாதாரண ஊழியனே காந்தரூபன். குறித்த அதிகார சபையில் கைநிறைய ஊதியத்தையும் ஏனைய பயன்மிகு சலுகைகளையும் ஊழியர்கள் பெற்றாலும் அங்கு ஒரே ஒரு குறை என்னவெனில் ஏனைய அரச திணைக்களங்கள் போன்று ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படாததே.

ஆனால் ஓய்வு பெறும்போது ஊழிய சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி போன்ற கொடுப்பனவுகளை குறித்த அதிகார சபையின் ஊழியர்கள் பெற்று வந்ததால் இறுதிக் காலத்தில் தமக்கு ஓய்வூதியம் இல்லை என்ற கலை அவர்களிடம் பெரிதாக காணப்படவில்லை.

ஓய்வு பெறும் காலத்தில் கிடைக்கப்படும் தொகையை தமது குடும்பத்தின் எதிர்காலத்திற்காக முதலீடு செய்தவர்களில் காந்தரூபனும் ஒருவர். அவருக்கு மொத்தம் இரண்டு ஆண் பிள்ளைகள். தான் ஓய்வு பெறும் முதல் தன் பிள்ளைகள் இருவரையும் தனது திணைக்களத்தினுள் நுழைத்துவிட்டார்.

மனைவி இறந்ததும் தனது இளைய மகனின் வீட்டில் அவர் தங்கிக் கொண்டார்.

அந்த அதிகார சபையானது ஊழியத்தை அள்ளிக் கொடுப்பது உண்மை. அதனால் ஊழியர்கள் சிலர் கண் மண் தெரியாமல் செலவழித்து அநியாயமாக்கினர்.



# பிள்ளைகள் என்றால் இவர்கள் தான்!!

**- பாலையூற்றான் -**

விசேடமாக சுட்டிக்காட்டக்கூடிய பல விரும்பத்தகாத நடத்தைகளில் பலர் ஈடுபட்டனர். அங்கு நடைபெறும் அட்டூழியங்கள் பற்றி யாரும் கண்டுகொள்வது இல்லை. ஆனால் இன்று அந்த நிலைமையில் திணைக்களம் இல்லை. தற்போது கொஞ்சம் படித்த இளவட்டம் காணப்படுவதால் அவ்வாறான விரும்பத்தகாத நடவடிக்கைகள் இடம்பெறுவதில்லை.

எப்படியோ தமது சமூகம் திருந்த வேண்டும் என்பதே இன்றைய காலகட்டத்தில் ஓர் எதிர்பார்ப்பாக காணப்படுகின்றது. காந்தரூபன் தொழில் புரியும் போதும் சரி ஓய்வு பெற்ற பின்பும் சரி பண விடயத்தில் சற்று இறுக்கமாக செயல்பட்டவர். அவரின் பிள்ளைகள் தத்தம் குடும்பங்களுடன் நிம்மதியாக தனித்தனி வீடுகளில் வாழ்வதற்கு ஏதுவாக இருந்ததும் அவரது சிக்கனம் தான்.

என்னவாக இருந்தாலும் மூத்தவனை விட இளையவன் அவர் மேல் அன்பு காட்டினான். இளைய மருமகளும் கூட அவர் மீது விருப்பமாகவே இருந்தாள். எனினும் மூத்த மருமகள் சற்று வித்தியாசமானவளாக காணப்பட்டாள்.

எங்கே தனது கணன் சுகவீனமாக இருந்த தன் மாமனாருக்கு அள்ளி வாரி செலவழித்து விடுவாரோ என்கின்ற லோபத் தனமே சகலவற்றிற்கும் காரணமாய் இருந்தது.

இருப்பினும் இளையவன் அவ்வாறில்லை. அவன் மிகுந்த பாசத்துடன் பராமரித்து வந்தான் தனது தந்தையை. காந்தரூபன் மேல் அவரது பேரக்குழந்தைகளும் மிகவும் பாசமாக பழகினர்.

எமது விரல்கள் எவ்வாறு வித்தியாசப்பட்டிருக்கின்றதோ அது போலவே பிள்ளைகளும் இருப்பர். காந்தரூபன் பல பக்குவநிலைகளை கடந்துள்ளவர் என்பதால் பெரியவனின் குடும்பம் நடந்து கொள்ளும் விதம் பற்றி அவர் என்றுமே பெரிது படுத்துவது இல்லை.

இருப்பினும் தனக்கு இயலுமான வேளையில் தானே நேரே சென்று தனது பிள்ளை, மருமகள் மற்றும் பேரக்குழந்தைகளை பார்த்து வருவார்.

ஒரு நாள் நெஞ்சுவலி காரணமாக அவசர சிகிச்சைப் பிரிவுக்கு உட்படுத்தப்பட்ட அவர் சிகிச்சை பயனளிக்காததால் மருத்துவமனையிலே காலமானார்.

சகல நடவடிக்கைகளையும் இளையவன் தனித்தே செய்தான். இறுதிக் கிரியைகளுக்கான நடவடிக்கைகள் அனைத்தும் இளையவனின் வீட்டிலேயே நடாத்தவிருந்த வேளையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டு காவல்துறையினர் தலையிடும் அளவிற்கு பிரச்சினை தலைதூக்கியது.

அண்ணனும் தம்பியும் இறுதிக் கிரியைகள் தத்தமது வீடுகளில் வைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட வேண்டுமென்பதில் ஆளுக்காள் முட்டி மோதிக் கொண்டு பிரச்சினைகளை ஏற்படுத்தியதை அடுத்து காவல்துறையினர் அவ்விடயத்தில் தலையிட நேர்ந்தது.

தற்பொழுது இளையவனின் வீட்டில் நடாத்தப்பட்டாலும் அதில் மூத்தவனுக்கு கலந்து கொள்ள விருப்பமில்லாததால் தகப்பனின் இறுதிக் கிரியைகள் தனது வீட்டிலேயே நடாத்த வேண்டும் என அடம் பிடித்தான் மூத்தவன்.

இறக்கும் வரை காந்தரூபன் இளையவனின் வீட்டிலேயே இருந்ததால் அங்கேயே இறுதிக் கிரியைகள் நடாத்தப்பட வேண்டும் என ஊராரும் சுற்றத்தினரும் பல கருத்துக்களை தெரிவித்தனர்.

தற்பொழுது பிரேதம் இளையவன் வீட்டில் இருப்பதால் சகல கிரியைகளையும் இங்கு முடித்துக் கொண்டு மயானத்திற்கு போகும் முன் ஒருசில மணி நேரம் மூத்தவனின் வீட்டில் ஊராரின் பார்வைக்காக வைத்து பின்னர் அடக்கத்திற்காக கொண்டு செல்லலாம் என காவல்துறையினர் அண்ணனுக்கும் தம்பிக்கும் புத்திமதி கூறினர்

அது மாத்திரமல்ல மரண வீடு தொடர்பில் பிரதேசத்தில் தேவையற்ற வகையில் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் யாராவது நடந்து கொண்டால் குறித்த பிரேதம் அனாதை பிரேதமாக கணிக்கப்பட்டு அரசு செலவில் அடக்கம் செய்யப்படும் எனவும் காவல்துறையினரால் எச்சரிக்கை செய்யப்பட்டது.

அதனை அடுத்து தந்தையின் இறுதிப் பயண நேரத்தில் தேவையற்ற பிரச்சினையை தோற்றிக்க விரும்பாத சகோதரர்கள் காவல்துறையின் கட்டளைக்கு பணிந்து நடந்து கொண்டனர்.

சகலதும் அமைதியாக இடம்பெற்றன. மூத்தவன் தந்தை மீது பாசம் இல்லாவிட்டாலும் மூத்த மகன் எனும் அந்தஸ்தும் கௌரவமும் தனக்கு இருக்க வேண்டும் என்பதற்காகவே அவ்விதம் அடம்பிடித்தமைக்கு இரகசிய காரணமாகும்.

அதுமாத்திரமல்ல அவன் அவ்விதம் நடந்து கொள்ள அவன் மனைவியின் தலையணை மந்திரமும் ஒரு காரணமாக இருந்ததை ஊரார் அங்கு பேசிக்கொள்ளத் தவறவில்லை.

இறக்குமுன் காந்தரூபன் தான் சேமித்த முழுப் பணத்தையும் இளையவனின் பெயரிலேயே வங்கியில் வைப்பிலிட்டார். இளையவன் மிக நேர்மையானவன் என்பதால் மரணவீட்டு செலவுகளை சரியாக கணக்குப் பார்த்து அற்றை கழித்துக் கொண்டு தந்தையின் பணத்தை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியை தனது மூத்த சகோதரனிற்கு கொண்டு சென்று கொடுத்தான். ஆனால் மூத்தவன் அதனை ஏற்க மறுக்கவே மூத்தவனின் மகனின் பெயரில் வங்கியிலிட்டான் இளையவன்.

---

ஓர் வீட்டில் பெற்றோரும் அவர்களின் ஒரே ஒரு செல்ல பெண் பிள்ளையும் வசித்து வந்தனர். அவளுக்கு தற்பொழுதுதான் 15 வயது ஆகின்றது. அவள் நன்றாக படிக்கக் கூடியவள். பாடசாலையில் சகலவற்றிலும் ஈடுபாட்டுடன் பங்கு பெறுவாள். விளையாட்டு என்றாலும் சரி, தமிழ்த்தின போட்டிகள் என்றாலும் சரி அவள் முன்னுக்கு நிற்பாள்.

# இரவில் ஒப்பனை செய்வது அவசியம் தானா பெண்களே?

**- - - உண்மை! உண்மையைத் தவிர வேறேதுமில்லை - - -**

அவளது அத்தை எப்போதோ கூறியுள்ளாள், இரவில் எமது ஆத்மா வெளியில் உலாவ சென்று விடும் பின்னர் மீண்டும் விடியலில் தான் உடலினுள் சேருமாம். அதுவரை அது காணும் இடங்கள் தான் எமக்கு கனவாக தெரிவதாம் என. அன்றிலிருந்து இரவில் தான் செல்லும் இடங்களில் வாசனையாகவும், அழகாகவும் இருக்க வேண்டும் என எண்ணிக் கொண்ட அவள் இரவில் ரசனைத் திரவியங்கள் பூசி, முகத்திற்கான ஒப்பனைகளையெல்லாம் செய்துவிட்டே நித்திரைக்குச் செல்வாள். தாய் எவ்வளவோ கூறியும் கேட்காது தாய்க்குத் தெரியாமல் பூசுவாள்.

குறிப்பிட்டு எப்போது என கூறமுடியாது. அவளது அனைத்து பாடசாலை பங்குபற்றல்களும் சிறிது சிறிதாக குறையத் தொடங்கியது. பாடசாலை செல்வதை புறக்கணித்தாள். வகுப்பில் புள்ளிகளும் படு மோசமாக அமையத் தொடங்கியது. உடன் தாய் அளை கண்காணிக்க ஆரம்பித்த போதே, புத்தகங்களை கிழிப்பது, விரக்தியாக பார்ப்பது என வாழ்க்கையில் விருப்பமற்றவளாக காணப்பட்டாள்,

தாய் தன் மகளை மனோதத்துவ நிபுணரிடம் அழைத்துச் சென்று சிகிச்சை பெற்றும் பார்த்தாள். ஆனால் நாளாக நாளாக அதிகரித்தே சென்றது அவளது அட்டகாசம்.

வேறு வழியில்லாமல் அநேகரின் ஆலோசனைக்கமைய பேய் விரட்டி ஒருவரை அழைத்து வந்து பார்த்தாள். அவர் வந்து அவளை பார்த்துவிட்டு சுட்டிச் சென்ற

இரண்டு நாட்களில் வருவேன் சில பொருட்களை வாங்கி வைக்குமாறு பணித்து விட்டு சென்றார்.



குறித்த அந்த நாளில் அவர் வந்து தனது பூசையை தொடக்கியதும் தனது மகள் கதைப்பவற்றை அந்த தாயால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

அவளது உடம்பினுள் இருப்பது ஓர் ஆண் எனவும் அவனது ஆத்மா அலைந்து கொண்டிருந்த வேளையில் நல்ல வாசனை வந்த வழி தேடி வந்த போது இவ்வழகான தனது தங்கையை சந்தித்ததாகவும் அவன் கூறியுள்ளான். அவள் அழகாக தனக்காக தான் அலங்கரித்து இருந்ததாக தெரிவித்தான். திடீரென அம்மாவை நோக்கி அன்றி எனது தங்கையை நான் வேண்டும் என்னிடமே விட்டுவிடுங்கள் என தெரிவித்தான். தாய் அதிர்ந்து போனாள்.

பின்னர் செய்ய வேண்டிய பூசைகள் அனைத்தும் நிறைவேறி அவன் கேட்டவை கொடுக்கப்பட்ட பின்னர் அவளது உடலை விட்டு அவன் நீங்கினான்.

அவளிற்கு நூல் போடப்பட்டது. தாயிடம் அந்த பூசை செய்தவர், இன்னும் கொஞ்ச நாட்களுக்கு இவ்வீட்டில் இருக்க வேண்டாம், அடுத்து இது சொந் வீடு எனில் அறையினது யன்னல் இத்திசை பார்த்து இருத்தலாகாது மாற்றியமைக்குமாறும் கூறினார். அத்துடன் அவளுக்கு நடந்த எதையும் தெரியப்படுத்த வேண்டாம் எனவும் கூறிச் சென்றார். இப்பொழுது அவள் மீண்டும் அனைத்திலும் சிறந்து விளங்கத் தொடங்கியுள்ளாள்.


- தன்யா -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தீன் முரசு

## இஸ்லாம் கூறும் குற்றப் பரிகாரங்கள்

கொலை செய்யப்பட்டவர் மு·.மினாக இருந்தால் ஒரு அடிமையை உரிமை இட வேண்டும். அத்துடன் கொலை செய்யப்பட்டரின் குடும்பத்தாருக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்.



□ கொல்லப்பட்டவன் கொலை செய்தவனின் பகை இனத்தை சார்ந்த மு·.மினாக இருந்தால் மு·.மினான ஒரு அடிமையை உரிமை விட்டால் போதுமானது.

□ கொலை செய்யப்பட்டவன் கொலை செய்தவனின் நட்பான வகுப்பை சேர்ந்திருந்தால் அவன் சொந்தக்காரருக்கு நஷ்டஈடு வழங்குவதுடன் ஒரு அடிமையை விடுதலை செய்யவும் வேண்டும்.

□ இவ்வாறு பரிகாரம் செய்வதற்கு சக்தியில்லாதவனாக இருந்தால் அல்லாஹ்விடம் மன்னிப்புப் பெறுவதற்காக இரண்டு மாதங்கள் தொடர்ந்து நோன்பு வைக்க வேண்டும்.

### அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்

"தவறாக அன்றி, ஒரு மு·.மின் பிறிதொரு மு·.மினை கொலை செய்வது ஆகுமானதல்ல, உங்களில் எவரேனும் ஒரு மு·.மினை தவறுதலாக கொலை செய்து விட்டால், அதற்குரிய பரிகாரமாக ஒரு அடிமையை உரிமை விடுதல் வேண்டும். அவனுடைய குடும்பத்தாருக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும். கொல்லப்பட்டவன் உங்களின் பகை இனத்தை சார்ந்த மு·.மினாக இருந்தால் மு·.மினான ஒரு அடிமையை உரிமை விட்டால் போதுமானது.
அவன் உங்களுடன் சமாதான உடன்படிக்கை செய்த வகுப்பாரை சேர்ந்திருந்தால் அவன் சொந்தக்காரருக்கு ந்'டஈடு வழங்குவதுடன் ஒரு அடிமையை விடுதலை செய்யவும் வேண்டும். ,வ்வாறு பரிகாரம் செய்வதற்கு சக்தியில்லாதவனாக ,ருந்தால் அல்லாஹ்விடம் மன்னிப்புப் பெறுவதற்காக இரண்டு மாதங்கள் தொடர்ந்து நோன்பு வைக்க வேண்டும். அல்லாஹ் நன்கு அறிந்தவனாகவும் பூரண ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்". (4:92)

தொடரும் .. ..

**– ஆசிரியர் : ஆரிஃப் –**

## கத்தோலிக்கம் ஒரு மேலோட்டம்

கடந்தவார தொடர்ச்சி .. ..

சரி கிறிஸ்த்துமஸுக்கு லீவ் கிடைக்கும் ஆனா ஈஸ்டருக்கு? யோசியுங்க.



இது போக சகல ஆத்துமாக்கள் திருநாள், மாதா பரலோகம் போன திருநாள், திருக்குடும்பத் திருநாள் என சில பொதுவான திருநாட்கள் வரும். மற்றபடி புனிதர்களை நினைவு செய்ய அந்தந்த புனிதர்களுக்கென ஒரு நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் அந்தோனியார், சவேரியார், இராயப்பர் ரூ சின்னப்பர் போன்ற பெயர்போன புனிதர்களின் திருநாட்கள் பெரிதாய் கொண்டாடப்படும்.

கத்தோலிக்க கோவில்கள் ஒவ்வொன்றும் ஒரு காவல் புனிதரை கொண்டிருக்கும் அல்லது ஒரு கருத்தமைப்பை முதன்மை படுத்தியிருக்கும். சாந்தோம் (San Thom = Saint Thomas) புனித தோமையாரை காவல் புனிதராகக் கொண்டிருக்கிறது. பூக்கடையில் செவ்வாய் கிழமையில் கூட்டமாயிருப்பது அந்தோனியார் கோவில், எழும்பூரில் இயேசுவின் திருஇருதயம், வேளாங்கண்ணியில்.... வேளாங்கண்ணி மாதா. தங்கள் காவல் புனிதரின் நினைவு நாளில் அந்தந்த கோவில் திருவிழாக்கள் நடைபெறும்.

யார் இந்தப் புனிதர்கள்? கத்தோலிக்க திருச்சபை மட்டுமே புனிதர்களை அங்கீகரிக்கிறது, பட்டமளிக்கிறது. உதாரண புருஷர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் வாழ்க்கையை அலசி ஆராய்ந்து மூன்று நிலைகளாக வழங்கப்படுகிறது புனிதர் பட்டம். ஒருவரின் இறப்புக்கு 5 வருடங்கள் கழிந்த-பின்னரே இதற்கான முயற்சிகள் துவங்கும். அன்னை தெரசாவிற்-காக இந்த விதி தளர்க்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு நம்ம பழைய பதிவு ஒண்ணு படியுங்க.

மாதா தெய்வமா? இல்லவே இல்லை. இயேசுவின் தாய் மாதா மேலே சொல்லப்பட்டுள்ளதுபோல ஒரு புனிதர்தான். இயேசுவின் தாய் என்பதால் ஒரு சிறப்பு இடம் அவருக்கு தரப்பட்டுள்ளது என்பது மறுக்க-முடியாது. கிறித்துவர்கள் பலரும் கழுத்தில் போட்டிருக்கும் செபமாலை மாதாவிற்கான சிறப்பு ஜெபம் சொல்லப் பயன்படுத்தப்படுகிறது. பல இடங்களில் மாதா காட்சி தந்ததாக நம்பப்படுகிறது. நாகப்பட்டினம் வேளாங்கண்ணியும் அப்படி ஒரு இடம். மாதா தோன்றிய அந்தந்த ஊர் பெயரிலேயே பாத்திமா, லூர்து என மாதா அழைக்கப்படுவது வழக்கம்.

தொடரும் .. ..

www.tamiloviam.com

---

உயரத்துக்கு ஏற்ற உடல்வாகு அனைவருக்கும் அமையாது. சில பெண்களுக்கு அழகான உடல் அமைப்பு இருந்தும், கைகள் மட்டும் மிகவும் தடிமனாக இருக்கும்.
கைகளில் அதிகப்படியான கொழுப்பு இருக்கும் பெண்கள் கவலைப்படவேண்டியதில்லை. இந்த பயிற்சியை தொடர்ந்து செய்து வந்தால் விரைவில் நல்ல மாற்றம் தெரிவதை காணலாம்.
முதலில் விரிப்பில் முழங்கால்களைச் சற்று முன்னோக்கி மடக்கியபடி, நேராக நிற்க வேண்டும்.
கைகளில் டம்பிள்ஸைப் பிடித்து, தலைக்குப் பின்புறம் வைத்தபடி நிற்க வேண்டும்.
இப்போது, மூச்சை இழுத்துப்பிடித்தபடி, டம்பிள்ஸைத் தலைக்கு மேல் உயர்த்த வேண்டும்.
பின்னர், மூச்சை வெளியேற்றிபடி, கைகளைப் பின்நோக்கி இறக்கவும்.
இதேபோல 10 முறை செய்ய வேண்டும். கைகளை உயர்த்தும் போது, மூச்சை நன்றாக இழுத்து, கைகளை இறக்கும்போது மூச்சை வெளியேற்ற வேண்டும்.



ஆரம்பத்தில் 15 முறையும் பின்னர் படிப்படியாக எண்ணிக்கை-யின் அளவை அதிகரித்து கொள்ள வேண்டும்.
கை பகுதியில் அதிகளவு சதை இருப்பவர்கள் இந்த பயிற்சியை அதிக எண்ணிக்கையில் செய்ய வேண்டும்.

## பிறந்த எண் பலன்கள் 3

நல்லொழுக்கமும், உயர்ந்த பண்புகளையும் பெற்றிருப்பார்கள். நல்ல பேச்சாற்றல், எழுத்தாற்றல் யாவும் அமைந்திருக்கும். தாம் கற்றதை பிறருக்கும் கற்றுக் கொடுக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர்கள். நல்லவர்களிடத்தில் சுமூகமாக பழகும் குணமும், அத்துமீறி நடப்பவர்களை கண்டிக்கத்தக்க தைரியமும் உடையவர்கள். தன்னைச் சார்ந்தவர்களாக இருந்தால் தவறுகளை மன்னிக்கும் சுபாவம் இருக்கும். எந்த காரியத்தில் ஈடுபட்டாலும் அதை செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர்கள். மிகவும் சுறுசுறுப்பும், எதையும் எளிதில் கிரகிக்கக்கூடிய தன்மையும் இவர்களுக்கு உண்டு. சுயநலம் பாராமல் உதவி செய்யக்கூடிய குணமிருப்பதால், இவர்களிடம் எதையும் எளிதில் சாதித்துக் கொள்ளலாம்.

## இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : உழைப்பினால் பணவரவு கூடும். உறவினர் அன்பு பாராட்டுவர். புதிய வீடு, வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும்.

**ரிஷபம்** : உறவினர்களிடம் நெருக்கம் உண்டாகும். வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். வீடு, வாகனத்தில் பராமரிப்பு செலவு ஏற்படும்.

**மிதுனம்** : நற்பெயருக்கு குறை வராமல் எவரிடம் பழகுவது நல்லது. ஆடம்பரத்தை தவிர்த்தால் கடன் பெறும் நிலை ஏற்படாது.

**கடகம்** : மனதில் உற்சாகம் கூடும். பொது வி'யங்களில் ஆர்வமுடன் பங்கேற்பீர்கள். சகோதரர்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிம்மம்**: மனதில் நம்பிக்கை உருவாகும். சமூகத்தில் நற்பெயர் கிடைக்கும். உறவினர் வருகை மகிழ்ச்சி அளிக்கும்.

**கன்னி** : பணவரவு அதிகரித்தாலும் செலவுக்கு குறைவிருக்காது. வீண் பேச்சு பேசுபவரிடம் விலகவும்.

**துலாம்** : குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும். வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்து-வீர்கள். உடன்பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

**விருச்சிகம்** : குபேச்சில் நிதானம் வேண்டும். அறிமுகம் இல்லாதவர்களுக்கு வீடு, வாகனத்தில் இடம் தரவேண்டாம். உடல் நலம் ஆரோக்கியம் பெறும்.

**தனுசு** : சாதனை நிகழ்த்தும் எண்ணம் உருவாகும். புதியவர்களின் அன்பு, உதவி கிடைக்கும். அலைச்சல் மற்றும் பயணங்களைத் தவிருங்கள். பணியாளர்-கள் வேலை செய்ய சற்று தாமதமாகும்.

**மகரம்** : பேச்சில் வசீகரம் இருக்கும். தம்பி, தங்கைகளுக்கு சுபநிகழ்வு நடந்தேறும். தாய் வழி உறவினர்கள் உதவுவர். புத்திரர்கள் உங்களிடம் நண்பர்கள் போல் சுமுகமாகப் பழகுவர்.

**கும்பம்** : உங்களுக்கு தொடர்பில்லாத விடயங்களில் [illegible] வேண்டாம். வீடு, [illegible] வகையில் அதிக பாதுகாப்பு வேண்டும்.

**மீனம்** : சோம்பலைத் தவிர்ப்ப-தால், பணிகளை விரைவில் நிறைவேற்றலாம். ஆலோசனை கேட்பதற்கு தகுதியானவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

---

## சிரியுங்கோவன்...




ஆசிரியர் : *ஒரு அறையின் நீளம் 30அடி, அகலம் 20அடி பெருக்கினால் என்ன வரும்?*

மாணன் : குப்பை வரும் சார்!

*நோயாளி : டாக்டர்! சொறியும் போது எனக்குப் பொரிப் பொரியா வருது*

டாக்டர் : அதிசயமா இருக்கே! இன்னும் கொஞ்சம் நல்லா சொறிங்க பொட்டுக்கடலை, பட்டாணி எல்லாம் வருகுதான்னு பார்க்கலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா - சல்லி அம்பாள் மகா வித்தியாலயம்

கடந்த 09.07.2015 வியாழக்கிழமை அன்று சல்லி அம்பாள் மகா வித்தியாலயத்தில் பரிசளிப்பு விழா வெகு விமர்சையாக இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் இவ்விழாவில் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.









## நூலக திறப்பு

- கதிரவன் -

### புனித மரியாள கல்லூரி

திருகோணமலை நகரப்பகுதியில் அமைந்துள்ள புனித மரியாள கல்லூரியில் செலான் வங்கியின் அனுசரணையுடன் நூலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை அன்று செலான் வங்கி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு கல்லூரி நூலகத்தை திறந்ததுடன் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். மாணவர்களின் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் நோக்கத்திலேயே வங்கியின் அனுசரணையுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.






## சுயதொழில் ஊக்குவிப்பு நிதியுதவி

திருக்கோணமலை மாவட்ட இளைஞர் அபிவிருத்தி "அகம்" நிறுவனத்தால் சுவீடன் கூட்டுறவு நிலையத்தின் அனுசரனையுடன் மேற்கொள்ளப்படும் கிராமமட்ட சமூக அமைப்புகளை வலுவூட்டும் செயற்றிட்டத்தின் கீழ் கடந்த வெள்ளியன்று மூதூர் நவரெட்ணபுரம், இத்திக்குளம் ஆகிய கிராம கூட்டுறவு சங்கங்களுக்கு போசாக்கு மற்றும் ஆரோக்கியத்திற்கான உணவு வகைகள் விற்பனை நிலையங்களை நடாத்துவதற்கான நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பயனாளிகளுக்கான இந்நிதியுதவிகளை கூட்டுறவு அபவிருத்தி ஆணையாளர் திரு.வி.திவாகரசர்மா அவர்கள் வழங்கிவைத்தார்.





## புதிய ஆயரின் திருநிலைப்படுத்தல் நிகழ்வு



ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளாரின் பதவிக்காலம் நிறைவெய்தியதை அடுத்து திருகோணமலை மறைமாவ-ட்டத்திற்கென புதிதாக உயர் திரு.கிறிஸ்டியன் நோயல் இம்மானுவல் அடிகளாரை ஆயராக பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் நியமித்துள்ளார். அடிகளாரின் ஆயர்த்துவ திருநிலைப்படுத்தல் நிகழ்வு எதிர்வரும் 25ம் திகதி சனிக்கிழமை இடம்பெற இருக்கின்றது.

இந்த நிகழ்வானது திருகோணமலையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற' தி/ புனித சூசையப்பர் தேசிய பாடசாலை மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.

இலங்கையில் உள்ள அனைத்து மறைமாவட்ட-ங்களிலும் உள்ள ஆயர்களும், கரிதினால் மல்கம் ரஞ்சித் அடிகளாரும், பாப்பரசரின் பிரதிநிதி உயர் திரு பியர்ரே நுய்யேன் வான் டொற் அவர்களும் கலந்து சிறப்பிக்க இருக்கின்றார்கள்.

## கலைவாணி முன்பள்ளியின் கண்காட்சி நிகழ்வு

- சேனையூர் நிரூபர் -

திருகோணமலை கலைவாணி முன்பள்ளி மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி 16.07.2015 வியாழக்கிழமை தொடக்கம் 17.07.2015 வெள்ளிக்கிழமை வரை கலைவாணி முன்பள்ளி வளாகத்தில் இடம்பெறும்.

கலைவாணி முன்பள்ளி பாடசாலையின் அதிபர் நடராஜா ரோகினிதேவி அவர்களின் தலைமையில் நடைபெறும் ஆக்கத்திறன் கண்காட்சியில் முதன்மை விருந்தினராக திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.தவநாதன் அவர்களும், கௌரவ விருந்தினராக திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் ஆசிரியர் அ.அருள்பாஸ்கரன் அவர்களும், சிறப்பு விருந்தினராக கிழக்கு மாகாண முன்பள்ளி வெளிக்கள உத்தியோகத்தர் திருமதி.சர்மிளா விக்னேஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

## கண்காட்சி நிகழ்வு

- சேனையூர் நிரூபர் -

வரலாற்றுச் சிறப்புமிக்க தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தின் தேர்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன் போது கோணநாதர் சகிதம் அம்பாள் எழுந்தருளி பக்த அடியார்களுக்கு அருள்பாலித்ததுடன் கொடியிறக்கத்துடன் திருழா இனிதே நிறைவு பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அலசல்

# தேர்தலும் 60 ஆண்டுகால இனப்பிரச்சினையும்



அதிகாரத்தை விட அபிவிருத்தியை மாத்திரமே தமிழர்கள் கேட்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்கவுள்ளனர்.

நாடாளுமன்றத் . தேர்தல் இனப் பிரச்சினை பற்றிய தீர்வு விடயங்களையும் வடக்கு கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகளையும் கைவிட்டுள்ள தன்மையை காணக் கூடியதாகவுள்ளது. கடந்த காலங்களில் தேர்தல் என்றாலே இனப்பிரச்சினை பற்றிய விடயங்கள் முக்கியமாகப் பேசப்படும். அது இரண்டு வகைப்படும். ஒன்று, இனவாத நோக்கில் வேறு சமூகங்களைத் தாழ்த்துவது, இரண்டாவது யுத்தத்தைத் தீவிரப்படுத்தல். இந்த இரண்டு வகையிலும் யுத்தத்தை தீவிரப்படுத்தல் என்பது 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பேசப்படுவதில்லை. ஆனால், யுத்த வெற்றிக்கான உரிமைகள் கோரப்பட்டன.

## நிலைமை மாறியது

இந்த நிலையில் 2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் யுத்த வெற்றிக்கான உரிமைகோரல் என்பதை விட சிங்கள பௌத்த தேசியவாதத்தை மேலும் வளப்படுத்தல் மற்றும் சர்வதேச சக்திகளின் பிடியிலிருந்து இலங்கை என்பதை காப்பாற்றுதல் என்ற நிலைமைக்கு மாற்றியிருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் செயற்பாடுகளே இந்த நிலைமைக்கு காரணம்.

2014 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச தோல்வி கண்ட பின்னரே இவ்வாறான நிலை ஏற்பட்டது என்று கூறலாம்.

## மஹிந்த ராஜபக்சவின் முயற்சி

இனப்பிரச்சினையை நோர்வேயின் சமாதான முயற்சியிலிருந்து முறியடித்து, அதனை உள்நாட்டு விவகாரமாகவும் பத்தோடு, பதினொன்றாகவும் மாற்றியது மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கம் என்பது கண்கூடு. ஆனால், தமிழர்களுக்கு பிரச்சினை உண்டு என்றும் 60 ஆண்டு காலத்திற்கு மேலாக அது தீர்க்கப்படவில்லை என்றும் கூறிவந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆகியோர் மஹிந்த ராஜபக்சவின் அந்த முயற்சியை தொடர்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலைக் கூட அதற்குச் சாதகமாகப் பயன்படுத்தி தற்போது நாடாளுமன்றத் தேர்தலையும் அதற்கு ஏற்றவாறு மாற்றியுள்ளனர். குறிப்பாக இனப்பிரச்சினை இல்லை என்பதையும் தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தை ஆதரிக்கின்றார்கள் என்பதையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மக்கள் மத்தியில் கூறிவருகின்றார். அண்மையில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் கருத்து வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, தமிழ் மக்களுக்கு இனிமேல் அதிகாரம் தேவையில்லை. அதிகாரம் பற்றிய பிரச்சினை 2009 ஆம் ஆண்டு முடிவடைந்து விட்டது என்றும் அபிவிருத்தியே வடக்கு கிழக்கில் தேவையென்றும் கூறியிருந்தார்.

## தமிழ் தேசியக் கூட்டமைப்பில்

இந்த இடத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பற்றிய செயற்பாடுகள் எழுகின்றன. ஜனாதிபதித் தேர்தலின் போது, இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான உறுதி மொழிகள் எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால், இராணுவத்தின் எண்ணிக்கையைக் குறைப்பது வடமாகாண சபையை சுதந்திரமாக செயற்பட அனுமதிப்பது, மீள்குடியேற்றத்திற்கு அனுமதிப்பது மற்றும் முன்னாள் போராளிகள் உள்ளிட்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்வது போன்ற விடயங்கள் உறுதியளிக்கப்பட்டன.

ஆனால், ஜனவரி 8 ஆம் திகதி ஆட்சி மாற்றம் ஏற்பட்டதிலிருந்து இன்றுவரை இந்த உறுதிமொழிகள் ஒன்றுகூட முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. யுத்தத்தின் பக்கவிளைவுகளைக்கூட தீர்ப்பதற்கு இந்தப் பிரதான அரசியல் கட்சிகளும் விரும்பாத நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் மிதவாத அரசியல் என்ற போர்வையில் சிங்கள அரசியல் தலைவர்களை நம்பிக்கொண்டு இருப்பதன் நோக்கம் என்ன என்ற கேள்விகள் தற்போது மக்கள் மத்தியில் எழுகின்றன.

## ஒற்றையாட்சி கோட்பாடு

கொழும்பை மையப்படுத்திய ஒற்றையாட்சி-யிலிருந்து மேற்படி இரண்டு கட்சிகளுமே விலகப் போவதில்லை என கடந்த 60 ஆண்டு கால்மாக மக்கள் கண்டிருக்கி-ன்றார்கள். ஆனால் 60 ஆண்டு கால அரசியலில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்ற சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்ற தலைவர்கள் சுமந்திரன் போன்ற இளம் தலைமுறைக்கு தவறான பாதையை காட்டுகின்றனர். இந்தநிலையில் நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 1970 ஆம் ஆண்டிலிருந்து பேசிவந்த வீர வசனங்களை பேசுவதால் வெற்றியைச் சாதிக்க முடியாது. ஆகவே மூன்று விடங்களை இவர்கள் செய்தாக வேண்டும்.

ஒன்று 60 ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த இரண்டு பிரதான சிங்கள அரசியல் கட்சிகளும் செய்துகொண்ட திருகுதாளங்களை வெளிப்படையாகவே பேச வேண்டும். இரண்டாவது உறுதி மொழிகள், நம்பிக்கைகள் என்பதைக் கைவிட்டு தமிழ் மக்களின் நம்பிக்கை-யையும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான மாற்றுவழிகளையும் இந்த தேர்தலின் மூலமாகக் கண்டுகொள்ள வேண்டும். மூன்றாவது இளம் தலைமுறையி-னருக்கு கூட்டமைப்பில் இடமளிக்க வேண்டும். இல்லையேல் இன்னும் 60 ஆண்டு காலத்திற்கு தற்போதைய நிலையைவிட மோசமான நிலையையே மக்கள் சந்திக்க வேண்டி ஏற்படும்.

– – அ.நிக்சன்– –

- www.ibctamil.com -

# மகிந்தவைப் பயமுறுத்தும் மைத்திரியின் கடிவாளம்

கே.சஞ்சயன்

- www.tamilmirror.com -

நாம் மஹிந்த ராஜபக்சவை ஆதரிக்கவில்லை என்றும், அவரைப் பிரதமராக்கமாட்டேன் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள அறிவிப்பு, இலங்கை அரசியலில் மற்றொரு சூறாவளியை ஏற்படுத்தியிருக்கிறது. ஏற்கெனவே மஹிந்த ராஜபக்சவின் மீள் பிரவேசத்தினால் இலங்கையின் அரசியல் களம் படுசூடாகவும் பரபரப்பாகவும் தான் இருந்து வந்தது. இந்தநிலையில், மஹிந்தவுக்கு எதிரான தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டிருப்பது, அரசியல் களத்தைக் கொதிநிலைக்குக் கொண்டு சென்றிருக்கிறது. மஹிந்தவை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளராக அதன் பொதுச்செயலர் சுசில் பிரேமஜெயந்த அறிவித்த நாள் தொடக்கம், நீடித்து வந்த தனது மௌனத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை முடிவு கட்டியிருந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. மஹிந்தவின் வேட்புமனு விடயத்தில் அவர் காண்பித்த நீண்ட மௌனத்தின் பின்னால் ஓர் இயலாமை இருந்த போதிலும், அதை ஓர் இராஜதந்திரமாக எடுத்துக் காட்ட முயன்றிருக்கிறார். கடந்த வாரம் அந்த மௌனத்தை உடைத்துக் கொண்டு தனது மனதில் இருந்தவற்றையெல்லாம் கொட்டித் தீர்த்தமைக்கு முற்றிலும் இராஜதந்திரமே காரணம் என்று கூற முடியாது. தான் ஊடகங்களாலும் பல்வேறு தரப்பினராலும் இரண்டு வாரங்களாக கடுமையாக விமர்சிக்கப்பட்டதை மிக வருத்தத்துடன் குறிப்பிட்டிருக்கிறார் மைத்திரிபால சிறிசேன. துரோகி, காட்டிக் கொடுத்தவன், வில்லன் என்றெல்லாம் விமர்சிக்கப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ள அவர், இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் எவரும் இதுபோன்ற விமர்சனங்களை எதிர்கொள்ளவில்லை என்பதையும் இவ்வாறு விமர்சிக்கத்தக்க உரிமையைக் கொண்ட ஜனநாயகத்தை தனது ஆட்சி ஏற்படுத்தியுள்ளதையும் பெருமையோடு சுட்டிக்காட்டியிருக்கிறார். அதேவேளை, தான் கடைப்பிடித்து வந்த மௌனத்துக்கான காரணத்தை இத்தகைய சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தத் தவறினால் அந்த மௌனத்தினால் பயனோ, அதற்கான அர்த்தமோ இல்லாது போய்விடும் என்பதையும் மைத்திரிபால சிறிசேன உணர்ந்திருந்தார். அதனால் தான், வேட்புமனுத் தாக்கல் முடிந்த பின்னர், தனது மௌனத்தைக் கலைத்திருக்கிறார். மைத்திரிபால சிறிசேனவின் ஊடகச் சந்திப்பில் இந்தத் தேர்தலில் தாம் மஹிந்தவுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை - அவர் மீண்டும் தோற்கடிக்கப்படுவார்- அவர் நாடாளுமன்றத்துக்கு வந்தாலும், பிரதமராக முடியாது ஆகிய மூன்று முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இது மஹிந்தவின் அடுத்த கட்ட அரசியல் நகர்வில் ஏற்படுத்தப் போகும் பாதிப்பு என்னவாக இருக்கும் என்பது முக்கியமான கேள்வியாக இருக்கிறது. மைத்திரிபால சிறிசேனவின் மீது, மஹிந்தவுக்கு கடுமையான கோபமும் எரிச்சலும் இருந்தாலும், அவரைப் பகைத்துக் கொள்ளாமல் அதிகாரத்துக்கு வருவதே மஹிந்தவின் இலக்காக இருந்தது. மீண்டும் அரசியலுக்கு வருவதாயின், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஊடாகவே வருவேன் என்ற பிடிவாதத்தில் அவர் இருந்தமைக்கு, மைத்திரிபால சிறிசேனவினால் கிடைத்துள்ள பெயரைப் பயன்படுத்திக் கொள்வது தான் முக்கிய காரணம். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளராக உள்நுழைவதற்கு பல்வேறு திருகுதாளங்களை மேற்கொண்டிருந்தாலும், மைத்திரிபால சிறிசேனவுடன் தனக்கு எந்த முரண்பாடும் இல்லை, இருவருக்கும் இடையில் நல்லுறவே உள்ளது என்று காட்டிக்கொள்ள முனைந்தார் அவர்.

அதற்கு உதாரணம், இந்தியாவின் ரெடிப் இணையத்தளத்துக்காக நிதின் கோகலே என்ற செய்தியாளருக்கு அளித்த பேட்டி. இந்தப் பேட்டியில் அவர் தனக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நல்லுறவு இருப்பதாக கூறியிருந்தார் மஹிந்த ராஜபக்ச. ஆனால், அப்படியான எந்த நல்லுறவும் அவர்களுக்கிடையில் இருந்திருக்கவில்லை என்பதை, வெளிச்சமாக்கியிருக்கிறது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உரை. அதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் போட்டியிட, தனக்கு இடமளிக்கப்படும் என்ற விடயத்தில் மஹிந்தவுக்கு முழுமையான நம்பிக்கை இருந்திருக்கவில்லை. கடைசி நேரத்தில் கூட ஏதாவது நடந்து விடலாம் என்ற சந்தேகம் அவரை அரித்துக் கொண்டேயிருந்தது. வேட்புமனுத் தாக்கல் செய்யப்படுவதற்கு முதல் நாள், கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு, பிலியந்தலயில் பிரசாரக் கூட்டம் ஒன்றில் அவர் உரையாற்றிக் கொண்டிருந்த போது, தினேஸ் குணவர்த்தனவிடம் இருந்து அலைபேசி அழைப்பு வந்தது. உடனடியாக, மஹிந்தவிடம் அலைபேசியை காமினி லொக்குகே கொடுக்க, அவர் அதனை வாங்கி மேடையிலேயே உரையாடுகிறார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலர் சுசில் பிரேமஜெயந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதான தகவல் அது. பதற்றத்துடன் உடனடியாகவே மேடையில் இருந்து இறங்கிச் சென்று விடுகிறார் மஹிந்த. கடைசி நேரத்தில் ஏதாவது நாடகம் நடத்தப்படுகிறதா என்ற ஆழ்மனச் சந்தேகத்தின் விளைவு தான், அவர் அவ்வாறு நடந்து கொள்ளக் காரணமாகியது.

அதுபோலவே, மஹிந்தவை போட்டியிட விடாமல் தடுக்க மைத்திரிபால சிறிசேன எதையாவது செய்வார் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம், ஊடகங்களிடம், ஏன், ராஜித சேனாரத்ன போன்ற அவருக்கு நெருக்கமான அமைச்சர்களிடம் கூட இருந்தது. ஆனால், அவரை தேர்தலில் போட்டியிட விடாமல் தடுப்பதற்காக மைத்திரிபால சிறிசேன, குறுக்குவழி முயற்சிகள் எதையும் மேற்கொண்டிருக்கவில்லை. அவ்வாறு செய்தால், அது கட்சியை உடைத்து விடும் என்ற கவலையும், அதனால் தன்னைச் சுற்றியிருப்பவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற கவலையும், தனது பெயர் கெட்டுவிடும் என்ற கவலையும் மட்டும் ஏற்பட்டிருக்கவில்லை. அவ்வாறு வேட்புமனுக் கொடுக்காது போனாலும் கூட, தனித்துப் போட்டியிட்டு மஹிந்த நாடாளுமன்றத்துக்கு வந்து விடுவார் என்பது உறுதி.

எனவே, பொறுத்திருந்து - மஹிந்தவை வைத்தே, தனது ஆதரவாளர்களையும் வெற்றி பெற வைத்து விடுவதே மைத்திரிபால சிறிசேனவின் நோக்கமாக இருந்திருக்கிறது. தனது முதற்கட்டத் திட்டம் நிறைவேறியதும், மௌனத்தைக் கலைத்தார் மைத்திரிபால சிறிசேன. இப்போது, மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவானவர்களின் வாக்குகள் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு கிடைக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது, அவர் தனது கட்சியின் நலன் பாதிக்கப்படும் என்று தெரிந்து கொண்டே, தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார். இந்தநிலையில், இதுவரையில் மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவுடனேயே இயங்குவதாக காட்டிக் கொண்டு வந்த மஹிந்த ஆதரவு அணியினருக்கு, குழப்பம் ஏற்பட்டுள்ளது. அவர்களின் அடுத்த அரசியல் நகர்வு கேள்விக் குறியாகியிருக்கிறது.

மஹிந்த ராஜபக்சவை பிரதமராக நியமிக்கமாட்டேன் என்ற பகிரங்க வாக்குறுதியைக் கொடுத்திருக்கும் மைத்திரிபால சிறிசேன விடயத்தில், அவர்கள் அலட்சியமாக இருக்க முடியாது. ஏனென்றால், வெறும் 47 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த ஐதேகவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்து, இன்று வரை அவரைப் பதவியில் வைத்திருப்பவர் அவர். அத்துடன் அரசியலமைப்புச் சட்டத்தின்படி, பிரதமரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது. எனவே, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தேர்தலில் வெற்றி பெற்றாலும், மஹிந்த ராஜபக்ச பிரதமராக வருவது என்பது எளிதான காரியமாக இருக்கப் போவதில்லை. அத்தகைய கட்டத்தில், மஹிந்த ராஜபக்ச தரப்பு எதிர்ப்புத் தெரிவித்தால் மீண்டும் சுதந்திரக் கட்சிக்குள் பிளவு வரும். அதேவேளை, ஐதேகவுடன் இணைந்து தேசிய அரசை அமைக்கலாம் என்ற தெரிவும் மைத்திரிபால சிறிசேனவுக்கு இருப்பதை மறந்து விடக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஒரு குறித்த வேலையை செய்து முடிப்பதற்கு ஒரு மனிதன் 8 நாட்கள் எடுக்கின்றான். அத்தகைய இரு மனிதர்கள் இரண்டு நாட்கள் வேலையை செய்தால் அவ்வேலையில் என்ன பின்னத்தைச் செய்து முடிக்கலாம்?

02. மூன்று தோடம்பழங்களின் விலை ரூபா 72 எனின், ஒரு தோடம்பழத்தின் விலை எவ்வளவு?

03. A, B என்பன ஒன்றிலிருந்து ஒன்று 10செ.மீ தூரத்தில் இருக்கும் இரு புள்ளிகள் ஆகும். கேத்திர கணித அறிவைப் பயன்படுத்தி,

1. A யிலிருந்தும் B யிலிருந்தும் சம தூரத்தில் இயங்குகின்ற ஒரு புள்ளியின் ஒழுக்கையும்
2. அவ்வொழுக்கின் மீது புள்ளி A யிலிருந்து 7செ.மீ தூரத்திலுள்ள P, Q எனும் இரு புள்ளிகளினதும் அமைவுகளை பெறும் விதத்தை உரிய அளவீடுகளுடன் ஒரு பரும்படிப் படத்தில் காட்டுக.

03. 1.25செ.மீ ஐ சொன்ரி மீற்றரில் தருக.

**பகுதி 02**

01. ஐந்து ஐஸ்கிறீம்களையும் எட்டு யோகட்களையும் செய்து முடிப்பதற்கு ரூ350 தேவை. ஓர் ஐஸ்கிறீமின் விலை ஒரு யோகட்டின் விலையிலும் பார்க்க ரூபா 5 இனால் கூடியது.

1. ஓர் ஐஸ்கிறீமின் விலை ரூx எனவும் ஒரு யோகட்டின் விலை ரூ y எனவும் கொண்டு x, y ஆகியன இடம்பெறும் ஓர் ஒருங்கமைச் சமன்பாட்டு சோடியை உருவாக்குக
2. அச்சமன்பாட்டு சோடியைத் தீர்த்து ஓர் ஐஸ்கிறீமின் விலையையும் ஒரு யோகட்டின் விலையையும் தனித்தனியே காண்க.
3. ஒரு குறித்த பணத்திற்கு கொள்வனவு செய்யத்தக்க யோகட்டுக்களின் எண்ணிக்கை அப்பணத்திற்கு கொள்வனவு செய்யத்தக்க ஐஸ்கிறீம்களின் எண்ணிக்கையிலும் பார்க்க ஒன்றினால் கூடியது. அப்பணம் எவ்வளவு?

## பாடம் : வரலாறு

01. மேல்வருவோருள் எவர், சீனாவிலே விவசாயிகளால் புரட்சி வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் என்று சொன்னார்?

1. சன் யத் ஷென்
2. சௌ என் லாய்
3. யுவாங் சீ காய்
4. மாஓ சே துங்

02. மேல்வரும் அரசியல் சீர்திருத்தங்களில் எது இலங்கையில் ஒரு மத்தியதர வகுப்பு எழுச்சி பெறுவதற்கு ஏதுவான சூழ்நிலையினை உருவாக்கியது?

1. 1833 கோல்புறூக் கமரன்
2. 1910 குறூ மக்கலம்
3. 1920 மானிங்
4. 1931 டொனமூர்

03. மேல்வருனவற்றுள் எது வருங்காலத்தில் ஏற்படக்கூடிய உலக யுத்தத்தின் விளைவாகலாம்?

1. போரிலே றோபோ தொழில்நுட்பம் பயன்படுத்துவதால் மனித உயிர்களின் அழிவு குறைக்கப்படும்
2. போரிலே அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படுமாகையால் வாழும் உலகின் பெரும்பாகம் அழிந்து விடும்.
3. வளர்ச்சி பொருந்திய நாடுகளிற் பெரும்பாலானவை அழிந்துவிடும்
4. வளர்ச்சியடைகின்ற நாடுகளிற் பெரும்பாலானவை அழிந்துவிடும்.

04. சிறப்பான காவலரண்கள் பொருந்திய அரணாகக் கோட்டையினைக் கட்டியவன்?

1. வீர அழகேஸ்வரன்
2. ஆறாம் பராக்கிரமபாகு
3. சேனாதிலங்காதிகார எனும் சேனாதிபதி
4. நிஸங்க அழகக்கோனார் எனும் அமைச்சன்

05. கீழ்வருனவற்றுள் எது தொடர்பாக மாட்டின்லூதர், ஜோண்கல்வின், உல்றிக்சுவிங்கிலி என்போர் முக்கியத்துவம் பெறுகின்றனர்?

1. நாடுகாண் பயணங்கள்
2. புரட்டஸ்தாந்து சீர்திருத்த இயக்கம்
3. மத்தியகால ஐரோப்பாவின் தேசிய அரசுகள்
4. மத்தியகால ஐரோப்பாவின் மானிய சமுதாய முறைமைக்கு எதிரான கருத்துக்களை வெளியிடல்.

## பாடம் : விஞ்ஞானம்

01. நியூற்றனின் மூன்றாம் விதியுடன் மிகவும் பொருந்தும் தோற்றப்பாடு எது?

1. மலையுச்சியில் உள்ள கல் நோக்கிப் புரண்டு செல்லல்.
2. இயங்கும் பொருளின் இயக்கத் திசை மாறல்
3. மேலேயிருந்து தரையில் விழுந்த பின்னர் பந்து மேலெழுதல்
4. தென்னையிலிருந்து விழும் தேங்காய் நிலத்திற்கு அண்மையில் உயர்ந்தபட்ச வேகத்தை அடைதல்

02. நீரை வெப்பமாக்கும் மின் கேத்தலின் உட்பகுதியில் வெண்ணிறத் திண்மப் பொருள் படிந்திருப்பதைக் கண்ட மாணவன் ஒருவன் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தான்.

A - இங்கு வன்னீர் வெப்பமாக்கப்பட்டுள்ளது.
B - இந்நீர் தற்காலிக வன்மையைக் கொண்டுள்ளது.
C - இந்நீரில் கல்சியம் ஐதரசன் காபனேற்று அல்லது மக்னீசியம் ஐதரசன் காபனேற்று உப்பு கரைந்துள்ளது.

இம்மாணவனின் அவதானிப்புகளிற்கேற்ப அவனின் கூற்றுக்களில் உண்மையானவை?

1. A, B ஆகியன
2. B, C ஆகியன
3. A, C ஆகியன
4. A, B, C ஆகியன

03. பிளெமிங்கின் இடக்கை விதி பயன்படுத்தப்படுவது?

1. காந்தப் புலத்தில் வைக்கப்பட்ட கடத்தி அசையும் போது தூண்டப்படும் மின்னோட்டத்தின் திசையைக் காண்பதற்கு
2. மின்னோட்டத்தைக் கொண்டு செல்லும் கடத்தியைக் காந்தப்புலத்தில் வைக்கும் போது அது அசையும் திசையைக் காண்பதற்கு
3. மின்னோட்டத்தைக் கொண்டுசெல்லும் கடத்திச் சுற்றிக் காந்தப்புலத்தின் திசையைக் காண்பதற்கு
4. மின்னோட்டத்தைக் கொண்டுசெல்லும் கடத்தி அசையும் திசையைக் காண்பதற்கு

04. பின்வரும் எக்கோட்பாட்டைப் பயன்படுத்தி ஒளிப்பிரதியெடுக்கும் பொறி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது?

1. மின்பகுப்பு
2. வெப்ப இடமாற்றம்
3. நிலைமின்னேற்றம்
4. மின்னியக்கவியல்

05. மனிதனின் பிரதான நைதரசன் கழிவுப் பொருள்களாகிய யூரியாவும் யூரிக்கமிலமும் உற்பத்தி செய்யப்படுவது?

1. சிறுநீரகத்தினுள்ளே
2. ஈரலினுள்ளே
3. சதையியினுள்ளே
4. சிறுநீரகத்தியினுள்ளே

06. ஒளித்தொகுப்புப் பற்றி கற்கும் மாணவன் ஆய்வுகூடப் பரிசோதனைகளைக் கொண்டு ஒளித்தொகுப்பிற்குத் தேவையான எக்காரணியைச் செய்து காட்டல் கடினமாக இருக்கும்?

1. ஒளி
2. நீர்
3. பச்சையம்
4. காபனீரொட்சைட்டு

07. கைத்தொழில் துறையில் போன்று உணப் பொருள்களைத் தயாரிப்பதிலும் பல்வேறு நுண்ணங்கிக் கூட்டங்கள் பயன்படுகின்றன. நுண்ணங்கிக் கூட்டமாகிய பங்கசு பின்வரும் எவ்வுற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றது?

1. உயிர்வாயு
2. பாண்
3. யோகட்
4. தயிர்

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

மரபுத்தொடர்கள்.

சொற்கள் சேர்ந்து நின்று தமக்குரிய நேர்பொருளை உணர்த்தாமல் குறிப்பான வேறு ஒரு பொருளை உணர்த்திவருவது இலக்கணத்தொடர் எனப்படும். அத்தகைய குறிப்புப் பொருள் பரம்பரை பரம்பரையாக மக்கள் மத்தியில் வழங்கி வருவதலால் அதனை மரபுத்தொடர் என்றும் கூறுவதும் வழக்கம்.

1. அடியொற்றுதல் - பின்பற்றுதல்
2. அடிநகர்த்துதல் - இடம்பெயர்தல்
3. அடிப்படுதல் - கீழ்ப்படிதல்
4. அடிப்படை - மூலாதாரம்
5. அடிவிளக்குதல் - தன்மரபைப் புகழ் பெறச்செய்தல்
6. அடியிடுதல் - ஆரம்பித்தல்
7. கண்திறத்தல் - அறிவு உண்டாகுதல்
8. கண்வளர்தல் - நித்திரை செய்தல்
9. கண்ணெறிதல் - கடைக்கண்ணாற் பார்த்தல்
10. கண்கலத்தல் - ஒருவரை ஒருவர் விரும்புதல்
11. கண்மூடுதல் - இறத்தல்
12. கழுத்தறுத்தல் - நம்பிக்கைத் துரோகம் செய்தல்
13. கழுத்திற் கட்டுதல் - வலிந்து திணித்தல்
14. கழுத்தைக் கட்டுதல் - விடாது நெருக்குதல்
15. காது கொடுத்தல் - அவதானித்தல்
16. காது குத்துதல் - ஏமாற்றுதல்
17. காதிலோதுதல் - கோள் சொல்லுதல்
18. காதைக்கடித்தல் - இரகசியம் கூறல்
19. கால் பின்னுதல் - தடைப்படுதல்
20. காலாறுதல் - ஓய்ந்திருத்தல்
21. கால் கொள்ளுதல் - ஆரம்பித்தல்
22. கால் பிடித்தல் - காலைப்பிடித்து கெஞ்சுதல்



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

**Fill in he blanks using the correct form of the verb given within brackets.**
***Some verb forms have more than one word.***

Mr.Piyasena (1) ................................ (ride) his bicycle to work everyday, even on rainy days. He has loved bikes ever since he (2) ........................................ (give) his first bicycle by his father on his fifth birthday. When he become fifty years old this year, he (3) ........................................ (ride) a bicycle for 45 years.

Some times people ask Mr.Piyasena why he (4) ........................................ (not use) a car. "I'm not sure", he says "in a car I do not get the feel of the wind or he sun on my face".

"When I'm (5) ........................................ (work) in my office, I have to sit inside a room for about eight hours of he day. So I prefer (6) ........................................ (ride) my bike to work and feel the wind on my face rather than driving a car".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 29

01. இலங்கைக்கே உரித்தான தாவரம் அல்லாதது
I. காட்டிலுப்பை ii. மா iii. நிலவேம்பு iv. பெரும்பிரம்பு

02. எமக்கு இலவசமாகக் கிடைக்கும் சேவை ஒன்று
i. மின்சாரம் ii. தபால் iii. சுகாதாரம் iv. போக்குவரத்து

03. வளவகங்கை கடலுடன் கலக்குமிடம்
i. களுத்துறை ii. அம்பாந்தோட்டை iii. மாத்தறை iv. கொழும்பு


04. நுளம்புக்கடியைத் தடுப்பதற்கு உடலில் பூசப்படுவது
i. மண்ணெண்ணெய் ii. புல்லெண்ணெய்
iii. நல்லெண்ணெய் iv. தேங்காய் எண்ணெய்

05. தேசப்படங்களில் நதிகளைக் குறித்துக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிறம்?
i. சிவப்பு ii. பச்சை iii. நீலம் iv. கறுப்பு

06. கொழும்புப் பிரதேச கடலில் கலக்கும் நதி?
i. நில்வள கங்கை ii. களனி கங்கை
iii. மாணிக்கங்கை iv. வளவகங்கை

07. பரப்பும் பலகை பயன்படுத்தப்படும் தொழில்
i. விவசாயத் தொழில் ii. கொல்லன்
iii. தச்சுத்தொழில் iv. மட்பாண்டத்தொழில்

### பகுதி - 02



01. இவ்வுருவில் நிறந்தீட்டப்படாத பகுதி முழு உருவின் என்ன பின்னம்?

..........................................................

02. அப்பிள் பழம் ஒன்றின் விலை ரூ 28.50 ஆகும். 12 அப்பிள் பழங்களின் விலை யாது?

..........................................................

02. 19:30 மணித்தியாலயம் எனும் டிஜிற்றல் கடிகார நேரத்தை சாதாரண நேரமாகத் தருக?

..........................................

**03. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை தருக**

1. சிறைத் தண்டனை பெற்றவன் : ..........................................
2. சுதந்திரமற்று வாழ்பவன் : ..........................................

**04. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக**

1. ஆதிகாலத்தில் தரைமார்கமாகச் செல்வதற்கு மாட்டுவண்டி குதிரைவண்டி ஆகியவற்றைப் பயன்படுத்தினர்.
2. தலைவா வருக வருக

05. **கீழே தரப்பட்டுள்ளவற்றிற்கு அடைப்புக்குள் இருந்து பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக**

(இனிப்பு, மகிழ்ச்சி, கிளை, மரம், திங்கள்)

1. சினைபெயர்ச்சொல் :- ..........................................
2. குணப்பெயர்ச்சொல் :- ..........................................
3. பொருட்பெயர்ச் சொல் :- ..........................................

---

### சென்றவார விடைகள்

01. 4 02. 4 03. 2 04. 4 05. 3 06. 1 07. 1 08. 3

**பகுதி 02**

01. 1. காவற்காடு 2. மணிவிழா
02. 1. நிலா 2. மீன் இனம் 3. அம்புயம் 4. தளர்ந்து
5. செம்பொற் குடம், வளர்ந்து வளர்ந்து 6. வான்




**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு



## சிறுவர்களுக்கான குட்டிக் கதை



## தாய்ப்பாசத்திலும் சிறந்த பாசம் உண்டா?

ஒரு மலைப் பிரதேசத்தில் மலை உச்சியில் ஓர் இனத்தாரும், அடிவாரத்தில் இன்னொரு இனத்தாரும் வாழ்ந்து வந்தார்கள். இரு இனத்தாருக்கும் எப்போதும் பகை.

ஒரு முறை உயரத்தில் இருந்தவர்கள் அடிவாரத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையைக் கடத்தி விட்டார்கள்.


சமூகத்திலிருந்த சில பெரியவர்கள், மலைமேல் இருந்த சமூகத்தினரிடம் சமாதானமாகப் போய் பேசினால் குழந்தையை மீட்டு வந்து விட சாத்தியம் இருப்பதாக ஊரில் உள்ள இளைஞர்களிடம் அறிவுரை கூறினர்.

இளைஞர்கள் சிலர் உடனே முன்வந்தார்கள். அவர்கள் கடினமான வேலைகள் செய்து பழகியவர்கள். எந்தச் செயலை எடுத்தாலும் அதை விடாமுயற்சியுடன் முடிக்கும் மனப் போக்கைக் கொண்டவர்கள். ஊர் பெரியவர்களும், இந்தச் செயலை முடிக்க இவர்கள்தான் சிறந்தவர்கள் என்று அவர்களை வாழ்த்தி அனுப்பி வைத்தார்கள்.

இளைஞர்களும் ஆர்வத்துடன் கிளம்பினார்கள். அந்த மலையின் சில பகுதிகள் மிகவும் செங்குத்தானவை. அந்த இளைஞர்களால் அப்படி ஒரு பகுதியை ஏறிக் கடக்க முடியவில்லை. விடாமுயற்சியுடன் அப்பகுதியைக் கடக்க பலமணி நேரமாக பல வழிகளில் முயன்று கொண்டிருந்தனர். களைத்துப் போனால் ஓய்வெடுத்துக் கொண்டு மீண்டும் முயற்சித்தனர்.

அப்போது தம் ஊரைச் சேர்ந்த ஒரு பெண் மேலேயிருந்து கடத்தப்பட்ட குழந்தையைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கி வருவதைப் பார்த்தார்கள். அவள் அருகில் வந்தவுடன் "நாங்கள் ஏற சிரமப்பட்ட மலையை நீ ஏறிச் சென்றுவிட்டாயே! எப்படி?" என்று வியப்புடன் கேட்டார்கள்.

அவள் இடுப்பிலிருந்த குழந்தையைக் காட்டி "இது உங்கள் குழந்தை இல்லை. என் குழந்தை. அதுதான் வித்தியாசம்" என்று பதில் சொன்னாள்.



**- தாயைப் போல் பாசம் வைக்கக் கூடியவர் இவ்வுலகில் வேறுவரும் இல்லை -**

### சிந்திக்க ... ...

கஷ்டப்படுபவனுக்கு சிரிக்கத் தெரியாது, சிரிப்பவனுக்கு கஷ்டம் தெரியாது.
கஷ்டத்திலும் சிரிப்பவனுக்கு தோல்வியே கிடையாது!!!



மணிகண்டன்.வீ, தரம் - 09



விதூஷா. செந்தூரன், தரம் - 10

### பொது அறிவு - 31

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. உலகின் சர்க்கரைக் கிண்ணம் எது? கியூபா

02. பருத்தி விளைவதற்கு ஏற்ற மண்? கரிசல் மண்

03. புத்தர் எங்கு முதன் முதலில் போதித்தார்? சாரநாத்

04. குப்தர்கள் காலத்தில் வாழ்ந்த சிறந்த கணித மேதை யார்?
ஆரியப்பட்டர்

05. வளிமண்டலம் இல்லையெனில் ஆகாயத்தின் நிறம் யாது?
கறுப்பு

06. பகல் மற்றும் இரவு எதனால் உருவாகின்றது?
புவி தன்னைத்தானே சுழன்று வருவதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....

மக்கள் முரசு

இந்த வருடம் அவர்கள் 239 வது சுதந்திர தினத்தைக் கொண்டாடியிருக்கிறார்கள். 1776 ஜூலை 4 அன்றுதான் அந்த பழைய 13 கொலநிகளும் சேர்ந்து சுதந்திர பிரகடனம் செய்து கையெழுத்திட்டார்கள். அதற்குப் பிறகுதான் உத்தியோகபூரவமாக போராடினார்கள். வென்றார்கள் வளர்ந்தார்கள். இவற்றை முன்னமே பார்த்தோம். ஆகவே ஒரு நாள் பிந்திப் போனாலும் "hei guys! happy 4 of July" என்று வார்த்தை அவர்களுக்கு சொல்லிக் கொண்டு அவர்களின் 1901-2000 ஆண்டுவரையான கால பதிவுகளுக்குள் நுழையலாம்...

கொஞ்சம் அதிகமாகவே ரத்தக் கறைகள் பிரண்டிருக்கும் காலம்.. இந்த நூறு வருடத்தை போர் வரலாற்றின் அடிப்படையில் நான்காகப் பிரித்துப் பார்த்தால் அமெரிக்காவை புரிந்து கொள்வது சுலபம்..

01. முதலாம் உலக யுத்தம்.
02. இரண்டாம் உலகயுத்தம்.
03. பனிப்போர்காலம்
04. பனிப் போருக்கு பின்னான காலம்

இந்த நூறு வருடத்திற்குள் மட்டும் ஏறக்குறைய 23 யுத்தங்களை அமெரிக்கா தனித்தும், ஏனைய நாடுகளுடன் சேர்ந்தும் நடாத்தியிருக்கிறது. அதில் 2 யுத்தங்கள் அமெரிக்கபழங் குடியினருடனும் ஒரு யுத்தம் மெக்ஸிகோவுடனான எல்லைப் பிரச்சனைக்காகவும் மட்டுமே அமெரிக்க நாட்டிற்குள் நடந்தவையாகும். சென்ற நூற்றாண்டுடன் ஒப்பிடுகையில் உள்நாட்டிற்குள் அதிக யுத்தங்களை கண்ட அமேரிக்கா ஒப்பீட்டளவில் இந்த நூற்றாண்டில் வெளி நாடுகளினை களங்களாகக் கொண்டு பல்வேறுபட்ட சுய பொது தேவைகளுக்காக போர் புரிந்திருக்கிறது. ஆக இந்த போர் அடிப்படையில் நாம் புரிந்து கொள்ளலாம் அமேரிக்கா தன்னை மிகவும் திட்டமிட்டு, நுணுக்கமாக வளர்த்திருக்கிறது என்று.

1914 தொடங்கி 1918 வரை நடந்த 1ம் உலக யுத்தம் உண்மையில் எந்த நியாயமான காரணமும் இன்றி தொடங்கப்பட்டது என்றும் சொல்லலாம். ஐரோப்பாவை மையப்படுத்திதான் இந்த உலக யுத்தங்கள் நடந்தாலும் முழு உலகமுமே எதோ ஒரு வகையில் சம்பந்தப் பட்டுத்தான் இருக்கின்றன. உண்மையில் ஹுங்கேரி மற்றும் ஆஸ்திரியா என்ற இரு நாடுகளுக்குள்ளும் இருந்த பிணக்குதான் ஐரோப்பாவை இரண்டாக பிரிய வைத்து பின்னர் உலகையும் இரண்டாகப் பிரிந்து நின்று போர் புரியச் செய்தது... பல சகாப்தங்களாக ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் இருந்த பகை, கோபம், பழி, வெறுப்பு, ஆதிக்கம் இப்படி பலவற்றினை வெளிக்காட்ட ஏதோ ஒருவகையில் 1ம் உலகப் போருக்குள் இந்த நாடுகள் தம்மை நுழைத்துக் கொண்டன. அப்பொழுது வல்லரசாக பிரித்தானியா இருந்தது என்றாலும் அது பொய்யில்லை.

உண்மையில் உலகளவில் பல தேசப் புரட்சிகள், தொழில் புரட்சிகள், தொழில்நுட்பப் புரட்சிகள், ஆயுத படைக்கல வெடிமருந்து பயன்பாட்டு உச்ச நிலைகள், விஞ்ஞான கண்டு பிடிப்புக்கள் போன்றவற்றின் வளர்ச்சிகளை அல்லது இறுதி முடிவுகளை பயன்படுத்த, பரிசோதனை செய்ய இந்த முதலாம் உலகப் போர் அனைத்து நாடுகளுக்கும் உதவி செய்தது என்றே சொல்லலாம். அதன்பிறகு வந்த அனைத்துப் போர்களும் சம்பந்தப் பட்ட நாடுகள் அப்படித்தான் போர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றன என்பதே உண்மை. அந்த காலப் பகுதியில் பலம்மிக்க கடற்படையும் நவீன ஆயுதங்கள் தாங்கிய கப்பல்களும் கொண்ட மிகப்பெரிய கடல் ஆதிக்கத்தை வைத்திருந்தது பிரித்தானியாதான். ஆனால் ஆயுத தொழில் நுட்பத்தில் அசுர வளர்ச்சி அடைந்து கொண்டிருந்த ஜெர்மனி தான் முதன் முதலில் நீர்மூழ்கிக் கப்பலை உலகுக்கு அறிமுகப்படுத்தி, அதனை ஒரு போர் ஆயுதமாக பயன்படுத்திக் காட்டியது... இப்படி பல சாதனைகளைக் கொண்ட முதலாம் உலகப் போரின் போக்கு எப்படி அமைந்தது என்பதை விட அதில் அமெரிக்காவின் பங்கு அல்லது அவர்களுக்கான லாபம் என்ன என்றுதான் நாம் இங்கே பார்க்கப் போகிறோம்.

பிரித்தானிய கடற்படையை ஜேர்மன் நீர்மூழ்கிகள் தாக்கி அழித்த வேளைகளில் அதற்குள் அமெரிக்க வர்த்தகக் கப்பல்கள் பல தாக்கப் பட்டதுதான் முதலாம் உலகப் போருக்கு அமேரிக்கா சொன்ன நியாயம். அமெரிக்க மக்களுக்கும் அப்படி சொல்லித்தான் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன் போருக்கான அனுமதி எடுத்தார். போர் என்றால் அமெரிக்க மக்கள் அனுமதிக்க வேண்டிய கட்டாயம் அங்கே உண்டு. அதே நேரம் ஜெர்மனிக்கு எதிராக போர் புரிகிற அனைத்து நாடுகளுக்கும் தாம் பொருளாதார உதவிகள் செய்யப் போவதாகவும் அமெரிக்க அறிவித்தது. அது இன்னும் அவர்களை பெரிய இராச்சியங்கள் தொடங்கி கடைக்குட்டி தேசங்கள்வரை அனைத்து உலக நாடுகளும் உற்று நோக்க தொடங்கின... உண்மையில் இது ஐரோப்பாவுக்குள்ளான யுத்தம் நாம் தலையிடக் கூடாது என்றுதான் அமேரிக்கா இருந்தது

இப்படியான காரணங்களுக்காக 1917 ம் ஆண்டு ஏப்ரல் 06 அன்று அமேரிக்கா ஜெர்மனுக்கு எதிரான யுத்தத்தை உத்தியோகபூர்வமாக தொடங்கியது. வி'ப்புகை குண்டுகள் , இரசாயனக் குண்டுகள் கலிபர் துப்பாக்கிகள் என்று ஐரோப்பா கிடுகிடுத்தது. அமேரிக்கா போருக்குள் நுழைந்த உடனேயே ஜெர்மனிக்கு எதிரான கூட்டணி நாடுகளின் வெற்றி அதிகரித்தது. ஒரு கட்டத்தில் ரசியா வெளியேறியது. பின்னர் 1918 நவம்பரில் அமைதி ஒப்பந்தம் செய்யப்பட்டு முதலாம் உலகப் போர் முடிவுக்கு கொண்டு வரப் பட்டது. இந்தப் போரில் மட்டும் பிரித்தானிய படைகளில் சுமார் 9,47,000 பேர் இறந்திருக்கலாம் என்றால் மொத்த இழப்பை கணக்குப் போட்டால் தலை சுற்றுகிறது அல்லவா....?

இந்த போரின் முடிவில் அமெரிக்க ஜனாதிபதியால் எழுதப்பட்ட 14 முக்கிய அம்சம் கொண்ட அமைதிக்கான ஒப்பந்தம் ஐரோப்பா வில் அமுலுக்கு வந்த பொழுது அமேரிக்கா இன்னும் பல மடங்கு மேலே போனது. அவர்களின் பேச்சுக்கு மதிப்புண்டு என்றும், பஞ்சாயத்து தலைவர் பேச்சை தட்டிக் கழிக்க முடியாது என்ற நிலைக்கு அனைத்து நாடுகளையும் தள்ளிவிட்டது.

அடுத்தது பொருளாதாரம். யுத்தத்தில் பங்கு கொண்ட நாடுகளுக்கு என்னென்ன வளங்கள் வேண்டுமோ அதாவது ஆயுதம், உணவு, அடிப்படை பொருட்கள் எரிபொருள், இரும்பு, மூலப் பொருட்களாகவும், உற்பத்திப் பொருட்களாகவும் ஏற்றுமதி செய்தது. அதற்காக உள்ளூர் உற்பத்தியை ஏற்றுமதி தரத்துக்கு அதிகரித்தது. நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு பெருகிய உற்பத்தியினால் கணக்கிட முடியாத லாபம் அமெரிக்காவுக்குள் வந்தது. வரலாறு காணாத லாபம். அமெரிக்க பொருட்களை மற்றைய நாடுகள் பணம் கொடுத்தும் பெறலாம், சுலபத் தவணை மூலம் வட்டிக்கும் பெறலாம் என்று அறிவித்தது. முதன்முதலாக இந்த நடைமுறையை அமேரிக்கா கொண்டுவந்ததனால் பல நாடுகளுக்கு அது பெரிய வரமாக அமைந்தது. கடன்வாங்கிக் குவித்தன. அடிமையாகிப் போயின. ஆக பல ஐரோப்பிய நாடுகள் பிரித்தானியா உட்பட "நக்கினான் நா விழந்தான் " என்ற கதைக்கு உதாரனமாகிவிட்டன.

அதற்குப்பிறகு போர் என்றால் லாபம் வரும் வழியாக அமேரிக்கா பார்த்தது. இருக்கிற போரை நடாத்த தொடங்கியது. இல்லாத போரை உலகெங்கும் உற்பத்தி செய்தது. முதலாமா உலகப் போர் அமெரிக்காவிற்கு ஒரு மிகப்பெரிய அந்தஸ்தை கொடுத்தது. அவர்களின் கட்டமைக்கப் பட்ட இராணுவம் பற்றியும் அவர்களின் வீர தீரச் செயல்கள் பற்றியும் எல்லா நாட்டு வீரர்களும் அப்பொழுதே சிலாகிக்கத் தொடங்கி விட்டார்கள். அவர்களின் கடல் படை சாகசங்கள் அமெரிக்க தெருவெங்கும் ஒலிக்கத் தொடங்கியிருந்தன.

இப்படித்தான் எமது மண்ணிலும் புழுதி கிளப்பித் திரிந்த தேர்களை இன்று நாம் காணாது தவிக்கிறோம். அந்த புழுதிகளின் வாசம் இன்று இல்லை. ஏதேதோ வாசமெல்லாம் வீசுகின்றன. அந்த தேரோட்டிகள் பற்றியும் அவர்கள் காவித்திரிந்த தேவ தூதர்கள் பற்றியும் கதைகள் அங்காங்கே கேட்ட வண்ணமே இருக்கின்றன. எந்த நாடு சார்பாகவும் கொள்கை சார்பாகவும் சாயாத அந்த தூதர்கள் தன்னிறைவான ஒரு சமுதாயத்தை குறித்த காலப்பகுதிக்குள் நடாத்திதான் காட்டினார்கள். அனைத்தும் கனவு போல இன்று இருக்கின்றன. சில சிறுவர்கள் மட்டும் தென்னம் மட்டையில் துவக்கு செய்து சுடுபட்டு விளையாடும் விளையாட்டை விரும்பி விளையாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

நல்லது... மிகப்பெரிய விளைவை ஏற்படுத்திய 2 ம் உலக யுத்தத்துடன் மீண்டும் சந்திக்கலாம். மிகப்பெரிய யுத்தம் அது. தேவையான பக்கங்களை அடுத்த தொடரில் பார்க்கலாம்.




வித்தியா சாகரன்

முகப்பக்கத்திலிருந்து---

## விநோதங்கள்

### 3 மாத குழந்தை பகிரங்க விற்பனையில்

இங்கிலாந்து பகுதியில் குழந்தை ஒன்றை தள்ளுவண்டியில் வைத்துகொண்டு வந்த குறித்த நபர் மக்கள் கூடியிருந்த பகுதியில் அந்த குழந்தையை 1000 டொலர்களுக்கு விற்க பகிரங்கமாக முயற்சி செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் காவல் துறையினருக்கு தெரியப்படுத்தியதை தொடர்ந்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். மீட்கப்பட்ட 3 மாத குழந்தை காவல்துறையினரின் பாதுகாப்பில் உள்ளது.



### காதலனை அடித்த காதலி கைது

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை சேர்ந்த பிரியம், அந்தோணி ஹோவர்ட் ஆகிய இருவரும் காதலர்கள். இதில், அந்தோணி ஆபாச படம் பார்ப்பதை வழக்கமாக கொண்டுள்ளார், இதனை பிரியம் பலமுறை கண்டித்தும் அந்தோணி திருந்துவதாக இல்லை. இந்நிலையில், ஒருநாள் அந்தோணி ஆபாச படம் பார்த்துக்கொண்டிருப்பதை வீடியோ எடுத்ததோடு மட்டுமல்லாமல் அவரை சரமாரியாக அடித்து உதைத்துள்ளார் பிரியம். வலி தாங்க முடியாமல் தப்பித்த அந்தோணி காவல்துறையினரிடம் புகார் அளித்ததை தொடர்ந்து வன்முறை சட்டத்தின் கீழ் பிரியம் கைது செய்யப்பட்டார். பின் பிரியம் 12 மணி நேரம் சிறையில் அடைக்கப்பட்டு ஜாமீனில் வெளிவந்துள்ளார்.

### திறந்த சூப்பர் மாக்கெட்டில் திருட்டில்லை

பிரான்சின் தேசிய நாளை முன்னிட்டு கடையை மதியம் 1 மணிக்கு மூட முடிவு செய்யப்பட்டது. எனினும் அங்கிருந்த சூப்பர் மார்க்கெட் ஒன்றில் வாடிக்கையாளர்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை தேர்ந்தெடுத்து கொண்டிருந்தனர். இந்நிலையில் கடைசியாக கடையை விட்டு வெளிய வந்த ஊழியர் கடையின் விளக்குகளை அணைப்பதற்கும் கடையை பூட்டுவதற்கும் மறந்து சென்றுவிட்டார். இந்நிலையில் இது குறித்த விபரம் தெரியாத கடையில் இருந்த வாடிக்கையாளர்கள் சில நேரங்கள் கழித்து ஊழியர்கள் இல்லாததை கண்டு திடுக்கிட்ட அவர்கள் பொருட்களை எடுத்துச் செல்லாமல் உடனடியான காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். எனினும் எப்பொருளும் திருடு போகவில்லையாம்.

- கனடாவில் நடந்த பளு தூக்கும் போட்டியின் போது ஏற்பட்ட திடீர் நிலைகுலைவால், வெனிசுலாவைச் சேர்ந்த பளு தூக்கும் வீராங்கனையான ஜெனிசிஸ் ரோட்ரிகஸ் கோமஸ் சரிந்து விழுந்தது பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. 233 பவுண்ட்(106 கிலோ) எடைப்பிரிவு பளு தூக்கும் போட்டியில் அவர் பங்கேற்ற போதுதான் இந்த அசம்பாவிதம் நடந்தது. இருப்பினும் சில நிமிடங்களில் எழுந்து, தன்னை சரிப்படுத்திக் கொண்ட அவர், 116 பவுண்ட் எடைப்பிரிவில் பங்கேற்று வெள்ளிப் பதக்கம் பெற்றார்.
- ஜப்பானில் உள்ள பியூஜி சபாரி பார்க் என்ற மிருகக்காட்சிசாலையில் யானைகள் நீந்தி விளையாடுவதை பார்வையாளர்கள் தெளிவாக பார்க்கும் வகையில் சுமார் 65 மீட்டர் நீளம் கொண்ட கண்ணாடி நீச்சல் குளம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. நீச்சல் குளத்தில் நீந்திய பிறகு யானைகள் முன்பை விட அதிகமாக சாப்பிடுவதாக மிருகக்காட்சிசாலை ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.
- அமெரிக்கவிலுள்ள மலைப் பிராந்தியத்தில் இடம்பெற்ற விமான விபத்தொன்றில் 16 வயது சிறுமியொருவர் தப்பியுள்ளார். தனது பாட்டா மற்றும் பாட்டியுடன் சிறிய ரக விமானமொன்றில் பயணித்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இப்படியும் நடக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களிற்...

வேண்டிய தேவை அனைவருக்கும் உள்ளது. அந்தத் தேவயை கச்சிதமாக நிறைவேற்றிக்கொள்ளத் தேர்தலில் வென்ற தமிழ்த் தலைமைகளும் ஒத்துழைக்கத் தொடங்கியுள்ளனர்.

இப்போக்கானது தமிழர்கள் ஒரு தேசிய இனத்தவர் என்பதையே அடியோடு அழித்துவிடும் செயலாக இருப்பதை அனைவரும் அறிவோம்.

அதனால் தமிழர்கள் ஒரு தேசிய இனம் எனவும் அவர்கள் தமக்கான தேசத்திற்கு உரியவர்கள் என்பதையும் உலகெங்கும் ஒலிப்பதற்காகத் தமிழர்கள் யாவும் அரசியல் மாற்றமொன்றை ஏற்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. அதற்காக ஒன்றிணையுமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார். தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதால் அவர்களுக்குரிய தமிழ்த் தேசத்தையும் அதன் இறைமையையும் எப்போதுமே நாம் விட்டுக்கொடுக்கப் போவதில்லை எனத் தெரிவித்த அவர் தமிழர்களின் தீர்வு தனித் தேசம் என்பதையே தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள் என்பதை வெளிப்படுத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சைக்கிள் சின்னத்திற்கு வாக்களிப்பதன் ஊடாக உலகமெங்கும் அத்தகவலைத் தெரியப்படுத்தக்கூடிய வாய்ப்பை இன்றைய தேர்தலில் தமிழ் மக்கள் பெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பல தசாப்தங்களாக தமிழ்த் தேசத்தில் மாற்றத்தை முதன்முதலில் உருவாக்கும் மாவட்டமாக திருகோணமலையே இருப்பதாகத் தெரிவித்த அவர் இந்தத் தேர்தலிலும் திருகோணமலை மாவட்டமே தமிழ்த் தேசிய அரசியலின் மாற்றத்திற்கான முதல் மாவட்டமாக இருக்கும், இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## நியமனங்கள்....

தெரிவித்துள்ளனர்.

கடந்த எட்டு நாட்களாகத் தொடர்ந்து உண்ணாநோன்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதாரத் தொண்டர்களே இவ்வாறு தெரிவித்தனர். தமிழ் மற்றும் தமிழ் பேசும் முஸ்லிம் தொண்டர்களிற் பலருக்கு நிரந்தர நியமனத்தைக் கிழக்கு மாகாண சபை வழங்காமல் புறக்கணித்துவிட்டு மாகாணசபை உறுப்பினர்களின் கோட்டா என்ற பெயரில் வழங்கப்பட்டுள்ள சட்டவிரோத நியமனங்களை அடுத்தே தாம் போராட்டத்தில் குதித்திருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். போராட்டத்தில் ஈடுபடும் சுகாதாரத் தொண்டர்கள் ஐந்து தொடக்கம் பதினைந்து வருடகால சேவையைக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த பல நாட்களாகப் போராடும் இவர்கள் கடந்த 16ம் திகதி மேற்கொண்ட அழைப்பை அடுத்து வேட்பாளர்களுடன் நடைபெற்றுக்கொண்டிருந்த கலந்துரையாடலை இடையில் நிறுத்திவிட்டு குறித்த இடத்திற்குச் சென்ற இரா.ஸ்ரீஞானேஸ்வரன் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள் உரியவர்களுடன் கலந்துரையாடினர். இக்கலந்துரையாடலின் போது போராட்டக்காரர்களுக்கு தமது பூரண ஆதரவைத் தெரிவித்ததுடன் போராட்டத்தைத் தொடர்வதற்கான உதவிகளைச் செய்வதற்கான அறிவுறுத்தல்களையும் வழங்கினார். அத்துடன் குறித்த நியமனங்கள் சட்டவிரோதமானவையாக இருப்பின் அவற்றிற்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் அவர் போராடும் மக்களுடன் கலந்தாலோசித்தார்.

போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் உணவுத்தவிர்ப்புப் போரைத் தொடர்வதால் அதனை விடுத்து உணவை உட்கொள்ளுமாறு இரா.ஸ்ரீஞானேஸ்வரனால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக்கொண்டுள்ள போராடும் சுகாதாரத் தொண்டர்கள் தமக்குரிய நியமனம் வழங்கப்படும் வரை போராட்டத்தைத் தொடர்வதாகத் தெரிவித்துள்ளனர்.



மகிந்தவையே மைத்திரியின் புதிய ஆட்சி தன்னுடைய மிக முக்கியமான வேட்பாளராகக் கொண்டு வருகின்ற நிலமை உருவாக்கப்பட்டுள்ள போது அமைதியாய் இருக்கின்றது.

இதனை உணர்ந்து கொண்ட நாம் உணர்ச்சிவசப்படாமல் வெறுமனே பழிவாங்கல் என்ற கோணத்தில் சிந்தித்து செயற்படாமல் தூரநோக்கத்தோடு செயற்பட வேண்டும் என்பதை தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேர்தல் காலத்தில் தமிழ் மக்களுக்குத் தமது ஆலோசனையாக வழங்கியிருந்தது.

இன்றாவது மக்கள் இவற்றை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். மக்கள் விரும்பாத ஒரு கருத்தை நாங்கள் முன்வைக்கின்றோம் என்றால் அதற்கு ஒரு ஆழமான காரணம் இருக்கின்றது என்பதை மக்கள் உணர தொடங்க வேண்டும்.

எம்மை பொறுத்தவரையில் நாம் தேர்தலுக்கான வாக்குகளை பெறுவதற்கு செயற்படுகின்ற ஒரு தரப்பு இல்லை. மக்கள் நம்பிக்கை வைத்திருந்தால் இனிவரும் காலங்களில் நாங்கள் அவர்களுக்கு கூறகின்ற ஆலோசனைகளை சரியாக புரிந்து கொண்டு செயற்பட்டால் பெரிய அளவில் முன்னேற்றம் அடைய கூடிய நிலமை வரும்.

## போதை...

போதைப்பொருளை....

வினியோகிப்பவர் யார்? என்பது தொடர்பான விசாரணைகளை காவல்துறைப் புலனாய்வுப்பிரிவு முன்னெடுத்திருப்பதாக தெரிகின்றது. அதே வேளை இவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது சில நகரப் பாடசாலை மாணவர்கள் சுண்ணாம்புடன் கூடிய போதைப்பொருட்களைப் பாவிப்பதாகத் தெரியவந்துள்ளது. சில நாட்களுக்கு முன்னர் பாலையூற்றுப் பகுதியில் போதை தரும் மாத்திரைகள் வினியோகிக்கப்பட்ட செய்தி வெளியானமை குறிப்பிடத்தக்கது.

## சவால்களை....

கோரிக்கைக்கு கோவிலின் பரிபாலனசபைத் தலைவர் வெளியூர் சென்றிருப்பதாகவும் அவரின் வருகைக்குப் பின்னரே ஒதுக்குவதா இல்லையா என்பதைத் தெரிவிக்க முடியும் எனவும் தனக்கு கூறப்பட்டதாத் தெரிவித்த ஹரிஹரன் அதன் பின்னர் ஏகாம்பரம் மைதானம் மற்றும் உட்துறைமுக வீதிச் சிறுவர் மைதானம் ஆகியவற்றையும் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததாகத் தெரிவித்தார்.

அதன் பின்னர் கடந்த 15ம் திகதி திருகோணமலை நகரசபைக்கு வழங்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய தியாகிகள் மண்டபம் ஒதுக்கித் தரப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர் இத் தியாகிகள் மண்டபமும் திருத்த வேலைகள் நடைபெறும் இடமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

## த.தே.கூ....

இந்த முறையும் ஒரு ராஜபக்சவை வீழ்த்தி இன்னுமொரு ராஜபக்சவை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு தமிழ் மக்களுடைய வாக்கு பலத்தை பயன்படுத்த கூடாது. அப்படிப்பட்ட ஒரு ஆட்சிமாற்றம் தமிழ் மக்களுக்கு தேவையில்லை.

உண்மையிலேயே மகிந்த ராஜபச்சவின் சித்தாந்தங்களை முற்றுமுழுதாக நிராகரித்து தமிழ் மக்களுக்கு நலன் கொடுக்கக் கூடிய வகையிலே ஒரு புதிய ஆட்சி வரப்போவதென்றால் எங்களுடைய ஆதரவினை முற்றுமுழுதாகக் கொடுக்கலாம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

ராஜபக்சவை வீழ்த்திய மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இருந்த கூட்டாட்சி ராஜபக்சவை விட தீவிரமாக சிங்கள தேசிய இனத்தின் நலன்கள் என்ற கோணத்தில்தான் தமிழ் மக்களுடைய விவகாரங்களை அனுகுவார்கள் என்ற வாக்குறுதியினை கொடுத்து தென்னிலங்கையில் ஆட்சிக்கு வந்தது.

ஆனால் இன்று கவலை என்னவென்றால் ஆட்சி மாற்றம் பெரிய மாற்றத்தினை கொடுக்கும் என்று நம்பிக்கை கொடுத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு வேலைத்திட்டத்தினை முன்னெடுத்து, மிகப் பெரிய அளவில் அந்த ஆட்சிமாற்றத்திற்கு தமிழ் மக்களை பங்களிக்க செய்தும் இன்று ஆட்சியில் இருந்து துரத்தப்பட்ட

## களிமண்....

இரா.ஸ்ரீஞானேஸ்வரனும் இருதயபுரம் மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்தனர். இருதயபுர ஆலயப் பங்குத்தந்தை வண. அடிகள் அன்று தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது இருதயபுரம் கிராந்திமுனை கிராமத்திற்கும் கிராந்திமுனை ஆற்றுக்கும் இடையே இயற்கையாக உருவாகியிருந்த மண் அணையே தற்போது அகழப்பட்டு செங்கல் உற்பத்திக்கு பயன்படுத்தப் -படுவதாகத் தெரிவித்த மக்கள் இயற்கை அணை இல்லாதொழிக்கப்பட்டால் மழை காலங்களில் கிராந்திமுனை ஆற்று நீர் கிராந்தி முனைக் கிராமத்திற்குள் பாயும் அபாயம் எழுந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். அத்துடன் பெக்கோ இயந்திரம் மூலம் மண் அகழப்படுவதால் உருவாகும் குழிகள் நீர் நிறைந்து காணப்படும் நாட்களில் பெரும் ஆபத்தை உருவாக்கக் கூடியதாக இருப்பதுடன் முதலைகளின் வாழ்விடமாகவும் மாறிவிடும் அபாயம் இருப்பதைத் தெரிவித்தனர். இதனையடுத்து உடனடி நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகத் தெரிவித்த அணியினர் அதற்கான முதற் கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு -ள்ளனர்.

## 2016ல்....

மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் விளக்கமளித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அரசியல் பயணத்தை முடிக்க விரும்புகிறது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் தமது அரசியல் பயணத்தை இப்பொழுது தான் ஆரம்பித்துள்ளோமென்று கூறுகிறார்கள். எம்மைப் பொறுத்தவரை எமது அரசியல் பயணத்தை தொடர்ந்தும் நீடிக்க முடியாது. எமது அரசியல் பயணத்தை முடிக்க விரும்புகிறோம். தொடர்ந்தும் நீட்டிக்கொண்டுபோக நாம் விரும்பவில்லை.

வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் நடைபெறவுள்ள தேர்தலில் உயர்ந்த வெற்றியொன்றை கூட்டமைப்புக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும். அவ்வாறு தருவார்களானால் 2016ம் ஆண்டுக்குள் எமது மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றை கண்டே தீருவோம். அதற்கு மக்கள் ஆதரவு எமக்கு வேண்டும்.

நடைபெறவுள்ள தேர்தல் மிக முக்கியமானதாகும். இந்த தேர்தல் மூலம் ஏற்படும் விளைவுகள் எதிர்காலத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். இதனை எமது அரசியல் பயணத்தில் முக்கியமான மைல் கல்லாக கருதவேண்டும். யுத்தம் முடிந்த பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் கிழக்கு மாகாணசபை தேர்தலும் வட மாகாண சபை தேர்தலும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை இந்த மாதம் இறுதி வாரத்தில் வெளியிடவுள்ளோம். அதில் எமது அரசியல் இலக்கு உடனடித் தேவைகள் தமிழ் மக்களின் நிலைப்பாடுகள் அபிலாசைகள் தொடர்பில் தெளிவாக கூறுவோம். எங்களைப் பொறுத்தவரை நாம் ஒரு திரமான வெற்றியைப் பெறவேண்டும். எமது இலக்கு 20 ஆசனங்களாகும் என்றார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## யேர்மனிய ஆதரவு யாருக்கு!

யேர்மனியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஆதரவாக நடைபெற்று வரும் மக்கள் கலந்துரையாடலின் வரிசையில் ஞாயிற்றுக்கிழமை Hannover நகரில் மக்கள் கலந்துரையாடல் நடைபெற்றது , இச் சந்திப்பில் தாயகத்தில் நிலவும் சமகால அரசியல் நிலைமையை விளக்கியதோடு எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியத்தை நிலை நிறுத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே தமிழ் மக்களின் தெரிவாக அமையவேண்டும் என்பதையும் வலியுறுத்தப்பட்டது .இக் கலந்துரையாடலில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு இணையவழி ஊடாக பிரித்தாணியாவில் இருந்து கலந்துகொண்ட ஊடகவியாளர் திரு கோபி அவர்கள் விளக்கம் கொடுத்ததோடு , தாயகத்தில் தமிழ் மக்களின் விடுதலையை நோக்கிய பயணத்தில் தேவைப்படும் மாற்றுத் தலைமை ஒன்றின் தேவையை சிறப்பாக எடுத்துரைத்தார் .



## விமான விபத்து கணப்பொழுதில் தடுப்பு

சுவிஸின் சூரிச் விமான நிலையத்திலிருந்து பயணிகளுடன் சென்ற விமானம் ஓடுதளத்திலிருந்து மேலே கிளம்பிய சில நிமிடங்களில் விமானம் சென்ற பாதையில் எதிர்பாராமல் சிறிய ரக விமானம் ஒன்று குறுக்கிட்டுள்ளது.

சிறிய ரக விமானத்தில் வந்த விமானிகள் பயணிகள் விமானத்தை கவனிக்க தவறியுள்ளனர். ஆனால், ஆபத்தை உணர்ந்த பயணிகள் விமானத்தின் விமானிகள் அவசரகால ஒலியை எழுப்பியுள்ளனர். இந்த ஒலியை கேட்ட சிறிய ரக விமானம் சட்டென பாதையை மாற்றியதால், கண நேரத்தில் பெரும் விமான விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

சூரிச் விமான நிலையத்திற்கு அருகே அனுமதி இல்லாமல் சிறிய ரக விமானங்கள், பாராசூட்கள், கிளைடர்கள் என அடிக்கடி பறந்து செல்வது வாடிக்கையாகி விட்டது. இது பயணிகள் விமானத்திற்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என ஏற்கனவே சூரிச் விமான போக்குவரத்து அதிகாரிகளின்




## சீனாவிற்கு ஐ.நா எச்சரிக்கை




சட்டத்தரணிகளை முடக்கும் நடவடிக்கைகளை சீனா கட்டாயம் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

சீனாவில் கடந்த வாரத்தில் 177 சட்டத்தரணிகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் தடுத்து வைக்கப்பட்டதாவும் அல்லது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. இவ்வாறான நடவடிக்கை ஐநாவின் மனித உரிமைகள் பிரகடனம், சட்டத்தரணிகளின் பங்களிப்பு தொடர்பான ஐநாவின் அடிப்படை விதிமுறைகள் மற்றும் சீனாவின் குற்ற நடத்தை விதிகளை மீறும் வகையில் அமைந்துள்ளதாக ஐநாவின் மனித உரிமைகள் தொடர்பான ஐந்து சுயாதீன நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். தேசிய பாதுகாப்பு மற்றும் ஸ்தீரத்தன்மையை பேணும் வகையில் 2012 ஆம் ஆண்டில் இருந்து ஜனாதிபதி ஷி ஷின்பிங்கின் நிர்வாகம் சிவில் சமூகத்தின் மீதான கட்டுப்பாடுகளை கடுமையாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தந்தையினால் 10 வயதில் கர்ப்பம்

பிரேசில் நாட்டில் பள்ளி ஒன்றில் படித்து வரும் பத்து வயது சிறுமி ஒருவர் தனக்கு கடும் வயிற்று வலி ஏற்பட்டுள்ளதாக ஆசிரியரிடம் கூறியுள்ளார். இதையடுத்து அந்த சிறுமி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் சிறுமி 7 மாதம் கர்ப்பமாக இருப்பதாக தெரிவித்துள்ளார். பின்னர் அந்த சிறுமி குறைபிரசவத்தில் குழந்தை பெற்றதாகவும் தாயும் குழந்தையும் தீவிர கண்காணிப்பில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக காவல்துறையினர் நடத்திய விசாரணையில் சிறுமியுடைய தாயின் முன்னாள் கணவரால் அவர் கற்பழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த சம்பவத்தை பற்றி யாரிடமாவது கூறினால் தனது தாய் மற்றும் சகோதரனை கொன்றுவிடுவதாக அவர் மிரட்டியதாகவும் சிறுமி தெரிவித்துள்ளார்.

## நீராடச் சென்று 27வர் பலி

ஆந்திரா கேதாவரி ஆற்றில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற புஷ்கரம் விழா கூட்ட நெரிசலில் சிக்கி 27 பேர் பலியானதுடன் 29 பேர் காயமுற்று வைத்திய-சாலையில் அனுமதிக்கப்-பட்டுள்ளனர். 12 ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் கோதாவரி புஷ்கரம் விழா ராஜமுந்திரியில் நடைபெற்றது.

12 நாட்கள் தொடரும் இவ்விழாவின் முதல் நாளன்று கோதாவரியில் புனித நீராட கோடிக் கணக்கான பக்தர்கள் கடும் கூட்டத்திற்கு இடையே ஆற்றில் நீராடினர். பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அதிக சன நெரிசல் காரணமாக உயிரிழப்புகள் ஏற்பட்டன.



## ரோமானிய பிரதமர் மீது ஊழல் குற்றச்சாட்டு



ரோமானிய பிரதமர் விக்டர் பொன்தா மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அவர் மோசடி, வரி ஏய்ப்பு, லஞ்சம் போன்ற குற் றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளார். 2012 ஆம் ஆண்டு பிரதமராக பதவியேற்பதற்கு முன்னர் சட்டத்தரணியாக சேவையாற்றிய கால கட்டத்திலேயே அவர் இந்தக் குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் தன் மீதான குற்றச்சாட்டுகளுக்கு பொன்தா மறுப்புத் தெரிவித்துள்ளார். அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆளும் சமூக ஜனநாயக கட்சித் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்திருந்தார். எனினும் பிரதமராக தனது கடமைகளைத் தொடரப் போவதாக அவர் தெரிவித்திருந்தார்.

## ஒபாமா - செய்தியாளர் முறுகல்

ஈரான் நாட்டுடனான அணு ஆயுத ஒப்பந்தம் தொடர்பான செய்தியாளர் சந்திப்பில், பிரபல செய்தி நிறுவனத்தின் செய்தியாளரான மேஜர் காரெட், "ஈரானுடனான பேச்சுவார்த்தையின் போது அந்த நாட்டு சிறையில் வாடும் 4 அமெரிக்கர்கள் விடுதலை தொடர்பாக ஏன் பேச்சு நடத்தவில்லை?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.


இதற்கு பதிலளித்த ஒபாமா, "முட்டாள்தனமாக பேசாதீர்கள். இதுபோன்ற விடயங்கள் பற்றி நீங்கள் இன்னும் நன்றாக தெரிந்துக்கொள்ள வேண்டும். இதன்போது 4 அமெரிக்கர்கள் விடுதலைப்பற்றி பேசினால், அவர்கள் அதை ஒரு கேடயமாக பயன்படுத்தி பல சலுகைகளை கேட்பார்கள். அதை தவிர்க்கும் பொருட்டே அந்த விடயத்தை நாங்கள் எழுப்பவில்லை. ஆனால், அங்கு சிறையில் வாடும் 4 பேரையும் மீட்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன" என்று கூறியுள்ளார். ஒபாமா இவ்வாறு நடந்துகொண்டது செய்தியாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## 3 வயது சிறுமி 15 வயதால் பாலியல் சித்திரவதை

தென் ஆப்பிரிக்காவின் ஜொகன்ஸ்பெர்க் பகுதியில் அப்பகுதியை சேர்ந்த பெண் ஒருவர் அருகில் உள்ள ஒரு வீட்டில் தனது மூன்று வயது குழந்தையின் அழுகை சத்தம் கேட்டதையடுத்து ஓடி சென்று பார்த்துள்ளார். இந்நிலையில் வீட்டின் கதவு உள்பக்கமாக பூட்டப்பட்டிந்ததால் கதவின் துளை வழியாக பார்த்துள்ளார். அவரது 3 வயது மகளை 15 வயது சிறுவன் ஒருவன் கற்பழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளான். தாய் எவ்வளவோ முயன்றும் கதவை திறக்க முடியாமல் போயுள்ளது. பின் அந்த கொடூர தாக்குதலுக்கு பிறகு கதவை திறந்து சிறுவன் வெளியே ஓடிசென்றுள்ளான். சிறுமியின் தாய் உள்ளே சென்று பார்த்த போது இரத்த வெள்ளத்தில் கிடைந்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சிறுவனுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களிமண் அகழ்வினால் அழிவை எதிர்கொள்ளும் இருதயபுரம்!



இருதயபுரம் கிராமத்தில் களிமண் அகழ்வு தொடர்வதால் அங்கு வாழும் தமிழ்க் கிராம மக்கள் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகத் தெரிய வந்துள்ளது. 2012ம் ஆண்டில் களிமண் அகழ்வு ஆரம்பித்ததாகவும் பின்னர் நடப்பு ஆண்டின் பெப்ரவரி மாதம் முதல் அகழ்வு நிறுத்தப்பட்டதாகவும் தெரிவித்த மக்கள் மீண்டும் அகழ்வு ஜீன் 6ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு முழு வீச்சில் நடைபெறுவதாகத் தெரிவித்துள்ளனர்.

இருதயபுரத்தில் வாழும் தமிழ் மக்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கும் இந்த நடவடிக்கையினைத் தடுத்து நிறுத்துவதற்காக மக்கள் விடுத்த வேண்டுகோளையேற்று கடந்த 14ம் திகதி பாலையூற்று பங்குத் தந்தையாக வண. மதுராங்கன் குரூஸ் அவர்களும் மலைமுரசின் ஆசிரியரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்றத் தேர்தலின் பிரதம வேட்பாளருமான 21

## "சவால்களை எதிர்கொள்கின்றோம்"

### மாவட்ட அமைப்பாளர் திரு. ஹரிஹரன்



அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டத்தை திருகோணமலையில் நடாத்துவதற்கு உரிய இடமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு கடுமையான பிரயத்தனத்தை மேற்கொள்ளும் நிலை உருவாகியிருந்ததாக அக்கட்சியின் மாவட்ட அமைப்பாளர் திரு. ஹரிஹரன் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

இன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நடுவப்பணியகமானது திருகோணமலை அரசடிச் சந்தியில் திறந்து வைக்கப்படுவதைத் தொடர்ந்து பொதுக் கூட்டத்தினை நடாத்துவதற்கான பொதுமுன்றலைப் பெற்றுக்கொள்ள முயற்சித்த போத பல தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. பொதுக் கூட்டத்திற்கான இடத்தை ஒதுக்கித்தருமாறு கடந்த 10ம் திகதி சிவன் கோவில் தேவஸ்தானத்திடம் மேற்கொள்ளப்பட்ட 21

## திரியாயில் யானைக்குப் பலியாகும் மக்கள்

திரியாய் கிராமத்தில் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகி இதுவரையில் ஒன்பது பேர் மரணமடைந்ததுடன், 15 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் என்று அக்கிராம அலுவலர் எஸ்.இராசலிங்கம் தெரிவித்தார்.

நாளாந்தம் அதிகரிக்கும் யானைகளின் தொல்லையை இல்லாமல் செய்ய மின்வேலி அமைத்துத்தருமாறு பல தடவைகள் உரியவர்களிடம் கோரியபோதிலும், அமைத்து தரப்படவில்லை என்றும் கிராமவாசிகள் தெரிவித்தனர்.

திரியாய் மட்டுமன்றி சலப்பையாறு, தென்னமரவாடி, மதுரங்குடா, கள்ளம்பத்த ஆகிய கிராமங்களிலும் யானைத் தொல்லை இருப்பதாக குச்சவெளி பிரதேச செயலாளர் பொன்னம்பலம் தனேஸ்வரன் கூறினார்.

# 2016ல் நிச்சயம் தீர்வு

## சம்பந்தன் சூழுரை!



தமிழ்பேசும் மக்கள் வடக்கு, கிழக்கில் இம்முறை நல்லதொரு வெற்றியை ஈட்டித்தருவார்களேயானால் 2016ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கான தீர்வை நிச்சயம் பெற்றுத்தருவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமாகிய இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள தேர்தல் செயல்முறை தொடர்பில் கட்சியின் மாவட்ட கிளைக் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் ⇦

## வான் குடைசாய்ந்ததில் இருவர் பலி



கடந்த வியாழக்கிழமை காத்தான்குடியிலிருந்து கிண்ணியாவை நோக்கி வந்துகொண்டிருந்த டொல்பின் வான் சேருவில வீதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் அதில் பிரயாணம் செய்த மூவரில் இருவர் பலியாகியுள்ளனர். ஒருவர் திருகோணமலை பொது வைத்தியசாலை தீவிர விபத்துப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காத்தான்குடி நூரி பொத்தகக் கடை உரிமையாளர் ஏ.எல்.எம்.அமீர் ஸ்தலத்திலும் கலீல் ஹாஜியார் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட பொழுதும் மரணமாயுள்ளனர்.

## த.தே.கூ வரவேற்ற அரசினால் பயன் என்ன?

# கஜேந்திரகுமார் கேள்வி

தமதமிழ் தேசியக் கூட்டமைப்பு வரவேற்ற புதிய அரசாங்கம் இதுவரையில் தமிழ் மக்களுக்கு எந்த பயனையும் தரவில்லை. மாறாக தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டு துரத்தப்பட்ட மகிந்தவை மீண்டும் ஆட்சி பீடத்தில் ஏற்றவே முனைகின்றது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.



இந்த இக்கட்டான நிலை தொடர்பில் தமிழ் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டிய நிலையில் உள்ளனர் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.கந்தர்மடப் பகுதியில் இன்று வியாழக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 17

## குழு மோதலில் வாள் வெட்டு

திருகோணமலை, புடவைக்கட்டுப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை இரு மீனவர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற கைகலப்பில் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி குச்சவெளி வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

## 05வருட சிறை + 10000 தண்டம்

திருகோணமலை, கும்புறுப்பிட்டி பிரதேசத்தில் 2012ம் ஆண்டு மனைவியை பொல்லால் தாக்கி கொலை செய்த கணவருக்கு கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலை உயர் நீதிமன்றம் ஐந்து வருட கால சிறைத் தண்டனையும் பத்தாயிரம் ரூபாய் தண்டப் பணமும் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

திருகோணமலை கும்புறுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த சோமசுந்தரம் கோகிலன் கடந்த 2012ம் ஆண்டில் தனது மனைவியின் தகாத உறவு காரணமாக தானே அவ்வரை அடித்துக் கொன்றதாக குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org